www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 13 ஆகஸ்ட் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 94

- யுத்தப்பிரகடனமும் இல்லை.
யுத்தநிறுத்தமும் இல்லை.
மக்கள் கொல்லப்படுகிறார்கள்.
- காணாமல் போகிறார்கள்
கௌரவமான தீர்வுமில்லை.
தமிழர்கள் பாதுகாப்புடன் கௌரவமாக
நடமாடவும் முடியவில்லை.
- புலிகள் மீதான சர்வதேச தடைகள்
மஹிந்தவிற்கு மகிழ்ச்சி
- தெற்கில் ஒருமைப்பாடு இல்லை.
ஜே.வி.பி. ஹெல உறுமய குமுறல்.
- விலைகள் கட்டணங்கள் உயர்வு-
வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு
- போதிய சம்பள உயர்வுமில்லை.
வேலை நிறுத்த உரிமைக்கும் தடை.

## "மஹிந்த சிந்தனை" எங்கே செல்கிறது? மக்களுக்கு என்ன வழி!

ஜனாதிபதித் தேர்தல விஞ்ஞாபனத்திற்கு மஹிந்த சிந்தனை எனப் பெயரிட்டு அதில் நாட்டின் சகல நோய்களுக்கும் மருந்தும் நிவாரணமும் இருப்பதாகக் காட்டப்பட்டது. மஹிந்த ராஜபக்ச சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிப்பார் என புகழப்பட்டது. பேரினவாதத்தாலும் உலகமயமாதலினாலும் பீடிக்கப்பட்டுள்ள இலங்கையை பாராளுமன்ற ஆட்சியினுள் மூழ்கி நிற்கும் ஆளும் வர்க்க மனிதர்களால் மீட்க முடியும் என்பது வெறும் கனவாகும். நாட்டை யுத்த அழிவிற்குள் தள்ளிய பேரினவாத சக்திகளுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. ஏகாதிபத்தியத்தை இலங்கைக்கு ஏற்றவாறு வளைக்க முடியாது. அதனூடே தேசிய பொருளாதாரத்தை கட்டவும் இயலாது.

யுத்த முனைப்புகள் ஊக்குவிக்கப்படுகிறது. பாதுகாப்பு என்ற பேரில் கெடுபிடிகள் அதிகித்துள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது கூடத் தெரியாது. கடந்த இரண்டு மாதங்களில் 2000த்திற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காணாமல் போனோரைக் கண்டுபிடிக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொறுப்பாக்கப்பட்டுள்ள போதும் அங்கு வேலைகள் நடக்கவில்லை. அங்கு வேலை செய்யும் அதிகாரிகளுடன் சிங்களத்திலேயே தொடர்பு கொள்ள வேண்டுமாம். யுத்த நிறுத்தத்தை பாதுகாப்பதாக அரசாங்கம் கூறுகிறது. மக்கள் நாளாந்தம் யுத்த நிறுத்த மீறல்களால் கொல்லப்படுகின்றனர். யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பிரகடனப்படுத்தாத யுத்தத்தின் யுத்த மீறல்களையே நாளாந்தம் கணக்கிட்டு பதிவு செய்து வருகிறது. அதுவும் நெருக்கடிக்கு உள்ளாகி செயலிழக்கும் நிலையில் உள்ளது.

அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன்

தொடர்ச்ச 12ம் பக்கம் ➡

## தோட்டத் தொழிலாளர்களுக்கு 350 ரூபா சம்பளம் வழங்க வேண்டும்

### பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கம் தீர்மானம்

அரசாங்கத்துறை தொழிலாளர்களுக்கும் ஏனைய தனியார் துறை தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற வஷேட சம்பள உயர்வுகளோ வருடாந்த சம்பள உயர்வுகளோ தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. தொடர்ந்தும் சம்பள உயர்வுகள் மறுக்கப்பட்டவர்களாகவே தோட்டத்தொழிலாளர்கள் இருந்து வருகின்றனர். இதற்கு அவர்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கொள்ளப்படுகின்ற தொழிற்சங்கத்தலைமைகளும் பொறுப்பேற்க வேண்டும். குறிப்பாக கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இ.தொ.கா, இ.தோ.தொ. சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பன பாரிய பொறுப்பை ஏற்க வேண்டும்.

அத்துடன் தற்போதைய நிலையில் நாளாந்த சம்பளம் குறைந்தது ரூ. 350/= ஆவது இருக்க வேண்டும். அதனை வென்றெடுக்க எல்லா தொழிற்சங்களுடனும் ஐக்கியப்பட்டு செயற்படத் தயாராக இருப்பதாக பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யூலை மாதம் 22 ஆம் திகதி தலவாக்கொல்லையில் கூடிய அச்சங்கத்தின் தேசிய சபைக் கூட்டத்திலும், நிர்வாக சபைக் கூட்டத்திலும் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன. தோட்டத்தொழிலார்களின் நாளாந்த தொழிற்பிரச்சினைகளை தீர்ப்பதில் மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தோட்டத்தொழிலார்களை வர்க்க ரீதியான பலம் வாய்ந்த அரசியல் சகதியாக நிலை நிறுத்துவதற்கு பாட்டாளிவர்க்க புதிய- ஜனநாயக சங்கம் பல வழிகளிலும் செயற்பட வேண்டும்.

பாரம்பரிய தொழிற்சங்கவாதத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளை முற்றாக நிராகரித்து, முதலாளிவர்க்கத்திடம் சரணடையும் வழி முறையையும் நிராகரித்து புரட்சிகர பாதையில் தொழிலாளர்களை அணி திரட்ட வேண்டும். அவர்களை புரடசிகர அரசியல் பாதையில் அணிதிரட்டி வழிநடக்க வைத்தல் வேண்டும்.

தொழிற்சங்க அங்கத்துவத்தை வழங்கும் போதும் ஏனைய தொழிற்சங்கங்களினால் செய்யப்படும் சீரழிவான நடவடிக்கைகளை முற்றாக நிராகரிப்போம். தோட்டத்தொழிற்துறையை தனியார் கம்பெனிகளின் அழிவு நிறைந்த நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்போம்.

தோட்டத்துறையில் மட்டுமன்றி வர்த்தக, கைத்தொழில், தொழிநுட்ப துறைகளிலும் கடைகள் காரியாலயங்களில் வேலைசெய்யும் பலமான தொழிற்சங்கமாக பாட்டளி வர்க்க புதிய-ஜனநாயக சங்கத்தை கட்டி வளர்ப்போம்.

## 1983 இருண்ட யூலையின் சோக நினைவுகள்

1983ம் ஆண்டின் யூலை 25- 27ம் திகதிகள் இலங்கை வரலாறு கண்ட கொடுமையான இன வன்முறையாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், ஜே.ஆர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி. அவரது வழிகாட்டலிலேயே தமிழருக்கு எதிரான சிங்களக் காடையர்களின் கொடூரத் தாக்குதல்கள். சுட்டும் எரித்தும் அடித்தும் வெட்டியும் தமிழர்கள் கொல்லப்பட்டனர். வீடுகள் வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டன. கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் மலையகத்திலும் தமிழர்கள் இனவன்முறைக் கும்பல்களால் அடித்து நொருக்கி அழிக்கப்பட்டனர். உலகமே அதிர்ந்து கொள்ளும்படி வெலிக்கடைச் சிறைச்சாலையின் 52 தமிழ்க் கைதிகள் கோரத்தனமாகக் கொல்லப்பட்டனர். "போதுமா இன்னும் வேண்டுமா" என்ற தொனியிலேயே ஜே.ஆர் ரின் பேச்சுக்கள் அமைந்தன. சிங்கள தேசியத்தின் எழுச்சியே அவ் வன்முறை எனக் கூறி சிங்கள இனவெறிக் காடையர்களுக்கு உற்சாக மொழி பகர்ந்தவர் அந்த அமெரிக்க தாசரான ஜே.ஆர். அவரே இலங்கையின் அதி உன்னதமான ஜனநாயகவாதி என்றும் சிலரால் புகழப்படுபவர். இதே மனிதர்தான் 1977ல் ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்த யூ என். பிக்கு தலைமை தாங்கியவர். 77ன் ஆகஸ்ட் மாதத்தில் அவர் மூட்டிய முதலாவது வன்முறையின் போது "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற வரலாற்றுக் கறைபடிந்த ஃபாசிச சவால் விடுத்து பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையை ஆரம்பித்து வைத்தவர்.

இவ்வாறு தொடங்கப் பெற்று உச்சநிலைக்கு கொண்டு செல்லப்பட்ட பேரினவாத வன்முறையே 1983ன் இருண்ட யூலையின் படுகொலைகளாகும். அதன் விளைவை இன்று முழு நாடும் வேதனையோடும் அவலக்குரல்களோடும் அனுபவித்து நிற்கிறது. ஆனால் இன்றும் பேரினவாத ஒடுக்குமுறையாளர்கள் அந்தக் கொடிய 1983 யூலையின் அனுபவங்களில் இருந்து பாடம் படிக்கவில்லை. அண்மையில் ஹெல உறுமயவின் தலைவரான ரத்தினதேரர் "1983 யூலை இன வன்முறை பெரிய விடயமல்ல" என்று கூறியதன் மூலம் பேரினவாத ஒடுக்கு முறையின் கொடூரத்தை அந்த பௌத்த பிக்கு எவ்வளவுக்கு கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அந்த இருண்ட யூலையின் கொடூரங்கள் தமிழ் மக்களின் வாழ்விலும் இலங்கை வரலாற்றிலும் ஒரு மைல் கல்லாகவும் வரலாற்றுத் திருப்பு முனையாகவும் அமைந்து கொண்டது. அதன் சாதக பாதக நிலையினை படிப்பினையாகக் கொள்ள பேரினவாதிகள் தயாராக இல்லை.

## வடக்கு கிழக்கில் இரத்த வெள்ளம் தெற்கில் பேரினவாத வெறிக் கூச்சல்

நான்கு வருடங்களுக்கு முன்பு அரசாங்கம் புலிகள் இயக்கம் ஆகிய இரு தரப்புகளாலும் ஒப்பமிட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு- யுத்த நிறுத்த ஒப்பந்தம் இன்னமும் செல்லும் படியானதாகவே இருந்து வருகின்றது. ஆனால் எழுத்தினாலான அக் கடதாசியில் கூறப்பட்ட விடயங்கள் வெறும் வசனங்களாகவே இருக்கின்றன. யுத்த நிறுத்த மீறல்கள் ஒப்பந்த விரோத செயற்பாடுகள் இரு தரப்பாலுமே முன்னெடுக்கப்படுகின்றன. அவை நியாயப்படுத்தப்படவும் செய்கின்றன. பரஸ்பரக் குற்றச் சாட்டுக்களும் முறைப்பாடுகள் அறிக்கைகள் எதிர் அறிக்கைகளும் விடப்பட்டே வருகின்றன. ஆனால் தினம் தினம் வடக்கு கிழக்கில் உயிர்கள் இரத்த வெள்ளத்தில் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதனைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் சார்பாக பலதரப்புகளில் இருந்தும் விடுக்கப்பட்ட வேண்டு கோள்கள் எதுவும் சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் எவரினதும் செவிகளில் ஏறியதாக இல்லை. "முற்பகலில் செய்தவை பிற்பகலில் விளையும்" என்பதற்கு இணங்க மக்கள் பேசவும் முடியாது பேசாமல் இருக்கவும் முடியாது என்ற இக்கட்டான நிலையில் "பாவம் மக்கள்" என்ற மௌன அனுதாபத்துடன் சாவுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வடக்குகிழக்கின் நிலை இவ்வாறானால் தெற்கில் மக்கள் ஏதோ நிம்மதியாக இருக்கிறார்கள் என்று கூற முடியாது. அங்கும் அச்சம் பீதி பதற்றம் விலைவாசி உயர்வு வாழ்க்கைச் செலவு- நெருக்கடிகளும் தான். அவற்றிடையே ஜே.வி.பி. ஹெல உறுமய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆகியவற்றின் பேரினவாதக் கூச்சல் தினம் தினம் வெளிவந்து கொண்டே இருக்கிறது. அரசாங்கமும் ஜனாதிபதியும் கூட இவற்றுக்கு அப்பாற்பட்டு நிற்கவில்லை. சமாதானத்தை விரும்பும் மக்கள் யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வை விரும்புகிறார்கள். புலிகள் இயக்கத்துடன் பேசி ஒரு தீர்வும் இணக்கமும் அதன் அடிப்படையில் சமாதானம் அபிவிருத்தி ஏற்பட முடியும் என நம்புகிறார்கள்.

ஆனால் இவற்றுக்கு நேர் எதிராக ஜே.வி.பி ஹெல உறுமய போன்ற பேரினவாத சக்திகள் இனவெறிக் கூச்சல் இடுகிறார்கள். புலிகள் இயக்கத்தை தடைசெய்தல் நோர்வேயின் அனுசரணையை நிராகரித்தல் வடக்குகிழக்கு மாகாணங்களைப் பிரித்தல், ஒற்றையாட்சியை வற்புறுத்தல், பேச்சுவார்த்தைக்கு

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு கிழக்கைப் பிரிப்பதும் திருகோணமலையை அபகரிப்பதும் பேரினவாதிகளின் திட்டமாகும்.

1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாக அலகாக மாற்றம் பெற்றது. 13வது அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் இவ் வடக்கு கிழக்கு இணைப்பு நடைமுறைக்கு வந்து பதினெட்டு வருடங்களாகின்றன. மேற்படி அரசியலமைப்புத் திருத்தம் தற்காலிக இணைப்பு என்று கூறிக் கொண்ட போதிலும் இன்றுவரை அது நிரந்தரமாகிய ஒன்றாகவே இருந்து வருகின்றது. அதற்கு காரணம் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசமாக இருந்து வந்துள்ள யதார்த்தமேயாகும். இவ் வடக்கு கிழக்கு இணைப்பின் மூலம் திருகோணமலை நிர்வாக ரீதியில் முக்கியத்துவம் பெறும் நகரமாகிக் கொண்டது. ஏற்கனவே இயற்கைத் துறைமுகமும் அதனையொட்டிய தேவைகள் வசதிகள் அபிவிருத்தி நோக்கிய பாதையில் திருகோணமலை முக்கியத்துவமுடைய நகரமாகியது. அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண சபையும் திருகோணமலையில் இயங்கி வந்த சூழலில் மாகாணசபை நிர்வாகங்களுக்கு உட்பட்ட அரச நிறுவனங்களும் அங்கு நிலைகொண்டன.

ஆனால் மேற்படி வடக்கு கிழக்கு மாகாண இணைப்பும் திருகோணமலை நிர்வாக மையமாக இருப்பதும் பேரின்வாதிகளுக்கு உள்வாங்க முடியாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இப்பொழுது மட்டுமன்றி கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு நாகரீகமான பேரினவாதியான டி.எஸ்.சேனநாயக்க முப்பதுகளின் பிற்கூறிலேயே அத்திபாரமிட்டு செயல்படத் தொடங்கி விட்டார். அதுவே தேசிய இனப்பிரச்சினையின் தொடக்கப் புள்ளிகளில் ஒன்றாகவும் அமைந்தது.

மட்டக்களப்பை அண்டிய பிரதேசங்களிலும் திருகோணமலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக திருகோணமலையில் நகர அபிவிருத்தி என்ற பெயரிலும் புற நகர்ப் பகுதிகளில் குடியேற்றங்கள் என்ற ரீதியிலும் திட்டமிட்ட செயற்பாடுகள் இடம்பெற்றன. இவை தூரநோக்கிலான பேரினவாத உள் நோக்கங்களுடனேயே முன்னெடுக்கப்பட்டன. இவ் விடயத்தில் மாறி மாறிப் பதவிக்கு வந்த இரண்டு அரசாங்கங்களும் போட்டி போட்டு செயல்பட்டு வந்துள்ளன.

சுற்றுப்புறப் பகுதிகளில் விவசாயக் குடியேற்றங்கள் மூலம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் இடம் பெற்ற அதேவேளை திருகோணமலை நகரத்தில் அரசாங்க தனியார் துறை வேலை வாய்ப்புக்ளிலும் குடியிருப்புகளிலும் சிங்கள மயப்படுத்தும் உள்ளார்ந்த திட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. துறைமுக வேலை வாய்ப்புகள், கடற்படை, விமானப் படை வேலை வாய்ப்புகள் போன்றவற்றில் சிங்கள தமிழ் பாகுபாடு காட்டப்பட்டு தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர் அல்லது எண்ணிக்கையில் குறைக்கப்பட்டனர். இதற்கு வசதியாக அரசாங்க அதிபர் தொட்டு உயர் அதிகாரிகள் வரை இனவாத நிலைப்பாடு கொண்ட சிங்களவர்களே தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்க தொன்றாகும். இன்று திருகோணமலையில் அரசாங்க அதிபராக முன்னாள் ராணுவ அதிகாரியாக இருந்தவரே பதவி வகிக்கின்றார். அவ்வாறே வடக்கு கிழக்கு ஆளுனராக திருகோணமலையில் ஒரு முன்னாள் சிங்கள கடற்படை உயர் அதிகாரியே கடமை புரிந்து வருகிறார்.

இவர்கள் சட்டபூர்வமான நிர்வாக நடவடிக்கைகள் மூலமாக பேரினவாதத் திட்டங்களையே முன்னெடுத்து வந்துள்ளனர். இவை இன ஒடுக்குமுறை என்ற தளத்திலே இடம் பெற்றும் வருகின்றன.


அதே வேளை சந்தர்ப்பங்கள் வரும் போதெல்லாம் பேரினவாத வெறியர்களை ஏவி விட்டு திருகோணமலையின் தமிழ் மக்கள் மீது கொடிய வன்முறைகளை நடாத்தியும் வந்துள்ளனர். அவ்வறான திட்டமிட்ட தமிழர் மீதான இனவெறிக் குண்டர்களின் வன்முறை சில மாதங்கள் முன்பு பட்டப் பகலிலேயே நடாத்தப்பட்டது. அண்மையில் சம்பூரில் தொடச்சியாக நடாத்தப்பட்ட ராணுவத் தாக்குதல்களால் பாரம்பரியமாக வாழ்ந்த வந்த தமிழ் மக்கள் எல்லாவற்றையும் கைவிட்டு இந்தியாவிற்கு தப்பிச் சென்ற அவலநிலையைக் காண முடிந்தது. பலர் மன்னாரில் புத்தளத்தில் அகதி முகாம்களில் இருந்து வருகின்றனர்.

ஒரு புறம் வடக்குகிழக்கில் பிரகடனப்படுத்தாத யுத்தமும் படுகொலைகளும் பழிக்குப்பழி என நிகழ்ச்து வருகின்றன. மறுபுறத்தில் ஜே.வி.பி, சிஹல உறுமய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்பன வடக்கு கிழக்கைப் பிரித்து தனித்தனி நிர்வாக அலகுகள் ஆக்குவதற்கு செயலாற்றுகின்றன. சுனாமி நிவாராணத்திற்காக சந்திரிகாவால் கொண்டு வரப்பட்ட பொதுக்கட்டமைப்பு என்பதை நீதிமன்றம் மூலம் தடுத்து ருசி கண்டது ஜே.வி.பி. அதே வழியில் இப்போது வடக்கு கிழக்கை பிரித்து நிரந்தரமாக்குமாறு தீர்ப்பு வழங்க வேண்டும் என நீதி மன்றத்தில் நிற்கிறது ஜே.வி.பி.

வடக்கு கிழக்கில் குறிப்பாகத் திருகோணமலையில் சாதாரண தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களிடையே இனவாதத்தை தூண்டி ஒருவரோடு ஒருவரை மோத வைத்து பழிக்குப்பழி என்ற பாதையில் இரத்த வெள்ளத்தை ஓடவைப்பதில் இன வெறியர்கள் செயலாற்றி வருகின்றனர். புலிகளைப் பயங்கரவாதிகள் எனக்கூறிக் கொண்டு அவர்களை எதிர்ப்பதாகக் காட்டி கிழக்கின் குறிப்பாகத் திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களை விரட்டுவதை நோக்காகக் கொண்டே ஜே.வி.பி ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்பன வெறித்தனத்துடன் செயல்பட்டு வருகின்றன. இவர்களே கிழக்கைப் பாதுகாக்கும் இயக்கம் ஒன்றையும் முன்னெடுத்தும் வருகின்றனர்.

வடக்கு கிழக்கைப் பிரிப்பதும் திருகோணமலையை முற்றுமுழுதான சிங்களப் பேரினவாத ஆதிக்கம் கொண்ட நகரமாக மாற்றுவதும் அவர்களது திட்டமாகும். இதற்கு வடக்கு கிழக்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள், இன ஐக்கியத்தையும் சமாதானத்தையும் இயல்பு வாழ்வை விரும்பும் சாதாரண சிங்கள மக்களும் இதற்கு ஆதரவாக இருக்க மாட்டார்கள்.

திருமலை ம. குகன்




# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## வர்க்கமும் வானலையும்

மஹாராஜா நிறுவனம் உலகமயமாக்கலுக்கும் தனியார்மயமாக்கலுக்கும் பொருளாதார மறு சீரமைப்புக்கும் தமது பங்களிப்பை வழங்கும் வகையில் ஒவ்வொரு இரவும் ஆங்கிலச் செய்தி அறிக்கைக்குப் பின் கலாநிதி ஹர்ஷா டி சில்வா என்கிற "பொருளியல் நிபுணரைக்" கூலிக்கு அமர்த்தியுள்ளது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் தனியார் மயமாக்கலும் திறந்த பொருளாதாரமும் உலகமயமாதலுடன் ஒட்டி நடப்பதுமே வழியென்று தினமும் ஒவ்வொரு பொருளாதாரப் பிரச்சனை பற்றிப் பேசித் தனது அறிவின் வரையறையை மேலும் தெளிவாக்கி வருகிறார் அந்த நிபுணர்.

அவருடைய புரட்டுக்களை அம்பலப்படுத்தக் கூடியளவுக்கு பொருளியல் அறிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மஹாராஜா நிறுவனம் அதற்கு இடம் தருமா? உலகமயமாதல் பற்றிய மயக்கங்கள் மூன்றாம் உலகில் வேகமாகக் கலைந்து வருகிறபோது இங்கே உள்ளூர்ப் பெரு முதலாளிகள் அதற்கு முட்டுக் கொடுக்கிறார்கள். இது ஏன் அது தான் வர்க்க பாசம்.

## ஏனிந்தத் தயக்கமும் தடுமாற்றமும்?

இஸ்ரேலின் விமானங்களும் தாங்கிகளும் பலஸ்தீனத்தில் தாக்குவதும் போதாமல் இப்போது லெபனானிலும் தாக்குகின்றன. போராளிகளின் சிறு வெற்றிகட்கு முகங்கொடுக்க இயலாமல் அப்பாவி மக்களை இஸ்ரேல் கொன்றழிக்கிறது. அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கிற முஸ்லீம் தலைவர்கள் எல்லாரும் என்ன செய்கிறார்கள்? இஸ்ரேலைக் கண்டித்துப் பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற ஏன் தயங்குகிறார்கள். இஸ்ரேலை எதிர்ப்பது என்றால் அமெரிக்காவை எதிப்பது என்று தான் கருத்து. அதனாலேயே தான் இவர்கள் தயங்குகிறார்கள். பெரும்பாலான அரபு நாடுகளின் தலைவர்கள் இஸ்ரேலை எதிர்க்கத் தயங்குவது அவர்கள் தமது மக்களின் உண்மையான பிரதிநிதிகள் அல்ல என்பதாலேயே என்பது போல நமது முஸ்லிம் தலைவர்களும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளல்ல என்று சொல்லாமா?

## திருபுவாதி திரிப்புவாதிதான்

சில வாரங்கட்கு முன்பு ஹற்றனில் நடந்த ஒரு கருத்தரங்கிற் பேசும் போது அமைச்சர் டீயு குணசேகர எல்லாருக்கும் தமிழும் சிங்களமும் கற்பிக்கும் தேவையை வற்புறுத்திப் பேசியிருந்தார். அதை விளக்க கொழும்பில் அரசாங்கத்திற்குத் தமிழில் எழுதப்படுகிற கடிதங்கட்குச் சிங்களத்தில் மறுமொழி அனுப்பப்படுவது போல திருகோணமலை கந்தளாயப் பகுதிகளில் சிங்களத்தில் எழுதப்படும் கடிதங்கட்கு தமிழில் மறுமொழி அனுபப்படுவதாகக் கூறியதாக "விஜய்" வார ஏட்டில் செய்தி வெளியாகயிருந்தது. இது போல வெட்கக்கேடான திரிப்பு உண்டா என்று கேட்கத் தோன்றுகிறதா? அல்லது அமைச்சர் எந்த உலகத்தில் வாழுகிறார் என்று கேட்கத் தோன்றுகிறதா? இது திரிவுவாதிகள் தேசிய ஒற்றுமை மாநாடு என்ற பேரில் 31 வருடங்கட்கு முன்பு நடந்த கூத்தில் விட்ட புலுடாக்களை அறிந்தவர்கட்கு இது வியப்பளிக்காது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகத் தமிழர்கள் மீது தான் பழியைப் போட்டனர். சிங்களப் பேரினவாதிகளுடன் கூட்டுச் சேர அது வசதியாக இருந்தது. அவர்களுக்கு அது வயிற்றுப்பிழைப்பு. ஆனால் அமைச்சராயிருந்த துடாவை இப்போது டியூ குணசேகர போன்ற திரிபுவாதப் பேரினவாதிகளுக்குப் பின்னால் வால் பிடித்துத் திரிகிற முன்னாள் இடதுசாரிகளும் பிற உதிரிகளும் என்ன செய்கிறார்கள்? அவர்களுக்குக் கிடைக்கிற எலும்புத் துண்டுகளின் மிச்சங்கட்காக இவர்கள் அலைகிறார்களா?

## ராம் ராஜ்யம்

"ஃபுறொன்ட்லைன்" என்கிற "ஹிந்து" பத்திரிகை நிறுவனத்தின் இடதுசாரித தோற்றங்கட்டுகிற ஏட்டின் யூலை இதழ் ஒன்றில் இலங்கையின் அமைதி சீர்குலைவதைப் பற்றிய சில ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. ஒன்று "ஹிந்து"வின் கொழும்பு நிருபரும் எசமான் ராமை மிஞ்சிய தமிழர் விடுதலை எதிர்ப்பாளருமான வி.எஸ்.சம்பந்தன் எழுதியது. எதிர்பார்க்கக் கூடிய விதமாக முழுப்பழியும் விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டிருந்தது. இன்னொன்று பேராசிரியர் ஜயதேவ உயங்கொட எழுதியது இரண்டு தரப்பிலும் பிழையிருப்பதாக உலக நாடுகள் கூறுவதை விரிவுபடுத்தி எழுதிய அதேவைளை அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் நடந்ததைத் தெளிவுபடுத்தத் தவறியுள்ளதால் வாசகர்கள் அறிய வேண்டிய முக்கியமான உண்மைகள் சஞ்சிகையில் வெளி வர வாய்ப்பில்லாது போய்விட்டது. பாலித கோஹணவின் நேர்காணல் அவரது வழிமையான பேரினவாத மழுப்பலாகவே அமைந்துள்ளது. இன்னொரு கட்டுரை அகதிகளின் நிலை பற்றியது.

உண்மையில் தமிழ் மக்கள் இந்தப் போரில்லாத போர்ச் சூழலிற்படுகிற அவலங்கள் பற்றி எவருக்குமே அக்கறை இல்லை என்பது தான் நாம் காணக் கூடிய உண்மை. தமிழகத்தில் ஈழத் தமிழர் மீதான அனுதாப அலை எழாமல் மறிக்க ராம் தன்னாலான பங்கை ஆற்றி வருகிறார் என்பதில் ஐயமில்லை.

## அவர் இப்போது ஸ்தாலினிய வாதியா?

தேசிய முதலாளி வர்க்கம் என்ற கருத்தைக் கம்யூனிஸ்ற் இயக்கத்தினர பயன்படுத்திய போது அப்படி ஒரு வர்க்கமே இல்லை. எல்லாரும் ஒரே முதலாளி வர்க்கமே என்றும் சிறு முதலாளிகளையே தேசிய முதலாளிகள் என்று கம்யூனிஸ்ற்றுக்கள் (அவர்களது அகராதியில் ஸ்தாலினிய வாதிகள்) அழைக்கின்றனர் என்று சமசமாஜக் கட்சியின் வழி வந்த அனைவருமே 1980வரை கூடச் சொல்லிவந்தார்கள். கலாநிதி விக்கிரமபாகு கருணரத்தின என்கிற நவசமாஜக் கட்சிப் பிரமுகர் வெளியிட்ட ஜே. வி. பியின் 2005ம் ஆண்டு வேலைத்திட்டம் பற்றி எழுதி வெளியிட்ட சிறு பிரசுரம் ஒன்றைக் காணக் கிடைத்தது. அதில் தாராளவாத தேசிய முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதியாக பண்டாரநாயக்க அடையாளங் காணப்பட்டுள்ளார்.

அதே பிரசுரத்தில் ஜே.வி.பி ஒரு நடுத்தர வர்க்கக் கட்சி சிறு முதலாளித்துவக் கட்சி என்றும் கூறியுள்ளார். நீண்டகாலமாகவே ஜே.வி.பி ஒரு பேரினவாதக்கட்சி என்றும் அடையாளங்கண்டுள்ளார். ஜே.வி.பியை புரட்சிகர கம்யூனிஸ்ற்றுக்கள் 1970 அளவிலேயே அப்படி அடையாளங்கட்டிய போது அதை ஸ்தாலினிய வாதிகளின் குழப்பமான சிந்தனை என்று கூறி ஜே. வி. பி கிளர்ச்சியை ஒரு தரம் வலதுசாரிச் சதி என்றும் பின்பு தீவிர இடதுசாரிகளின் வேலை என்றும் கொல்வின் ஆர்.டி சில்வா குறிப்பிட்டிருக்கிறார். கலாநிதி கருணரத்தின ஜே.வி.பியைக் குளிப்பாட்டி நடுவீட்டில் அமர்த்த நீண்ட காலமாக முயன்றவர். ஜே.வி.பிக்காக புதிய இடதுசாரி முன்னணியைக் குழப்பியவர். இப்போது இது என்ன புதிய ஞானம்? அவரும் ஸ்தாலினியவாதியாகப் பார்க்கிறாரா?


www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# நீதிமன்றத் தலையீட்டால் தொழிற்சங்க உரிமைகளை பறிக்கும் சதி

தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களை அடக்கி ஒடுக்கும்படி கைத்தொழில்களுக்கான தேசிய சபை இலங்கையின் ஜனாதிபதி மஹிந்தி ராஜபக்சவை கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை துறைமுக தொழிலாளர்கள் 10 நாட்களாக வேலை நிறுத்தம் செய்ததால் தொழிலதிபர்களுக்கு ஏற்பட்ட நட்டங்கள் பற்றியும் பெற்றோலியக் கூட்டுத்தாபான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ததினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் பற்றியும் ஜனாதிபதிக்கு அச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.



கொழும்புத் துறைமுகத் தொழிற்சங்கங்கள் நடாத்திய வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஊழியர்கள் துறைமுக வாசலில் திரண்டு நிற்பதை காணலாம்

வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களை சேவையிலிருந்து நீக்கிவிட்டு, படையினரை கொண்டாவது அத்தியாவசிய துறைகளை இயக்க வேண்டும் என அச்சபை கேட்டுக் கொணடுள்ளது.

அதேவேளை துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் உட்பட எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என்று இடைக்கால தடை உத்தரவை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. துறைமுக தொழிலாளர்களின் சங்கங்களுக்கு எதிராகவும் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்துறையை சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் துறைமுக தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் காரணமாக அவரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதாக அடிப்படை மனித உரிமைகள் மீறலுக்கு எதிரான மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அம்மனுவை விசாரணைக்காக ஏற்றுக்கொண்டபோதே உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை வழங்கியுள்ளது.

அத்துடன் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் அவர்களின் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராகவும். துறைமுக நடவடிக்கைகளை சீராகக் கொண்டு நடத்துவதற்கு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்க துறைமுக அதிகாரசபைக்கும் துறைமுகத்திற்கு பொறுப்பான அமைச்சுக்கும் உயர்நீதிமன்றம் கட்டளைப் பிறப்பித்துள்ளது.

ஏற்கனவே துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் துறைமுக அதிகாரசபை தொடுத்த சிவில் வழக்கில் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ரயில்வே தொழிலாளர்களின் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு எதிராகவும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளால் சம்பந்தப்பட்ட தொழிற்துறைகள் நட்டமடைவதாக எடுத்துக் கூறி நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்படுவதும் தடையுத்தரவுகள் பெறப்படுவதும் வழமையாகிவிட்டது.

இதனால் தொழிற்சங்கங்கள் செயற்பட முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன. தொழிற்சங்களின் நடவடிக்கைகள் அவசரகால சட்ட ஏற்பாடுகளின் கீழ் கட்டுப்படுத்தப்படுவதுண்டு. அதாவது சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அத்துறையிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்த கைகளில் ஈடுபடாது தடுக்கப்படுபவர். அப்பிரகடனம் அவசரகாலசட்டத்தின் கீழ் ஜனாதிபதியினால் செய்யப்படும். அதனை மீறி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த போது 1980 யூலை மாதம் வேலைநிறுத்த நடவடிக்கையில் இறங்கிய ஒரு லட்சத்தற்கு மேலான அரசாங்கத்தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். தொழிற்சங்கத் தலைவர்கள் சுடப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

**உலகமயமாதலின் நிகழ்ச்சி நிரலின் கீழான பல்தேசியக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆதரவாக அரசாங்கம், பாராளுமன்றம், நிர்வாகத்துறை செயற்படுவதுடன் நீதிமன்றமும் அவ்வப்போது ஆதரவாக செயற்பட்டுள்ளது. இன்று நீதித்துறை பிரதானமாக ஆதரவளிக்கின்ற நிறுவனமாக மாறப்பட்டுள்ளது.**

தொழிலாளர்கள் மோசமாகத் தாக்கப்பட்டனர். அவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களில் பலர் மீள வேலை வழங்கப்பட்டமையால் தற்கொலை செய்து கொண்டனர்.

அதனை கண்டித்து அரசியல் நடத்தியவர்களில் பலர் இன்று அரசாங்கத்தில் அமைச்சர்களகவும் இருக்கின்றனர். ஜனாதிபதி மஹிந்தவும் அதனை கடுமையாக எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1993 பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தொழிலமைச்சராக இருந்த மஹிந்த தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க தொழிலாளர் சாசனத்தை உருவாக்கினார். அதனை அவரால் சட்டமாக்க முடியாமல் போனது. இப்போது ஜனாதிபதியான பிறகும் அது சட்டமாக்கப் படவில்லை. அவர் அதனை மறந்தே விட்டார்.

அத்தியாவசிய சேவைகளைக் கொண்ட துறைகளில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடு படும் போதும் பொதுமக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாது. தொழிலாளர்களது கோரிக்கை வேலை நிறுத்தத்தில் ஈடுபடாது சூழ் நிலையை ஏற்படுத்தி அத்தியாவசிய தேவைகளை மக்கள் தங்கு தடையின்றி பெற்றுக்கொள்வதை உறுதி செய்வது அரசின் கடமையாகும்.

குறுகிய அரசியல் காரணங்களுக்காக வேலை நிறுத்தத்தை ஆயுதமாகச் சில தொழிற்சங்கங்கள் பயன்படுத்துவதுண்டு. அவ்வாறான சில சூழ்நிலைகளைத் தவிர தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படக் கூடாது.

அவசரகால சட்டச் ஏற்பாடுகளின் கீழ்தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்பட்ட காலம் மாறி தற்போது அரசாங்க நிறுவனங்கள் நீதிமன்றத் தலையீட்டை கொண்டு வேலை நிறுத்தங்களை தடுத்து நிறுத்தி வருகின்றன. அரசாங்க நிறுவனங்களும் தொழில் தருநரும் நீதிமன்றத் தலையீட்டை தவறான முறையில் பெற்றுக் கொள்கின்றனர்.

நீதிமன்றக் கட்டளைக்கு எதிராகச் செயற்படுவது நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றம் என்ற அடிப்படையில் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்த உரிமையை கைவிட வேண்டியிருக்கிறது.

முதலாளிகளுக்கு தொழிலை கொண்டு நடத்துவதற்கான உரிமை போன்று தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதுதொழிலாளர்களின் உரிமை ஆகும். அதனை நீதிமன்ற தடையுத்தரவு பறிப்பதனால் தொழிற்சங்க கட்டளைச் சட்டம் உட்பட போராட்டங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பல தொழிற் சட்டங்களாலும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான உரிமைகளாலும் பயனில்லாத நிலை ஏற்படுகிறது.

இதனால் தொழிற்சங்கங்களினதும் தொழிலளார்களதும் நிலைமை மிகவும் பல வீனமாக்கப்படுகிறது. தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களையும் அடக்கும் நடவடிக்கைகளில் உச்சமாக நீதிமன்ற தலையீட்டை பெறுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இது ஒரு தவறான முன்னுதாரணமாகும்.

இதனால் இன்று இலங்கையின் தொழிலாளி வர்க்கம் என்றுமில்லாதவாறு நெருக்கடிகளை சந்திக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு தொழிலாளர் வர்க்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய ஒரு முக்கிய கட்டத்தில் இருக்கிறது. தொழிற்சங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முதலாளித்துவத்தின் புதிய அணுகுமுறைகள் முறியடிக்கப்பட வேண்டும்.

இன்று, ரயில்வே, துறைமுகம், பெற்றோலியம் போன்ற துறைகளில் வேலைநிறுத்தத்திற்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் படிப்படியாக எல்லா அரசாங்க, பொதுத்துறைகளிலும் தனியார் துறைகளிலும் மேற்கொள்ளப்படலாம். எனவே இலங்கையிலுள்ள அனைத்து தொழிலாளர்களும் ஐக்கியப்பட்டு தொழிற்சங்க ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டும். அதற்கான வழிவகைகள் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

உலகமயமாதலின் நிகழ்ச்சி நிரலின் கீழான பல்தேசியக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆதரவாக அரசாங்கம், பாராளுமன்றம் நிர்வாகத்துறை செயற்படுவதுடன் நீதிமன்றமும் அவ்வப்போது ஆதாவாக செயற்பட்டுள்ளது. இன்று நீதித்துறை பிரதானமாக ஆதரவளிக்கின்ற நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

ஆக இலங்கை அரசின் அனைத்து நிறுவனங்களும் தொழிலாளர்களுக்கு எதிராக செயற்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து தொழிலாளர் வர்க்கம் மீட்கப்படுவது அவசியம். அதே வேளை தொழிலாளி வர்க்கம் அரசியல் ரீதியில் சிந்திப்பதும் சரியான பாதையில் அணிதிரண்டு செயல்படுவது பற்றி ஆலோசிப்பதும் தேவையானதாகும்.

# கண்டதும் கேட்டதும்

-சாந்தன்-

### ரணில் உளவு பார்க்கச் சென்றாரா?

அண்மையில் ரணில் விக்கிரமசிங்கா ஐந்து நாட்கள் இந்தியாவில் தங்கி இருந்தார். சகல தலைவர்களையும் உயர் புள்ளிகளையும் சந்தித்தார். அத்துடன் சாயிபாபாவையும் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றார். ரணில் ஜே.ஆர். வழிவந்த அமெரிக்க விசுவாசி. அப்படி இருக்க டில்லியில் என்ன பேசினார். மகிந்தரைப் பற்றி கோள் மூட்டியதாக ஒரு செய்தி. ரணில் இந்தியாவின் நாடியைப் பிடித்துப் பார்க்கச் சென்றாரா? அல்லது அமெரிக்காவின் உள்நோக்கத்தை எடுத்துச் சொல்லச் சென்றாரா? அல்லது அமெரிக்க எசமானுக்கு உளவு பார்க்கச் சென்றாரா? சிறிது காலத்தில் விடயம் வெளிவரவே செய்யும்.

### மேட்டுக்குடித் தமிழரின் கூத்தடிப்பு

கொழும்பு வெள்ளவத்தையில் ஆடம்பர மாடி மனைகள் வானுயர எழும்பி வருகின்றன. அண்மையில் அப்படியொரு மாடி மனைத்திறப்பு விழா அந்த மாதிரியான ஆடம்பர செலவுகளுடன் இடம் பெற்றது. வாணவேடிக்கை கூட நடாத்தப்பட்டதாம். சந்தணம் மிஞ்சினால் தடவடா எங்கையோ வெல்லாம் என்பார்கள். இது மட்டுமா. அண்மையில் கொழும்பில் பெண்களுக்கான அழகு அலங்கார நிலையம் (Beauty Parlour) இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திறந்து வைக்கப்பட்டன. ஒன்றை பெண்களின் "அடக்க ஒழுக்கம்– அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு" என்றெல்லாம் பேசிவரும் கம்பவாரிதி ஜெயராஜ் எவ்வித கூச்சமும் இன்றித் திறந்து வைத்தார். மற்றயதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பா.உ. ரவிராஜ் திறந்து வைத்தார். ஒருபக்கம் மேட்டுக்குடித்தமிழரின் கூத்தடிப்புகள். மறுபுறம் கொட்டில் குடிசை முதல் அன்றாட வாழ்வுடன் மல்லாடும் வடக்குக்கிழக்கு சாதாரண தமிழ் மக்கள். கஞ்சிக்கும் கூழுக்கும் ஏங்கி நிற்கும் தமிழர்களும் ஆடம்பரத்தில் உழன்று நிற்கும் தமிழர்களும் உள்ள நிலைமை பற்றி யார் தான் கவலைப்படுகிறார்கள்.

### அல்லிப் பூ இயக்கம் எதற்காக?

கடந்த யூலை 17-21 வரை இராணுவத்தினருக்கு உதவும் நோக்கில் அல்லிப் பூ இயக்கத்தை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நடாத்தியது. இதற்கு அலரிமாளிகையின் ஜனாதிபதி முதல் பலாலி படைத்தளத்தின் ராணுவ உயர் அதிகாரிகள் வரை வரவேற்பும் உச்சாகமும் கொடுத்தனர். பாதிக்கப்பட்ட ராணுவத்தினருக்கு உதவுவது என்ற பெயரில் பௌத்த சிங்கள பேரினவாத ஒடுக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தும் கருத்துக்களே பரப்பப்பட்டன. அத்துடன் இலங்கை ராணுவம் நாட்டு மக்களுக்குரிய ஒன்றல்ல அது பௌத்த சிங்கள மேலாதிக்கத்தைப் பாதுகாக்கும் ஒடுக்குமுறை ராணுவமே என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது.

### சந்திரசேகரன் இப்போது எந்தப் பக்கத்தில்

கடந்த மேதினத்தில் உரையாற்றிய ம.ம.மு தலைவர் சந்திரசேகரம் தான் புலிகள் பக்கம் போவதா, அரசாங்கப் பக்கம் போவதா, என்பதை விரைவில் தீர்மானிக்கப் போவதாகச் சூழுரைத்தார். அது மறைமுகமாக அரசாங்கத்திடம் பதவிக்கு விடுக்கப்பட்ட மன்றாட்டமாகவே மலையக மக்கள் கருதினர். ஏற்கனவே சந்திரசேகரன் நடந்து கொண்ட விலாங்குத்தனத்தால் கிளிநொச்சிப் பக்கம் செல்ல முடியவில்லை. அதேவேளை அலரிமாளிகைப் பக்கமும் அண்ட விடப்படவில்லை. உடல் நிலையும் தளர்ந்த நிலையில் செய்வதறியாது தவித்துக் கிடக்கிறார் மனிஷன். என்ன செய்வது காலம் செய்த கோலம்தான்.

### மக்களை மோத வைக்கும் முயற்சி

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு ஆயிரம் பேர் கொண்ட தனிப்படையாம். இதில் அங்கம் பெறுவோர் மக்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படுவராம். இப் தனிப்படைக்கு பொலீஸ் ராணுவ ஓய்வு பெற்ற அதிகாரிகள் பொறுப்பாக இருப்பார்களாம். அதேவேளை ஜே.வி.பி கூறிய ஆலோசனையில் ஓட்டோ சாரதிகளை புலனாய்வாளர்களாகச் செயல்பட வைக்கலாம் என்கிறது. இவையனைத்தும் செயல்படுத்தப்பட்டால் தலைநகரில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகங்களும் பகைமையும் வளர்க்கப்பட்டு மோதல்களுக்கே வழி பிறக்கும். இன வெறி வக்கிரங்களை வளர்க்கும் புது முயற்சியே இதுவாகும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்களக் காடையர்களுக்கு அடிபணிந்து தொழிலாளர்களை இடம் பெயரக் கோருவது கோழைத்தனம்

அண்மையில் கேகாலை மாவட்டத்தில் எகலியகொட பம்பேகம தோட்டத்தில் தமிழ்த்தொழிலாளர்கள் சிங்களக் கடையர்களால் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் லயன்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பலர் அடித்து படுகாயப்படுத்தப்பட்டனர். பெண்கள் குழந்தைகள் கேவலமாக தாக்கப்பட்டனர். இரவிரவாகத் தொழிலாளர்கள் விரட்டப்பட்டனர். சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலீஸ் காடையர் பக்கமாக செயல்பட்டது. கண்டனம் மட்டுமன்றி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய மலையகத் தலைமைகள் ஏனோ தானோ என இருந்து கொண்டன. சிலவேளை தேர்தலை அண்மித்த காலமாக இருந்திந்தால் அத்தலைமைகள் சிலிர்த்து எழுந்திருப்பார்கள்.

மேற்படி பம்பேகம தொழிலாளர்கள் தாக்கப்பட்டமை பற்றி ஜனாதிபதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய அல்லது வற்புறுத்தல் செய்திருக்கக் கூடியதான இ.தொ.கா.வும் அதன் தலைவர் தொண்டமான் ஆறுமுகமும் வேடிக்கையான அறிக்கை விட்டனர். அதாவது பம்பேகம தோட்டத் தொழிலாளர்களை நுவரேலியா மாவட்டத்தில் சென்று குடியேறுமாறு ஆலோசனை வழங்கினர். காரணம் நுவரேலியா மாவட்டம் மலையகத் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகையால் அங்கு பாதுகாப்பு கிடைக்கும் என்பதே ஆறுமுகத்தின் வாதமாகும். ஆனால் நுரேலியாவில் சிங்களக் கடையர்கள் தாக்கினால் பின்பு எங்கு சென்று குடியேறச் சொல்வாரே தெரியாது. நுவரேலியா மாவட்டம் எந்தவகையில் பாதுகாப்பான பிரதேசம் என்று ஆறுமுகம் கூறுவாரா? இரண்டு வருடங்களுக்கு முன்பு நுவரேலியா கந்தப்பளையில் தொழிலாளர்கள் சிங்களக் கடையார்களாலும் பொலிசாராலும் தாக்கப்பட்டு உயிரிழப்புகள் கூட இடம் பெற்றதை அவர் மறந்து விட்டார் போலும்.

எனவே பம்பேகமத் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எடுக்க துணிவில்லாத இ.தொ.கா.வும் ஆறுமுகமும் தொழிலாளர்களை இடம் பெயர்ந்து குடியேறுமாறு கூறுவது வெட்க்கேடானதாகும். இவரது தாத்தா தொண்டமானும் இ.தொ.காவும் 1983 இன வன்முறையை அடுத்து மலையகத்திலிருந்து இந்தியா செல்லும் படி ஆலோசனை வழங்கியவர்கள் அல்லவா? ஆனால் தொழிலாளர்கள் அதனை மறுத்து மலையகம் எமது சொந்த மண் என வாழ்ந்தனர். அதனாலேயே இ.தொ.கா. பாராளுமன்றமும் செல்ல முடிந்தது. அவ்வாறே மேலக மக்கள் முன்னித்தலைவர் மனோ கணேசன் தாக்கப்படும் தோட்டத் தொழிலாளர்கள் வடக்கு கிழக்கில் சென்று குடியோற வேண்டும் என ஆலோசனை வழங்கி இருந்தார். இவர்கள் தான் மலையக மக்களின் தலைவர்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐ.ம.சு முன்னணிக்கும் துதி பாடி மாறி மாறி அமைச்சுப் பதவிகளும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் பெறுவதில் மட்டும் முனைப்பாக இருபபார்கள். ஆனால் மலையக மக்களுக்கு நெருக்கடிகளும் மோசமான தாக்குதல்களும் இடம் பெறும் வேளைகளில் தூர நின்று மடைத்தனமான ஆலோசனை வழங்குவார்கள். அவர்களது ஆலோசனை பேரினவாதத்திற்கும் இனவெறிக் காடையர்களுக்கும் அடி பணிந்து போகும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

மலையக மக்கள் ஒரு தேசிய இனம். அவர்களது இருப்பும் எதிர்காலமும் அவர்கள் வாழும் பிரதேசங்களில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்கான உறுதியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு அவற்றைப் பெறுவதற்கான போராட்டம் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதனை விடுத்த பாராளுமன்ற ஆசனங்களுக்கும் அமைச்சர் பதவிகளுக்கும் அளவான வகையில் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு கொள்கை வகுக்க முடியாது. பம்பேகம தொழிலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு உரிய சுதந்திர விசாரணை நடாத்தப்பட வேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் இனிமேல் அவ்வாறான தாக்குதல்கள் இடம் பெறாதவாறு உரிய பாதுகாப்புகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இதுவே செய்யப்படவேண்டியதாகும். இதனை விடுத்து இடம் பெயரச் சொல்வது மோசமான கோழைத்தனதமாகும்.

# இஸ்ரேலின் மிலேச்சத்தன தாக்குதலுக்கு

## புதிய- ஜனநாயக கட்சி கண்டனம்

பலஸ்தீனத்திலும் லெபனானிலும் தொடர்ச்சியாக இஸ்ரேலியப் படைகள் நடாத்தி வரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் மக்கள் நாளாந்தம் உயிரிழந்தும் படுகாயங்கள் அடைந்தும் வருகின்றனர். முக்கியமான கட்டிடங்கள் குறிவைத்து தாக்கி தகர்க்கப்பட்டும் வருகின்றன. இஸ்ரேலிய சியோனிஸப் பயங்கரவாதம் தனது முழுமையான சுய ரூபத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. அமெரிக்காவின் ஆசீர்வாதத்தோடு நடாத்தப்படும் இஸ்ரேலின் பலஸ்தீன- லெபனான் மீதான வெறித்தனத் தாக்குதல்களை புதிய- ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் பலஸ்தீன லெபனானிய மக்களுக்கு தனது ஒருமைப்பாட்டையும் தெரிவிக்கின்றது. இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு இஸ்ரேலின் பலஸ்தீன- லெபனானிய மக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில், உலகப் பயங்கரவாதம் பற்றி அமெரிக்கா நாளாந்தம் கூக்குரல் இட்டு வருகிறது. பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிக்கும் புனிதப்பணி எனக் கூறி ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அப்பட்டமான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருகிறது. ஈரானையும் சிரியாவையும் நேரடியாகவே எச்சரித்து அச்சுறுத்தி வருகிறது. அதே அமெரிக்கா இஸ்ரேலியப் பயங்கரவாதத்திற்கு ஆதரவு தெரிவித்து பலஸ்தீனம் லெபனான் நாடுகளின் மீது காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்கள் நடாத்துவதை அங்கீகரித்து வருகின்றது. அரபுலகின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடித்து அள்ளிச் செல்லவும் அதற்கு குறுக்கே நிற்கும் முஸ்லீம் நாடுகளையும் மக்களையும் தலைமைகளையும் அடக்கி ஒடுக்கவும் வலுவான தளமாகவும் பயங்கர ஆயுதமாகவும் தோற்றுவிக்கப்பட்டதே இஸ்ரேல் நாடாகும்.

எனவே இன்று அமெரிக்காவையும் மேற்குலகையும் எதிர்த்து வரும் பலஸ்தீன லெபனானிய மக்களை கொன்று குவிக்க இஸ்ரேல் ஏவி விடப்பட்டிருக்கிறது. இஸ்ரேலியப் பாதுகாப்புக்கு நடாத்தப்படும் தாக்குதல் என்ற பெயரில் அமெரிக்க- இஸ்ரேலியப் பயங்கரவாதிகளின் மிலேச்சத்தனமான தாக்குதல்களே இடம் பெற்று வருகின்றன. உலக மக்களோடும் இலங்கையின் முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளோடும் இணைந்து மேற்படி தாக்குதல்களை எமது புதிய- ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

# மலையகத்தில் தொடரும் கைதுகள் தமிழர்கள் சந்தேகப் பேர்வழிகளாம்.

**மலையகத்தில்** ஓரளவிற்கு தணிந்திருந்த தேடுதல் கைதுகள் தடுப்பு வைப்பு என்பன மீண்டும் வேகமடைந்து வருகின்றது. தோட்டங்களுக்குள்ளும், நகரங்களிலும் புதியவர்கள் வெளியாட்கள் தங்கியிருக்கும் புதிய முகங்கள் யாராவது இருக்கிறார்களா எனப் பொலிசார் மலையகத்தில் துளாவி வருகின்றனர், அதே வேளை தோட்டங்களில் இளைஞர் யுவதிகள் பற்றிய தகவல்களையும் பல்வேறு வழிகளில் சேகரித்து வருகின்றனர். சில தோட்டங்களை அண்டிய சிங்களக் கொலனிகளில் வசித்து வரும் இனவாத வக்கிரம் கொண்டவர்கள் பொலீசுக்கு வேண்டுமென்றே பொய்த் தகவல் கொடுத்து "புலிகள்" என்றும் "புலிகளுக்கு உதவுவோர்" என்றும் கூறி கைது செய்யப்பட வைக்கின்றனர். ஒன்றுமறியாத தொழிலாள இளைஞர்கள் பலர் இவ்வாறு கைது செய்யப்படும் சூழலில் பொலிசில் இருந்து தம்மை நிரபராதி எனக்கூறி வெளியேவர மிகவும் சிரமப்படுகின்றனர். பணச் செலவும் காலநேர விரயமும் வேலை இழப்பும் கூட ஏற்படுகின்றன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சில இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம் தமிழர்கள் என்ற இன மொழி அடையாளங்களேயாகும். இக் கைதுகள் பற்றி மலையகத் தலைமைகள் ஓரிரு அறிக்கைகளுடன் அமைதியாகிக் கொள்கின்றன. ஆனால் மலையக மக்கள் அச்சம் பதற்றம் ஏக்கத்துடனேயே வாழ வேண்டியுள்ளது. இவை எதுவும் மலையகத் தலைமைகளுக்கு பெரும் பிரச்சினை அல்ல. ஏனெனில் கைது செய்யப்படுவதும் தடுத்து சித்திரவதைகளுக்கு ஆளாவதும் சாதாரண உழைக்கும் மலையக மக்களேயாவர்.

# நுவரேலியா வைத்தியசாலையில் தமிழ் நோயாளிகள் மீது இம்சை

**தோட்டத்தொழிலாளர்கள்** உட்பட தமிழ்மக்கள் நுவரேலியா மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்ல பயப்படுகிறார்கள். இனரீதியான பாரபட்சங்களுக்கும் அவமானத்திற்கும் புறக்கணிப்பிற்கும் உள்ளாகி வருவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சிங்கள மொழியிலேயே வைத்தியர்களுடனும், தாதிகளுடனும், வைத்தியசாலை அலுவலர்களுடன் உரையாட வேண்டிய நிலை இருப்பதாலும் தமிழ்மொழி மட்டுமே தெரிந்த பெரும் எண்ணிக்கையான நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

நோயாளிகளை இனரீதியான பாராபட்சத்துடன் நடத்துவது மிருகத்தனமாகும். நுவரேலியா மாவட்டத்திலிருக்கும் பெரிய வைத்தியசாலை நுவரேலியா மாவட்ட வைத்தியசாலை ஆகும். அவ்வைத்தியசாலை அசுத்தமாகவும், பாழடைந்ததாகவும் இருப்பதுடன் படுக்கை வசதிகளும், வைத்திய வசதிகளும் இல்லாதிருக்கிறது. இதனால் நோயாளிகளுக்க உரிய சிகிச்சை அளிக்க முடிவதில்லை.

தொடர்ச்சியாக சிகிச்சை பெறுவதற்காக செல்லும் நோயாளிகள் குறிப்பிட்ட நாட்களில் பிரயாணம் செய்து நேரத்தோடு வைத்தியசாலையை சென்றடைய பஸ் வசதிகள் இல்லை. அதனால் முதல் இரவே நுவரேலியாவிற்கு செல்கின்றனர். இரவு நேரங்களில் வைத்தியசாலை வளவிற்குள் இருக்க அனுமதிக்கப்படாமையால் இரவு நேரங்களில் குளிரில் நடுங்கிக் கொண்டு நுவரேலியா வீதிகளில் இந் நோயாளிகள் படுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

அதற்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இனரீதியான நடந்துகொள்ளும் வைத்தியர்கள் தாதிகள், உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்தெரிந்த வைத்தியர்களும் தாதிமார்களும், உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டும். வைத்திய வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ் வைத்தியசாலை அண்மையில் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டமை. குறிப்பிடத் தக்கதாகும். அவ்வாறெனில் இதற்கு பொறுப்புக் கூறவேண்டியது சுகாதார அமைச்சேயாகும். அதிலும் பிரதி சுகாதார அமைச்சர் சுரேஷ் வடிவேல் மலையக மண்ணின் மைந்தன் அல்லவா? அவ்வாறு தான் அவர் மார்தட்டி அமைச்சரானார். ஆனால் அவரது அமைச்சின் கீழ் உள்ள நுவரேலியா வைத்தியசாலையில் தான் மேற் கூறிய சீர்கேடுகள் இனவாத செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அமைச்சரே இது பற்றி ஏதாவது கூறுவீர்களா?

# நி(இ)ன்ற சிற்றி

எஸ். உதயசூரியன

நம்ம ஊரு இன்ற சிற்றி வருகுது பாரு
நாள் கணக்கில் ரோட்டில் நிற்கும் மனுசர பாரு
பச்ச மாரி சிவப்படித்த வஸ்கள் பாரு- ஐயோ
பாளாப் போன சீரியின் வேகத்த பாரு

சாமிய சுத்தி வெளிச்சம் போடும் பல்பயும் பாரு
வாந்தியெடுத்து ஏச்சு வாங்கும் பாட்டிய பாரு
கழுத்த புடிச்சி தள்ளுகிற வேகத்த பாரு- அக்கா
காது தோடு பிஞ்சி போன கோலத்த பாரு-

முதுகு மேல கையபோடும் நாளினத்த பாரு - கோலயா
மோசமான வார்த்த கேட்டு குனியுது பாரு
ஜம்பிங்கீட்டு வளைஞ்சி தொங்கும் நெலமய பாரு
ஜப்பான் பஸ் தவழுகின்ற வேகத்த பாரு

கரகரக்கும் ஸ்பீக்கரின் சத்தத்த கேளு
காச வாங்கி வெரலில் அடுக்கும் வேகத்த பாரு
'ஏசி' பஸ்ஸில் வேர்த்தொழுகும் நிலமய பாரு
ஏச நெனச்சும் பயந்து நடுங்கும் பயணிய பாரு

புட் போட்டில் நெளிகின்ற கால்கள பாரு
புடிக்க கம்பியில்லாம சாய்வத பாரு
ஏற ஒரு கூட்டம் நிற்கும் வேகத்த பாரு - மேலே
ஏற சொல்லி ஏசுகிற ட்ரைவர பாரு

இன்ற சிற்றி ஓடுதுபார் நின்ற சிற்றியாக
இ. போ. ச படுக்குது பார் இழுவை நோய் ஆக
நம்ம சனம் முகத்த பாரு இளிச்ச மூஞ்சியாக
நாடு போற போக்க பாரு நாசமாப் போக!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று 13 ஆகஸ்ட் 2006 பக்கம் 12 விலை 15/- சுழற்சி 94

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே:011-2435117,தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

## உலக வர்த்தக நிறுவனம் (W. T. O) அழிவின் விளிம்பில் இருக்கிறது

ஆதிக்கம் கொண்ட முதலாளித்துவ நாடுகளின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனம் (W. T. O) தொடர்ந்து இயங்க முடியாத இக்கட்டான நிலையில் இருக்கிறது.

டோகாவில் யூலை 24 ஆம் திகதி நடைபெற்ற ஜீ 6 என்று சொல்லப்படுகின்ற அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிறேசில், யப்பான், அவுஸ்திரேலியா இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையிலான விவசாய, பண்ணைப் பொருட்களுக்கான உலகலாவிய வர்த்தகம் பற்றிய பேச்சுவார்த்தை தொடர முடியாது முடிவுறுத்தப்பட்டது. விவசாய பண்ணைப் பொருட்களின் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதி இறக்குமதிக்கான மானிய வசதிகளை அனுமதிக்க முடியாது என்று அமெரிக்கா பிடிவாதமாக இருந்ததே அதற்கு காரணமாகும்.

இவ்வாறு 1990 களிலும் பலமுறை பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததால் உலகவர்த்தக நிலையத்தினூடான நாடுகளின் பலபக்க வர்த்தகம் மிக பாதிப்படைந்தது. அதனால் வளர்முக நாடுகளில் வர்த்தகம் பாதிக்கப்பட்டு, அவற்றின் விவசாய, பண்ணை உற்பத்தித்துறைகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுமே நன்மை அடைந்தன.

யூலை 24 ஆம் திகதி தோல்வியடைந்த டோகா பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இன்னும் மோசமான பாதிப்புகள் ஏற்படலாம். இதனால் பிறேசில், இந்தியா உட்பட பல வளர்முக நாடுகள் பாதிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. உலக வர்த்தகம் உலகமயமாகிவிட்ட சூழலில் அதன் உலகச் சின்னமாக, கேந்திரமாக உலக வர்த்தக நிறுவனம் கட்டப்பட்டது. இதனால் எல்லாநாடுகளுக்கும் சர்வதேச வர்த்தகத்தில் சமவாய்ப்பு ஏற்படும் எனக் கூறப்பட்டது. அந்நிறுவனத்தில் 149 நாடுகள் பங்கெடுக்கின்றன. உலகமயமாதலின் கீழான சர்வதேச வர்த்தகத்திலிருந்து விலகி நிற்க முடியாதென வளர்முக நாடுகளும் அதில் மிகவும் கஸ்டப்பட்டு போட்டிப்போட்டுக் கொண்டு அங்கத்துவத்தை பெற்றன. சீனாவிற்கு உ.வ.நி. அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும் என குரல் எழுப்பட்டது. இந்திய மாக்சிஸ்ட் கட்சி அதனுடைய மாநாட்டு அரசியல் அறிக்கையில் சீனாவிற்கு உ.வ.நி.இல் இடம்கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியது.

1950 களுக்குப் பிறகு சர்வதேச வர்த்தகத்தில காலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுக்கப்பட்ட நாடுகள் பல ஓரளவு காத்திரமாக பங்கைப் பெற்றுக் கொண்டன. 1970களுக்கு பிறகு ஆதிக்கம் பெற்ற தாராளமயத்தினால் அந்நாடுகள் பின் தள்ளப்பட்டன. உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுடன் எழுந்த உலக வர்த்தக நிறுவனம் வளர்முக நாடுகளின் இருபக்க, பலபக்க, பிராந்திய வர்த்தக ஒழுங்குகளை சிதைத்தது. ஆதிக்கமுடைய முதலாளித்துவ நாடுகளின் உ.வ.நி வளர்முக நாடுகளின் பொருள் விநியோகத்தை தாக்கியதன் மூலம் பொருள் உற்பத்தியையும் பாதிப்படையச் செய்து மக்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்வதற்கு தடைகளை ஏற்படுத்தியது. ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழான வர்த்தகம் நிச்சயமாக வளர்முக வளர்முக நாடுகளுக்கு சாதகமாக இருக்கப் போவதில்லை.

இருந்தும் அந்நாடுகளின் முதலாளி வர்க்கம் அவற்றின் இருப்பிற்காக அவ்வர்த்தகத்தில் தலைகளை நுழைத்துக்கொண்டன. அவ்வாறு தலையை ஆழமாக புதைத்துக் கொண்ட இந்திய ஆளும்வர்க்கம் டோகாவில் நடைபெற்ற உ.வ.நி பேச்சுவார்த்தையின் தோல்வியை அடுத்து கதிகலங்கிப் போய் நிற்கிறது.

அப்பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததற்கு அமெரிக்காவின் பிடிவாதமே காரணமென்று இந்தியாவின் வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் கமல்நாத் கடிந்து கொண்டுள்ளார். தற்போது கடிந்து பிரயோசனம் இல்லை. இந்தியா போன்ற நாடுகளினதும் அவற்றின் மக்களினதும் விவசாய வர்த்தகங்களுக்கு தடையாகவே உ.வ.நி செயற்படுகிறது.

மூலதனம் உலகமயமாக்கப்படுவது போன்று அதற்கான சந்தை வர்த்தகமும் நிலைநாட்டப்படுகிறது. அதற்குரிய நிகழ்ச்சி நிரலை இயக்குவதற்குரிய உ.வ.நி அதனால் பாதிக்கப்படுகிற மக்களுக்கும் நாடுகளுக்கும் உதவப்போவதில்லை.

அதனால்தான் வறிய, வளர்முக நாடுகள் உலகமயமாதலுக்கு மாற்று வர்த்தக விநியோக முறைகளில் கவனஞ் செலுத்த வேண்டியவனவாக இருக்கின்றன. உலகமயமாதலுக்கு பின்னால் ஓடாமல் சர்வதேச மைய வர்த்தகத்தில் உரிய பங்கை பெறுவதற்கான சர்வதேச அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதுடன் வறிய வளர்முகநாடுகளிடையேயான இருபக்க, பலபக்க, பிராந்திய வர்த்தக விநியோக முறைகளில் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியம். இவ்விநியோக வர்த்தக முறைகள் பலப்படுத்தப்பட்டால் சர்வதேச மைய வர்த்தகத்தில் உரிய பங்கை பெற்றுக்கொள்ளலாம்.

ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு மாற்று சோஷலிஸம் தான். அதனை எய்தும் வரை பரீட்சார்த்தங்களும், பின்னடைவுகளும் போராட்டங்களும் தவிர்க்க முடியாதவை ஆகும். அதற்கான நீண்ட வேலைத்திட்டங்களை கம்யூனிஸ்ட் கட்சிகள் முன்னெடுக்க கடமைப்பட்டுள்ளன. அக்கடமைகளை முன்னெடுக்க பன்முகப்பட்ட வேலைத்திட்டங்களையும் பரந்துபட்ட ஐக்கிய முன்னணி தந்திரோபாயத்துடன் செயற்பட வேண்டியிருக்கும்.

அதற்காக உலகமயமாதலின் சீரழிவுகளும், தோல்விகளும் அம்பலமாகி வருகின்ற போது மக்களுக்கு அறிவூட்டி அவர்களை அணிதிரட்டி உலகமயமாதலுக்கு எதிரான போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதும், சாதாரண மக்களுக்கும், வளர்முக, வறிய நாடுகளுக்கும் உரிய மாற்று வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**ஆசிரியர் குழு**

# பேரினவாத ஒடுக்கு முறையின் வேர்களும் ஆளும் வர்க்க அடிப்படைகளும்

வெகுஜனன்

நாடு மிக மோசமான பொருளாதார அரசியல் ராணுவ நெருக்கடிகளை எதிர்நோக்கி நிற்கிறது. சமூக பண்பாட்டு அம்சங்கள் யாவும் நாளாந்தம் சீரழிந்து கொண்டே செல்கிறது. அபிவிருத்தி சுபீட்சம் பொருளாதார முன்னேற்றம் என்று கூறப்படுபவை உண்மையில் இடம் பெறுகின்றதா? அதேவேளை யுத்தமாக மாற்றப்பட்ட தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உருப்படியான நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ளப்படுகிறதா? நாட்டின் பொருளாதாரமும் அதற்கான அடிப்படை வளங்களும் யாருடைய கைகளில் இருந்து வருகின்றன. அவற்றின் மூலமான வருவாய்களும் லாபங்களும் எவரெவருடைய கைகளுக்கும் பைகளுக்கும் சென்றடைகின்றன. ஒரு அரசாங்க உயர்நிலை அதிகாரியின் உயர் சம்பளத்திற்கும் அதே அரசாங்க கீழ் நிலை ஊழியரின் சம்பளத்திற்கும் உள்ள இடைவெளி எத்தனை மடங்கானது. அவ்வாறாயின் சாதாரண உழைக்கும் மக்களான தொழிலாளர்கள் விவசாயிகளின் வருமானமும் வாழ்க்கை நிலையும் எத்தகைய இடர்பாடுகள் அவலங்களுடன் சென்று கொண்டிருக்கின்றது.

இத்தகைய நிலையினையே மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் வர்க்க அடிப்படையிலான சுரண்டல் ஏற்றத்தாழ்வு எனவும் அதனைப் பாதுகாத்து நிற்கும் தன்மையினை வர்க்க ஒடுக்கு முறை எனவும் காணுகின்றோம். இந்த வர்க்க வேறுபாடும் ஒடுக்குமுறையும் முழு இலங்கை மக்களையும் இன மொழி மத சமூக வேறுபாடுன்றி உள்ளடக்கி நிற்கிறது என்பது சமூக யதார்த்தமாக இருந்து வருகின்றது. வரலாற்று ரீதியில் நீடித்து வந்த இத்தகைய வர்க்க ஏற்றத் தாழ்வும் அதன் காரணமான முரண்பாடும் ஒடுக்குமுறையும் சமூகத்தின் அடிப்படையாக மட்டுமன்றி அதன் அசைவியக்கத்தின் மூலாதாரமாகவும் அமைந்திருக்கிறது. எனவே வர்க்க சக்திகளின் அடிப்படைகளையும் அதன் காரணமான சமூக விளைவுகளையும் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் தெளிவாகக் கண்டு கொள்ளும் தேவை இன்று அவசியமாகின்றது.

இத்தகைய வர்க்க அடிப்படையில் இருந்தே சகல பிரச்சினைகளும் தோற்றம் பெற்று வளர்ச்சி காணுகின்றன. அவை வளர்ச்சி பெற்று உருவம் கொண்ட பின்பு அதன் ஊற்று மூலமான வர்க்க அடிப்படையை மறைத்துக் கொள்கின்றது. விளைவுகளின் பூதாகரத்தன்மையைப் பற்றிப் பார்க்கவும் பேசவும் முடிகிறதே தவிர காரணகாரியத்தைக் காணத் தவறுகின்ற போக்கு காணப்படுகிறது.

அத்தகைய வகையைச் சேர்ந்ததே இன்று பிரதான முரண்பாடாக எழுந்து நிற்கும் இன முரண்பாடும் பேரினவாத ஒடுக்கு முறையுமாகும். இதற்கு அடிப்படையாக அமைந்திருப்பது வர்க்க நிலைப்பாடேயாகும். இந்த நிலைப்பாடு என்பது இன்று நேற்று அல்ல பல நூற்றாண்டுகளாக நீடித்து வந்த ஒன்றாகும். நிலவுடைமைக் கால சமூக அமைப்பு அதன் பின்னான முதலாளித்துவ வளர்ச்சியும் இலங்கையில் வர்க்கங்களின் ஏற்றத்தாழ்வை பல்வேறு நிலைகளில் உறுதிப்படுத்தி வந்திருக்கிறது.

இலங்கையின் நீண்ட வரலாற்றில் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பிருந்தே நிலத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியும் அதனோடு இணைந்த கைவினைத் தொழில்களும் அன்றைய சூழலுக்கு ஏற்ப தோற்றம் பெற்று விருத்தி பெற ஆரம்பித்தன. அத்துடன் அரசுகளின் தோற்றத்துடன் கூடிய அரச அமைப்புகளும் வளர்ச்சிகண்டன. இந்தியாவிலிருந்து இங்கு வந்திறங்கிய விஜயன் இலங்கையின் அரசனாகக் குறிப்பிடப்படுவதிலிருந்து இறுதி கண்டி மன்னான ராஜசிங்கன் வரை முன்நூறு வரையான அரசர்கள் மன்னர்கள் இலங்கையில் ஆட்சி செய்திருக்கிறார்கள். இவர்களில் சிங்கள தமிழ் மன்னர்கள் அரசர்கள் உள்ளடங்குவர். குறிப்பாக தென் இந்தியாவில் இருந்து படையெடுத்து வந்து ஆட்சி செய்த மன்னர்களே முழு இலங்கையையும் ஆண்டனர். சோழ மன்னனான எல்லாளன் என்பான் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்றால் அன்றைய நிலையில் இனமொழி மதப்பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

சிங்கள தமிழ் மன்னர்களின் ஆட்சியின் போது வர்க்க வேறுபாடும் அதனுடன் இணைந்த சாதியப்படிநிலை வேறுபாடுகளுமே அடிப்படையானதாகக் காணப்பட்டது. ஆனால் மகாவம்சத்தை எழுதிய மகாநாமன் என்ற பௌத்த பிக்கு வரலாற்று ரீதியான வர்க்க வளர்ச்சியை முன்னிலைப்படுத்தாது தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்து ஆட்சி செய்தவர்கள் தமிழர்களாக இருந்தமையைச் வெறுப்பூட்டும் வகையிலேயே ஒருவகை பகை-வக்கிரக நோக்குடன் கூடிய அக விருப்புகளாக வெளிப்படுத்திக் கொண்டார். அத்தகைய தவறான வரலாற்றுப் பதிவுகளில் இருந்து கடந்த நூற்றாண்டின் சில வரலாற்றாசிரியர்கள் மகாநாமன் வழியில் வரலாற்றுப் பொய்களையும் திரிபுகளையும் பரப்பி வந்தனர். இதனையே இலங்கையின் பேரினவாதக் கருத்தியலும் அதற்கான சிந்தனையும் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மாகாவம்சத்தில் இருந்தே தொடங்கிவிட்டது என்பர். அத்தகைய இட்டுக்கட்டுகளும் கட்டுக்கதைகளும் பேரினவாதிகளுக்கு ஆதாரமாக அமைந்தன. அதுவே கடந்த நூற்றாண்டில் இனவாதமாக முளைவிட்டு பின்பு பேரினவாதமாக வளர்ந்து வந்த வரலாற்று வளர்ச்சியை தெளிவாகக் காணுதல் வேண்டும்.

> **இனம் மதம் மொழி பற்றிய பிரமைகளை களைவதற்கு புற நிலை யதார்த்தங்கள் ஊடான வர்க்க அடிப்படையினைப் புரிந்து கொள்ள வேண்டும்.**

ஆனால் இப் பேரினவாத வளர்த்தெடுப்பிற்குப் பின்னால் அப்பட்டமான வர்க்க நலன்களே கெட்டியாக இருந்து வந்துள்ளன. இன மத சாதிய கருத்தியல்களும் அவை வழிபட்ட சிந்தனைகளும் நீண்டகால இருப்பையும் ஆழ்ந்த உணர்வுகளையும் கொண்டவை. அவை சார்ந்த உணர்ச்சிகளைக் குறுகிய வழிகளில் தூண்டி விடுவது மிக மிக இலகுவானதாகும். ஒவ்வொரு மனிதருக்கும் தமது மண் மொழி இனம் பண்பாடு பற்றிய பிடிப்பும் அக்கறையும் அவசியமானது. அவற்றுக்கும் அப்பால் மனித இருப்பு பற்றியும் மனித நேய வாழ்வு பற்றியும் அதனை இல்லாமல் செய்து வரும் வர்க்க ஏற்றத்தாழ்வின் அடிப்படை பற்றியும் அதன் ஒடுக்குமுறையின் ஆழ அகலம் பற்றியும் உரிய புரிந்து கொள்ளல் தேவையானதாகும்.

எனவே தான் பேரினவாதத்தின் வளர்ச்சியை உற்று நோக்கி வரலாற்று கண்ணோட்டத்தைச் செலுத்தும் போது அது வர்க்க அடிப்படைகளில் வேர் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். அன்று சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் நிலவுடைமை அமைப்பின் கீழ் ஆட்சி புரிந்து வந்த போது இன மேன்மை பற்றியோ மொழி உணர்வு பற்றியோ அல்லது மத வேறுபாடு பற்றியோ பெரிதாக அக்கறைப்படவில்லை. தென்னிந்தியாவிலிருந்து வந்து எல்லாள மன்னன் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு 44 ஆண்டுகள் "நல்லாட்சி" புரிந்தான் என்றே மகாவம்சம் கூறுகின்றது என்றால் அங்கு ஆளும் வர்க்க அரவணைப்பும் உயர்வர்க்க அங்கீகாரமும் வழங்கப்படுகின்றது. அதேவேளை இன ரீதியான காழ்ப்புணர்ச்சி காட்டப்படுவது ஆளும் வர்க்க தேவைக்கான ஒன்றகும். எல்லாளன் இறந்த பின்பு "கௌரவம்" அழிக்கப்பட்டதாகக் கூறப்படுவதிலும் உயர்வர்க்க மேட்டுக் குடி ஐக்கிய உணர்வு வெளிப்படுவதைக் காணலாம்.

எனவே தத்தம் ஆளும் வர்க்க ஆட்சியுரிமையில் யார்? அமர்ந்து கொள்வது என்பதற்கான போட்டியிலும் போராட்டத்திலும் இறங்கிய வேளையில் இன மத மொழி விடயங்கள் கருவிகளாகவும் கவசங்களாகவும் இருந்து வந்திருக்கின்றனவே தவிர வர்க்க நிலைப்பாடே அடிப்படையானதாகும். சிங்கள மன்னர்கள் தங்களுக்குள் அடிப்பட்டு போராடியது மட்டுமன்றி தென் இந்தியாவிற்கு ஓடிச் சென்று அங்குள்ள தமிழ் மன்னர்களிடம் உதவியும் படைகளும் பெற்று வந்து தமது ஆட்சி உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். இன்று மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்காவும் இந்தியாவிற்கு மாறிமாறிச் செல்வது அந்தப் பழைய பாரம்பரியத்தின் தொடர்ச்சியையே நினைவூட்டுகிறது. அவ்வாறே வடக்கிலும் வன்னியிலும் ஆட்சி புரிந்த அரசர்கள் மன்னர்கள் சிங்கள அரசர்களுடன் நட்புடன் பரஸ்பர உதவிகளுடன் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். தென்னிந்திய மூவேந்தர்கள்கூட தமக்குள் மோதுண்டு போராடியே தத்தமது ஆட்சிகளை நடாத்தியிருக்கிறார்கள். அவற்றின் அடிப்படை வர்க்க ரீதியில் வளமுள்ள நிலங்களை அபகரிப்பதும் செல்வங்களைக் கொள்ளையிட்டுத் திரட்டுவதுமாகும்.

ஆனால் அவை அனைத்தினதும் அத்திபாரமாக உழைக்கும் மக்களாக இருந்து வந்த விவசாயிகள் கைவினையாளர்கள் பற்றி யாரும் முதன்மைப்படுத்தப்படவோ கவனிக்கப்படவோ இல்லை. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகால சிங்கள நாகரீகம் பற்றி வாய் அலுக்கப் பேசுவோர் அரசர்கள் மதத்தலைவர்கள் அறிஞர்கள் பற்றி மட்டுமே பேசுகின்றனர். ஆனால் அவை அனைத்தினதும் அடி ஆதராமாக வாழ்ந்து உழைத்து செல்வம் திரட்டிக் கொடுத்த விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களை பற்றி எதுமே கூறப்படுவதில்லை.

இன்றும் கூட சிங்கள தமிழ் முஸ்லீம் உயர்வர்க்க மேட்டுக்குடியினர் மத்தியில் வர்க்க ஐக்கியம் சிறப்பாகப் பேணப்படுகிறது. அதேவேளை உழைக்கும் வர்க்க மக்கள் இன மொழி மத அடிப்படையில் பிரித்து ஒருவரை ஒருவர் பகை கொள்ளுமாறு நிறுத்தப்படுகின்றனர். பேரினவாத ஒடுக்கு முறையின் வேர்கள் வரக்க அடிப்படைகளிலேயே ஆழ ஊன்றி நிற்கின்றது. அதனை ஆளும் வர்க்க சக்திகள் நன்கு பயன்படுத்தி தமது அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுடன் இணைந்து செயலாற்றி தத்தமது நலன்கள் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். இந்த உண்மை மறைக்கப்பட்டு உழைக்கும் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் திட்டமிட்ட வழிகளில் ஏமாற்றப்படுகின்றனர். இவை பெரும்பான்மையான உழைக்கும் மக்களால் உணரப்படும் போதே உண்மையான விடுதலையும் விமோசனமும் கிடைக்க வழி பிறக்கும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மோசமாகி வருகிற சூழலும் அமைதிக்கான தேவையும்

~மோகன்~

நாட்டின் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமாகி வருகிறது. பெருகிவரும் பொருளாதாரச் சுமையைச் சாதாரண மக்களே சுமக்கின்றனர். 2002ம் ஆண்டு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹாவும் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனும் போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட போது இருந்த எதிர்பார்ப்புக்கள் அடுத்த ஆண்டின் நடுப் பகுதியிலேயே கலையத் தொடங்கிவிட்டன. பேச்சுவார்த்தைகள் எதுவித முன்னேற்றமும் இல்லாத நிலையிலேயே இடைக்கால நிருவாக அதிகாரசபை ஒன்றை அமைக்குமாறு விடுதலைப் புலிகள் கோரினர். அது பற்றிய எதுவித முடிவுமில்லாமலேயே பேச்சுவார்த்தைகள் முடங்கிப்போயின. அதன் பின்பும் மக்கள் நடுவே தீர்வு பற்றிய நம்பிக்கை இருந்தது. போர் நிறுத்தமாவது கடைப்பிடிக்கப்பட்டு வந்தமை அந்த நம்பிக்கை உயிரோடிருக்க அனுமதித்தது. எனினும் தேசிய இனப் பிரச்சினையின் உண்மையான முக்கியத்துவமும் நிலையான நியாயமான தீர்வொன்றின் தேவையும் பற்றி நன்கு அறிந்தும் ஆட்சிக்கு வருவதும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதுமே வழமை போல பிரதான அரசியற் கட்சிகளின் இலக்காக இருந்தது. 2001ல் அதிகாரத்திற்கு வருவதற்கு யூஎன்.பி அன்றைய ஆளுங் கட்சி அமைச்சர்களைக் கட்சி மாறச் செய்து, சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. அதற்குப் பழிவாங்குகிற விதமாகவே சனாதிபதி குமாரதுங்க யூஎன்.பி. அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமரசத்துக்கு வந்து பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்க இயலாத விதமாக முட்டுக்கட்டைகளை இட்டுச் சில முக்கியமான அமைச்சுக்களைத் தனது அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்தார். அதை எதிர்ப்பதில் யூஎன்.பியின் கையாலாகாத்தனம் வெளிப்படையாகத் தெரிந்த சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்தினார்.

யூஎன்.பியை முறியடிக்க எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேரலாம் என்ற சந்தர்ப்பவாத அணுகுமுறையின் அடிப்படையிலேயே தேசிய இனப்பிரச்சனையில் மிகவும் கடும்போக்கைக் கடைப்பிடித்த ஜே.வி.பியுடன் சிறிலங்க சுதந்திரக்கட்சி கூட்டணி அமைத்துக் கொண்டது. அதன் மூலம் ஜே.வி.பியின் பாராளுமன்ற ஆசன வலிமை மிகவும் அதிகரித்ததோடு தமிழ் மக்களுக்குச் சாதகமான எதற்கும் முட்டுக்கட்டை போடுவதற்கு ஜே.வி.பி தனது வலிமையைப் பயன்படுத்தியது. சுனாமியின் பின்பு நிவாரணத்திற்கான பொதுக்கட்டமைப்பைச் செயலற்றதாக்குவதில் ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் காட்டிய தீவிரம் மட்டுமில்லாமல் சனாதிபதியின் இழுத்தடிப்பும் உடன்படிக்கையில் ஒப்பமிடுவதிற்காட்டிய தயக்கமும் தமிழ்– முஸ்லீம் மக்களுக்குரிய நிவாரணம் அவர்களைச் சென்றடையாமல் தடுத்தது.

ரணில் விக்கிரமசிங்கஹவின் பதவிக்காலத்தில் அமெரிக்கப் பிரசையும் விக்கிரமசிங்ஹவின் பிரதான ஆலோசகர்களுள் ஒருவருமான மிலிந்த மொறகொட மூலம் மேற்கொண்ட முயற்சியாலேயே விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண அமைப்பில் ஒரு பிளவு ஏற்படுத்தப்பட்டது. அதில் அமெரிக்காவின் பங்கு முக்கியமானது. இந்தியாவும் அதனை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியது. விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திப் பணிய வைக்க எடுத்த இந்த முயற்சியின் பயனாக விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் பாரிய சில இழப்புக்களைச் சந்தித்தனர். இப் பிளவினால் பலனடைந்தது பொதுசன முன்னணி– ஜே.வி.பி அரசாங்கமே. எவ்வாறாயினும் கிழக்கு மாகாண மோதல்களில் அரச படைகளின் ஆதரவுடன் கருணா அணியும் வேறு துணைப் படைகளும் விடுதலைப் புலிகட்கு எதிரான தாக்குதலகளைத் தொடுத்து வந்தனர். இதன தொடரவிளை வாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் ஆயுதப்படையினரும் துணைப்படைகளும் மட்டுமில்லாமல் சாதாரண பொது மக்களும் அண்மைக்காலமாக வணிகர்களும் கொல்லப்படுகிற சூழ்நிலை வடக்கு– கிழக்கு முழுவதற்கும் பரவியுள்ளது.

புதிய சனாதிபதியின் வரவின் மூலம் ஆக்கமான மாற்றம் ஏற்படும் என்ற அற்ப நம்பிக்கைக்கும் ஊறு செய்கிற விதமாக அவர் சில கடும் போக்காளர்களை ஆயுதப்படைகட்கு அதிரடிப்படைக்கும் பொறுப்பாக நியமித்ததும் கடந்த ஆறேழு மாதங்களில் அரச படைகள் சாதாரண பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல்களும் சனாதிபதியின் நோக்கங்கள் பற்றித் தமிழ் மக்களியேயே நம்பிக்கைக்கு இடமளிக்கவில்லை. பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்குத் தடையால் போடப்பட்ட பலறு முட்டுக்கட்டைகளும் ஜெனீவா பேச்சுவார்த்தையில் ஏற்கப்பட்டபடி துணைப்படைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறியதும் ஒஸ்லோ பேச்சுவார்த்தையின் அவலமான முடிவும் அமைதி பற்றிய நம்பிக்கையை இல்லாமற் செய்கிறவிதமாகவே உள்ளன.

அதேவேளை அரசாங்கப் படையினர் மீதான உரிமை கோரப்படாத பலவேறு தாக்குதல்கள் வடக்கு– கிழக்கில் பதற்றமான சூழ்நிலை ஒன்றுக்குக் காரணமாகவுள்ளன. அதுமட்டுமன்றி படைத்தளபதி மீதான கொலை முயற்சியும் கெபிதிகொல்லாவ படுகொலைகளும் அரசாங்கத்தின் பதிலடிகட்கு இட்டுச் சென்றன. அப்பதிலடிகள் விடுதலைப் புலிகளைத் தாக்குவதற்கும் மேலாக சாதாரண மக்களையே பாதித்தன. மக்கள் ஆயிரக்கணக்கில் புலம் பெயர்ந்ததுடன் உயிரையும் திரணமாக மதித்துக் கடல் வழியே இந்தியாவிற்குத் தப்பிச் சென்று தஞ்சமடையும் நிலைமை உருவாகியுள்ளது.

அரச படைகளின் பொறுப்பற்ற நடத்தையின் பின்விளைவுகளை அண்மையிற் பேசாலை முதல் வாகனேரி வரையில் நடந்த மோதல்களிற் கண்டோம். அரசாங்கத்தின் போரை ஆதரிக்கிற வட்டாரங்களிற் கூட அதிர்ச்சியை ஏற்படுத்துகிற அளவுக்கு அரசாங்கத்தின் குண்டுவீச்சுக்கள் அமைந்ததன் விளைவாகவே அரசாங்கம் மேஜர் ஜெனரல் குலதுங்கவின் படுகொலைக்குப் 'பதிலடி' கொடுக்கவில்லை என்று தோன்றுகிறது. எனினும் போர் முனைப்பை நெகிழ்த்துகிற விதமான முயற்சி எதுவமே அரசாங்கத் தரப்பிலும் விடுதலைப் புலிகளின் தரப்பிலும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதித்த தடை ஏகாதிபத்திய நாடுகள் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த கற்பனாவாதக் கனவைக் கலைத்துள்ளது. அதே வேளை விடுதலைப்



புலிகள் மீது நெருக்குவாரங்களைச் செலுத்தி அவர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்கிற எதிர்பார்ப்பில் மண் விழுந்துள்ளது.

இன்னொரு புறம் அரசாங்கம் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு தேடுகிறதாகக் கூறிக் கொண்டு அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் என்ற பேரில் நடத்துகிற நாடகங்கள் உலக நாடுகளை நம்பவைக்கிற தற்குக் கூட உதவப் போவதில்லை என்றே தோன்றுகிறது. உண்மையில் இப்போது நடப்பது எதுவுமே தேசிய இனப் பிரச்சனையின் தீர்வுடன் தொடர்புடைய தல்ல என்பது தெளிவு.

விடுதலைப்புலிகள் தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறுவதை மறுதலிப்பதில் அரசாங்கம் முனைப்புடன் உள்ளது. யூஎன்.பி.யின் நோக்கமும் அதுவாகவே இருந்ததனாலேயே விடுதலைப் புலிகள் அமைப்பில் பிளவை ஏற்படுத்த அது செயற்பட்டது. அதனையே பிரச்சனையின் மையமாக்கி அமைதிப் பேச்சுவார்த்தைகளைச் சாத்தியமற்றதாக்க அதற்கான பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்துகிற நோக்கம் ஏற்கெனவே பல வேறு அமைச்சர்களின் உரைகளினின்றும் புலனாகிறது.

மறுபுறம் விடுதலைப்புலிகள் தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கங்கட்குப் பலியாகாமலும் மக்களது உண்மையான அபிலாசைகளை அடையாளப்படுத்துகிற ஒரு அமைப்பாகத் தம்மை வளர்த்தெடுப்பதும் முக்கியமானது. இன்று தமிழ் மக்களின் பலமான போராட்டச் சக்தி என்ற நிலையில் அவர்கட்கு முதன்மைப் பிரதிநிதிகள் என்னும் பாத்திரம் உண்டு. ஏனெனில் தமிழ் மக்கள் மீது அரச படைகளின் அச்சுறுத்தலுக்கெதிரான ஒரே ஆயுதம் போராட்டச் சக்தி விடுதலைப் புலிகள் அமைப்பாகவே உள்ளனர். அந்தவகையில் போர் நிறுத்தம், இடைக்கால உடன்படிக்கைகள், இடைக்காலத்தீர்வுகள் போன்றன அவர்கட்கும் அரசாங்கத்திற்குமிடையில் பேசித் தீர்க்கக் கூடியன. முஸ்லிம்களின் நலன்கள் பாதிக்கப்படுகிற அளவிற்கு அச் சமூகங்கள் பேச்சுவார்த்தைகளில் பங்காளிகளாவது. பற்றி விடுதலைப்புலிகள் மறுக்க நியாயமுமில்லை. அவர்கள் அதை மறுக்கவுமில்லை.

பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரை அரசாங்கம் நாட்டின் பிரதிநிதியாகவும் விடுதலைப் புலிகளின் தலைமைக்குக் கீழ் வராத பிரிவினரின் பிரதிநிதியாகவும் விடுதலை புலிகளுடன் பேச இயலும். இப் பேச்சுவார்த்தைகள் சர்வகட்சிக் கூட்டங்களோ மாநாடுகளோ அல்ல. எனவே விடுதலைப்புலிகள் ஏகப்பிரதிநிதிகளா என்பது அடிப்படையான பிரச்சனையாக் கப்படுவது தேவையற்றது.

இன்று நடக்கிற பிரகடனம் செய்யப்படாத போரை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேசுவது தேவையா.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# அதிகபட்ச அதிகாரப் பங்கீடும் மத்தியப்படுத்தப்பட்ட ஜனநாயகமும்

தயா

சாம்ராஜ்யங்களிலிருந்தும் காலனித்துவத்திலிருந்தும் விடுதலையடைந்த நாடுகள் தேசங்களினுள் இனரீதியான மதரீதியான அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்கள் கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக வளர்ச்சியடைந்துள்ளன. சாம்ராஜ்யங்கள், காலனித்துவம் என்பனவற்றிலிருந்து நாடுகள், தேசங்கள் விடுபட்டிருந்தாலும் அவற்றின் அடக்கு முறைகளும், சுர ண்டல் பிடிகளும் தொடர்ந்திருந்தன. அவை நேரடியாக நாடுகள் தேசங்களை கைப்பற்றாமல் நவகாலனி த்துவ அடக்கு முறைகளாக வளர்ந்தன. சாம்ராஜ்யங்கள் காலனித்துவம் என்பவற்றிலிருந்து விடுபட்ட நாடுகளின் ஆட்சிகள் முதலாளித்துவ வர்க்கங்களிடமே சென்றன. அவை பெரும்பாலும் சாம்ராஜ்ய காலனித்துவ ஏகாதிபத்திய சார்புடன் நடந்து கொண்டன. நவகாலனித்துவ அடக்கு முறைகளும் உள்நாட்டு முதலாளிவர்க்க ஆட்சிகளும் உள்நாட்டில் இனமத முரண்பாடுகளை கூர்மைப்படுத்தின. அதற்கு எதிரான போராட்டங்கள் நாட்டுப் பிரிவினைகளையே இலக்காக கொண்டிருந்தன. அப்போராட்டங்களினால் சில நாடுகள் பிரிந்துள்ளன. சில பிளவுபடாமல் அடக்கப்பட்ட போராட்டம் செய்யும் மக்கள் பிரிவினருக்கு ஒரே நாட்டினுள்ள அதிகாரங்களை பங்கிடும் செய்தன. சாம்ராஜ்யம் காலனித்துவம் என்பவற்றுக்கொதிரான போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்படையாக கொண்ட முற்போக்கான அரசியல் இயக்கங்களாக வளர்ந்தன. உலக இராணுவ சம நிலையில் இரண்டு முக்கிய சக்திகளாக விளங்கிய அமெரிக்கா சோவியத்யூனியன் என்பன தேசிய இன ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டங்களில் எதிரும் புதிருமாக செல்வாக்கை செலுத்தின. சோவியத் யூனியனின் வீழ்ச்சியடைந்து தற்போது அமெரிக்கா உலக இராணுவ நிலையில் தனி ஆதிக்கம் செலுத்தக்கூடியதாக இருப்பதால் தேசிய இன ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்கள் அதன் அக்கறைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அதன் அக்கறைகளுக்கேற்ப அப்போராட்டங்கள் முடிவுறுத்தப்பட வேண்டும் என்ற நிலையயே காணப்படுகிறது.

இன்றைய சூழலில் போராட்ட இயக்கங்களில் கூட அதிகாமானவை தேசிய இன விடுதலை சுயநிர்ண உரிமைப் போராட்டங்களின் அடி நாதமாக விளங்கி வந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதை கைவிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் கூட்டாளி நாடுகளான ஐரோப்பிய நாடுகளினதும் பிராந்திய சக்திகளினதும் துணையுடன் தீர்வுகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைக்குதள்ளப்பட்டுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுடைய அக்கறைகளுக்கு ஏற்ப தேசிய இனவிடுதலை அல்லது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தனிநாடுகளையும் பல இடங்களில் அதிகாரப் பங்கீடுகளையும் தீர்வாக கூறிவருகிறது. அதிகமாக அதிகாரப் பங்கீட்டை வலியுறுத்தி அதனை "உள்ளக சுயநிர்ணய உரிமை" எனவும் கூறிவருகிறது.

மாக்சிய அடிப்படையானது தேசிய இனங்களிடையே சமத்துவத்தையும் தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமையையும் சுயாட்சியையும் வலியுறுத்துவதாக இருந்து வருகிறது.

ஒரு மக்கள் பிரிவினரை அடக்கும் இன்னொரு மக்கள் பிரிவினர் தம்மளவில் சுதந்திரமானவர்களாக இருக்க முடியாது என்று ஏங்கல்ஸ் கூறினார். "எந்தவொரு தேசிய இனத்திற்கோ மொழிக்கோ சிறப்புரிமைகள் எதுவும் இருக்க முடியாது. எந்தவொரு சிறுபான்மை தேசிய இனத்தின் மீதும் சிறிதளவு கூட அடக்கு முறையோ அல்லது அநீதியோ இழைக்கப்படக் கூடாது" என்பதே உழைக்கும் வர்க்க ஜனநாயகம் என்பதை கம்யூனிஸ்ட்டுகள் பிரதான சுலோகமாக கொண்டிருப்பதாக லெனின் கூறியுள்ளார்.

முதலாளித்துவ அல்லது சுரண்டும் சமூகத்தில் தேசிய இனப் பாரபட்சத்தை எதிர்க்கும் சட்ட ஏற்பாடுகள் இருப்பது பிரதானமாவதுடன் அடக்கப்படும் சமூகத்திற்கு ஆக்ககுறைந்த நீதித்துறை பாதுகாப்பாவது இருக்க வேண்டும் என்பதை லெனின் 1913இல் வலியுறுத்தியுள்ளார். இந்த ஏற்பாடுகளின் மூலம் தேசிய இன ஒடுக்கலை முற்றாக நீக்க முடியாவிட்டாலும் ஓரளவிற்காவது தணிக்க முடியும் என்பதே அவரின் எதிர்பார்ப்பாக இருந்தது.

முதலாளித்துவ நாடுகளில் இன சமத்துவத்திற்கான சட்டங்கள், இனப் பாரபட்சத்திற்கு எதிரான சட்டங்கள் இனப்பிரிவினருக்கு அதிகாரங்களை பங்கிடும் சட்டங்கள் போன்றன ஆக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இலங்கையும் ஒரு முதலாளித்துவ, சுரண்டும் அமைப்பை கொண்ட நாடாகும் என்பதால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தேசிய இனங்களுக்கு அதிகாரத்தை வழங்கும் சட்டங்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை தணிக்க முடியும் என்றே சிலர் கூறிவருகின்றனர்.

கம்யூனிஸ்ட்டுகள் மத்தியப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். மத்தியில் ஓரிடத்தில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு மக்கள் அதிகாரமற்றவர்களாக இருப்பதை நிராகரிக்கிறார்கள். குறிப்பாக மத்திய அதிகாரத்தினால் தேசிய இனங்கள் அடக்கப்படுவதையும் ஒடுக்கப்படுவதையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை.

எனவே தேசிய இனங்களுக்கு அதிகாரங்கள் பங்கிடப்படுவதை எதிர்ப்பவர்களாக இருப்பவர்கள் கம்யூனிஸ்ட்டுகளாக மாக்சியத்தை ஏற்றுக்கொண்டவர்களாக இடதுசாரிகளாக இருக்க முடியாது. மாக்சியத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் ஜே. வி. பி அதிகாரப்பங்கீட்டிற்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது. லெனின் நாடுகளுக்குத் தான் சுயநிர்ணய உரிமை இருப்பதாகக் கூறியதாகக் ஜே.வி.பி கூறிக் கொண்டு சுயநிர்ணய உரிமை சமம் பிரிவினையைத் தவிர வேறொன்றும் இல்லை என்றுகிறார்கள். அதிகாரப்பங்கீடு என்பதே நாட்டுப்பிரிவினை தான் என்றும் கூறிக்கொண்டு இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் தீர்வு காண்பதையும் எதிர்த்து வருகிறது. அடக்கப்படும் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும் ஜே.வி.பி தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் இராணுவத்தை தேசிய பற்றுடைய ராணுவமாக மதித்தும் அவர்களின் பக்கமாக நின்று செயற்படுகிறது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 3

பேராசிரியர் சி.சிவசேகரம்

## பண்பாட்டை அடையாளப்படுத்தும் உடைகள்

பண்பாட்டின் முக்கியமான அடையாளங்களுள் ஒன்றாக மனிதரின் உடை, குறிப்பாகச் சம்பிரதாயமான உடைகள் அன்றாட வாழ்விலும் தொழிலிலும் பயன்படுகிற உடைகளினின்று வேறுபடலாம். நிச்சயமாக நாம் வீட்டில் அணியும் உடைகள் பொதுவாகப் பண்பாட்டைக் குறிக்கிற ஆடைகளாக அடையாளப்படுத்தப்படுவதில்லை. எனினும் அவையும் பண்பாட்டின் அடையாளங்களாகவே கொள்ளப்பட வேண்டும். தமது உடைகளின் தோற்றத்திலும் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படுவதை நம் கண் முன்னாலேயே காணக்கூடியளவுக்குச் சென்ற நூற்றாண்டின் பின்பகுதியிற் சமூகத்தின் குறிப்பிடத்தக்களவு பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதே வேளை, பண்பாட்டின் பேரில் சில மாற்றங்களை மறிக்கவும் மந்தப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கும் மேலாக மரபு பற்றிச் சமூகத்தில் நிலவுகிற பார்வைகளும் மாற்றங்கட்குத் தடையாக இயங்குகின்றன.

அன்றாடப் பாவனைக்குரிய உடைகளில் ஏற்படுகிற மாற்றங்களுக்குச் சமூக வாழ்வில் ஏற்படுகிற மாற்றங்கள் பல வேறு விதங்களிற் பங்களிக்கின்றன. அதை விடத் தொழில் நுட்பமும் வணிகத்தில் ஏற்படுகிற வளர்ச்சியும் உடைகளின் அமைப்பும் தோற்றமும் மாறக் காரணமாகின்றன. திரைப்படங்களும் தொலைக்காட்சியும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனினும் தேவையின் பங்கு முக்கியமானது. தொழில் காரணமாகவே காற்சட்டை வேட்டியின் இடத்தைப் பிடித்தது. அதற்கும் மேலாகக், காற்சட்டை உயர்ந்த சமூக நிலையைக் குறித்ததும் இன்னொரு காரணமாயிற்று கூலி உழைப்பில் ஈடுபட்டவர்கள் வேட்டியை விட சாரத்தை விரும்பியதற்கு அணிவதில் உள்ள வசதியும் அழுக்குத் தெரியாமல் இருப்பதும் சிக்கனமும் முக்கியமான காரணங்கள் எனலாம். காற்சட்டை இப்போது படிப்படியாகச் சாரத்தின் இடத்தைப் பிடிப்பதற்குத் "தயார் ஆடைகள்" சந்தைக்கு வந்தது ஒரு ஊக்கியாக அமைந்தது. இம் மாதிரியான மாற்றங்கள் மீண்டும் பின்னோக்கிச் செல்வது அரிது.

அதே வேளை இன்றுங் கூடப் பெண்கள் சேலையை மட்டுமே அணியவேண்டும் என்று வற்புறுத்துகிறவர்கள் அனேகர் தமிழ்ச் சமூகத்தில் இருந்து வந்துள்ளனர். சிறுவர்கள் பாடசாலைக்குக் குட்டைக் காற்சட்டை அணிந்து வெகு காலத்தின் பின்னரே பெண்கள் முழங்கால் நீளச் சட்டை அணியத் தொடங்கினர். அதற்கு முன்பு பாவாடை தாவணியையே வயது வந்த பாடசாலை மாணவியர் அணிந்தனர். பெண்களின் உடைகள் "அடக்க ஒடுக்கமாக" அமைய வேண்டும் என்ற பொதுவான எதிர்பார்ப்பே பெண்களின் உடைகளின் தன்மையைத் தீர்மானித்து வந்துள்ளது. அதேவேளை "பெண்மைக்கு" ஏற்புடைய உடைகள் பற்றிய பார்வையும் ஒரு முக்கியமான பங்கை ஆற்றியுள்ளது. தமிழ்ப் பெண்கள் சட்டை அணிவதைப் பாடசாலைக் கல்வியும் தொழிலிலும் தேவையாக்கிய போது முழங்காலுக்குச் கீழே சட்டை அணிவது தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்புடைய ஒன்றாகியது. இவ்வாறான மாற்றங்களின் வரவிற்குக் கிறிஸ்துவப் பாடசாலைகள் கல்வித் துறையில் முன்னிலையில் இருந்தமையும் முக்கியமான பங்களித்தது என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வகையிலும், கோயில் திருமணம் சாவு உட்பட்ட பல்வேறு சடங்குகளின் போது பெண்கள் சேலை அணிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இன்னமும் மிக்க வலுவுடனேயே உள்ள போதும் கடந்த இருபதாண்டுகளில் தமிழரின் புலப் பெயர்வும் தமிழகத்தில் பெண்களின் உடைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் இலங்கையில் தமிழ்ப் பெண்களின் உடைகளில் பெரிய ஒரு மாற்றத்தை இயலுமாக்கியுள்ளன. இதிற் பல்வேறு விதங்களில் மாற்றங்கள் இயலுமாகியுள்ளன. மத்திய கிழக்கிற்கும் பிற அயல் நாடுகட்கும் தொழில் தேடிச் சென்றவர்கள், தங்களுடைய குடும்பத்தினருக்கும் உறவினர்கட்கும் அன்பளிப்பாக் கொண்டு செல்கிற சில உடைகள் வழமையான உடைகளினின்றும் வேறுபட்டிருந்தாலும் "பெண்மை", "அடக்கம்" என்கிற வரையறுக்கட்குட்பட்டவையாக இருந்தன. இவ்வாறான உடைகள் பொது இடங்களில் அணியப்படாவிடினும். குடும்பத்தினர், உறவினர் முன்னிலையில் அணியப்பட்டன, பெண்கள் மத்திய கிழக்கிற்கும் பிற நாடுகட்கும் புலம்பெயர்ந்த போது, தாங்களே தமது உடைகளைத் தெரிவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. வெளிநாடுகளிற் கணிசமான அளவு காலம் வாழ்ந்து இலங்கைக்குத் திரும்புகிற பெண்களிற் சிறுபான்மையானோரை விட மற்றவர்கள் பொது இடங்களிற் சேலை அணிவதே நீண்ட கால வழக்கமாயிருந்தது. எனினும் தமிழரின் புலப்பெயர்வு 1983க்குப் பின் எதிர்பாராத சூழ்நிலைகளில் நிகழ்ந்ததன் பின்பு பெண்களின் உடைகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. குறிப்பாகத் தமிழகத்தின் நகரங்களில் பெண்களின் உடைகள் வசதி கருதியும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் காரணமாயும் வடநாட்டு உடைகளைப் பின்பற்றி சல்வார்-கமிஸ் என்று மாற்றம் பெற்ற சூழ்நிலையில், தமிழகத்துடன் ஏற்பட்ட புதிய தொடர்புகளின் விளைவாகவும், இலங்கையிற் தமிழ்ப்பெண் களும் சல்வார்- கமிஸ் அணிவது அதிகமாகத் தொடங்கியது. அது எளிதாக ஏற்படக் கூடியதாக இருந்ததற்குக் காரணம் அதற்கு ஒரு இந்தியப் பண்பாட்டு அடையாளத்தை வழங்க இயலுமாக இருந்தது தான்.

> *தமது சடங்குகள் பற்றியும் பகுத்தறிவுக் கொவ்வாத பலவேறு நம்பிக்கைகள் பற்றியுமான கேள்விகளை ஒரு புதிய தலைமுறையினர் எழுப்பும் வரை மரபின் பேரால் நடப்பவற்றைச் சிறிது நெகிழ்த்துகிற முயற்சிகள் மட்டுமே இயலுமாயிருக்கும்.*

சிரமங்கள் மிக்க புலம் பெயர்ந்த வாழ்வில் சேலையை விடச் சிக்கனமாகப் பெண்களின் முழு உடலையும் மூடக்கூடிய தைத்த ஆடைகள் பலவும் ஏற்புடையனவாகின. அதை விட கொழும்பு நகரத்தின் வசதிபடைத்த பெண்கள் வீட்டுக்கு வெளியே அணியத் தொடங்கிய ஆடைகளும் மேற் கூறிய விதமான மாற்றங்கட்குத் தூண்டுகோலாக அமைந்தன. இவ்வாறு பலவேறு அகக் காரணிகளும் புறக்காரணிகளும் பெண்களது ஆடைகளில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள போதும், சிங்களப் பெண்களுடன் ஒப்பிட்டால் தமிழ்ப் பெண்களது ஆடைகளில் பழைமைவாதத்தின் தாக்கம் கூடுதலாகவே இருக்கக் காணலாம். ஆண்களின் உடைகளைப் பொறுத்வரை அவர்களது சமூக நிலைக்கும் வாழுகின்ற சூழலுக்கும் ஏற்றவிதமாகக் காலத்தையொட்டிய மாற்றங்கள் அதிகப் பிரச்சனையின்றி ஏற்புடையனவாகி விட்டன. கொலனிய யுகத்திலிருந்தே சூழலின் நிர்ப்பந்தங்களால் ஆண்கள் ஐரோப்பிய உடைகளைப் பின்பற்றி அமைந்தவை உடைகளைத் தத்தமது வர்க்க, சமூக நிலைகட்கமைய அணிகின்றனர். எனவே தமிழ்ப் பண்பாட்டை அடையாளப்படுத்துகிற உடைகள் தமிழரின் அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாக இல்லை எனலாம். அரசியல்வாதிகள் கூட இப்போது தமிழரின் "தேசிய உடை" எனப்படுகிற சட்டையையும் வேட்டியையும் சிறப்பான நிகழ்ச்சிகட்கு மட்டுமே அணிகின்றதைக் காணலாம். தமிழரின் தேசிய உடையும் சிங்களவரினது தேசிய உடையும் என்பது சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் தேசிய எழுச்சிக் காலத்தின் தொடக்கத்தில் வங்காளத்தில் அணியப்பட்ட உடையைப் பின்பற்றி அமைத்தவை என்பதைக் கருத்திற் கொள்வது தமது மரபுகளின் தொன்மையும் வாழுங்காலமும் பற்றிய சில மயக்கங்கள் தெளிவதற்கு உதவும்.

இத்தனைக்கும் நடுவே கோவில், திருமணங்கள், சாவுவீடுகள் என்பனவற்றுடன் தொடர்புடைய நிகழ்வுகளின் இன்னமும் 'மரபு சார்ந்த' 'தமிழர் பண்பாட்டுக்குரிய' உடைகள் வற்புறுத்தப்படுகின்றன.இவையாவும் ஒருசீரான முறையிற் கடைப்பிடிக்கப்படுவதாகக் கூற இயலாது. இந்து மணப் பெண்களது உடைகள் அடிப்படையில் ஒரே விதமானவை எனினும் மணமகனின் உடை வேட்டி சட்டைக்குப் பதிலாக நவீன வட இந்தியத் தோரணையில் அமைந்த ஷெர்வாணி- காற்சட்டையாக மாறி வருகிறதை வசதி படைத்த நடுத்தர வர்க்கத்தினரிடையே காணலாம். ஆனால் மணப்பெண் சேலையையே அணிய வேண்டியுள்ளது. கிறிஸ்தவர்களிடையிற் கூட ஆங்கிலம் படித்த வசதிபடைத்த உயர் நடுத்தர வகுப்பினரை விட்டால் மணப்பெண் சேலை அணிவதுதான் வழமையாயுள்ளது. ஆண்களின் உடை மேல்நாட்டுத் தோரணையில் அமைவது வழமையாகி வருகிறது.

இந்துக் கோவில்களுக்குள் பெண்கள் சேலையுடன் செல்லுமாறு எதிர்பார்க்கப்பட்டாலும் நகரவாழ்வின் நிர்ப்பந்தங்கள் சல்வார்-கமிஸ் அணிந்து செல்வதை மெல்ல மெல்ல ஏற்புடையதாக்கியுள்ளது. எனினும் முக்கியமான சடங்குகளிற் பங்குபற்றும் போது உடைகள் பற்றிய கட்டுப்பாடுகள் மிகுதியாகவே உள்ளன. சில கோவில்கட்குள் ஆண்கள் இடுப்பிற்கு மேல் உடை அணிந்து செல்ல முடியாது என்பதும் வயது வந்த பெண்கள் பாவாடை- தாவணி அல்லது சேலையுடனேயே செல்ல முடியும் என்பதும் கவனிக்கத்தக்கது.

முன்னர் குறிப்பிட்டவற்றிலிருந்து தமிழ்ப் பண்பாட்டிற்குரிய உடைகளெனக் காலத்தால் மாறாத எதுவும் இருந்ததாகக் கூற இயலாது எனவும் பாரம்பரியமாக வாழ்ந்து வருகிற பிரதேசங்களிலும் கடந்த சில தசாப்தங்கட்குள் தமிழரது வழமையான உடைகள் பெரும் மாறுதலுக்கு உள்ளாகியிருப்பதையும் நாம் காணலாம். அதே வேளை மரபின் பேராலும் பண்பாட்டின் பேராலும் சில உடைகள் தொடர்ந்தும் அணியப்படுகின்றன. சமயச் சார்பான சடங்குகளிலேயே இவ்வாறான மரபு பேணல் அதிகங்காணப்படுவதையும், "முறையான" உடைகளெனக் கருதப்படுவன வர்க்க அடிப்படையில் வேறுபடுவதையும் நாம் காணலாம்.

மரபு என்ற பேரில் சமுதாய வழக்கில் உள்ள சம்பிரதாயமான உடைகளுக்கு மிக நீண்ட வரலாற்றுப் பின்புலம் இருப்பதாகக் கூற இயலாது. எனினும், இன்றைய சமூக அரசிற் சூழலில் தமிழ், சைவ அடையாளங்களை வற்புறுத்துகிற ஒரு போக்கின் விளைவாகச் சடங்குகளிற் வழமை பேணப்படுவது மட்டுமில்லாமல் வழக்கொழிந்து போன நடைமுறைகளும் மீட்டெடுக்கப்படுகின்ற போக்கை நாம் காணுகிறோம். எனவே சடங்குகளுடன் தொடர்புடைய உடைகள் அன்றாட வாழ்வில் அணியப்படுகின்றவற்றினின்று மேலும் மேலும் வேறுபட்டு அமைவது எதிர்பார்க்கக் கூடியதே. தமது சடங்குகள் பற்றியும் பகுத்தறிவுக் கொவ்வாத பலவேறு நம்பிக்கைகள் பற்றியுமான கேள்விகளை ஒரு புதிய தலைமுறையினர் எழுப்பும் வரை மரபின் பேரால் நடப்பவற்றைச் சிறிது நெகிழ்த்துகிற முயற்சிகள் மட்டுமே இயலுமாயிருக்கும்.

---

**வடக்கு கிழக்கைப் பிரிப்பதும்**

**6ம் பக்க தொடர்ச்சி**

ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரப் பங்கீட்டிற்கு ஆதரவாக பேசினாலும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை அங்கீகரிக்கும் கருத்துக்களையே கூறிவருகிறது. 19972-78 அரசியல் யாப்புகளில் பௌத்த மதத்திற்கு சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளதைப் பற்றி அக்கட்சி கவலைப்படவில்லை.

மொழி சமத்துவம் பற்றி கூறுகின்ற அக்கட்சி "சிங்களம் இலங்கையின் ஆட்சி மொழி தமிழும் ஆட்சி மொழியாகும்" என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்டவாக்கத்தில் தமிழ்மொழி இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை பற்றிக் கவலைப்படுவதாக இல்லை. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விட பிரதேசமாக இருந்துள்ளதை மறுக்கும் வகையில் வடக்கு கிழக்கிற்கு வெளியிலேயே அதிகமான எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அரசியலமைப்பு இனநல்லிணக்க அமைச்சருமான டி.டபிள்யூ குணசேகர தெரிவித்து வருகிறார்.

இக்கருத்து ஜே.வி.பி யினதும் சிஹல உறுமயவின் கருத்திற்கு எவ்வகையிலும் குறைவானதல்ல. வடக்கு கிழக்கு தனியான பிரதேசமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் வடக்கு கிழக்கிற்குவெளியில் வாழும் தமிழர்கள் சிங்களவர்களால் அடித்து விரட்டப்படுவார்கள் என்று அக்கட்சிகள் கூறிவருகின்றன.

அதிகாரப்பங்கீட்டின் அடிப்படையிலான அரசியல் தீர்வு பற்றிய விடயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைப்போன்று லங்கா சமசமாஜக்கட்சியும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டதாகவே இருக்கிறது.

இதற்கு அப்பால் பல இடதுசாரி அமைப்புகள், ஜனநாயக அமைப்புகளும் லிபரல் அமைப்புகளும் அதிகாரப்பங்கீட்டின் அடிப்படையில் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கின்றன.

சுயநிர்ணய உரிமை அதிகாரப்பங்கீடு சுயாட்சி என்பவை மாக்சியத்திற்குரியன என்று ஏற்றுக் கொள்ளாத பல முதலாளித்துவ நாடுகள் அதிகாரப்பங்கீட்டின் அடிப்படையில் தேசிய இனங்களின் பிரச்சினைகளை தீர்க்க முற்பட்டுள்ளன. பெல்ஜியம் சுவிற்சலாந்து போன்றன அதிகமாகவே அதிகாரங்களை பகிர்ந்துகொள்ளும் சட்டங்களை ஒரு சில வருடங்களுக்கு முன்னர் ஏற்படுத்தியுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

எனவே நாட்டுப்பிரிவினையினால்தான் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை கொண்டதாக இருக்க முடியுமென்பதில்லை. ஒரே நாட்டிற்குள் ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் கொண்டதாக தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடியும். அதற்கு தேசிய இனங்களுக்கு அதிகாரங்கள் பங்கிடப்பட வேண்டும். இது கம்யூனிஸ்ட்டுகள் நம்பிக்கை கொண்டுள்ள மத்தியப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தினை கட்டுவதற்கு பாட்டாளி வர்க்கம் ஒரு போதும் தடையாக இராது.

மூன்றாம் உலக நாடுகளில் முதலாளித்துவ அமைப்பை தொடர்ந்து பாதுகாத்து வருவதற்கு இவ்வாறான இன, மத ஏற்றத்தாழ்வுகள், மேலாதிக்கங்கள் அவசியமாவதால் அச்சிக்கல்களை தொடர்ந்து வைத்திருக்கவே ஆளும் முதலாளி வர்க்கம் விரும்பும். முதலாளித்துவத்தின் முதிர்ச்சியால் எல்லா விடயங்களும் மூலதனத்துடனான கொடுக்கல் வாங்கல்களாக மாறும் போது அது நின்று பிடிக்க முடியாமல் இன்னொரு கட்டத்தை நாடும். அக்கட்டம் சோஸலிசமாகும். அக்கட்டம் வருவதை ஆளும் முதலாளிவர்க்கம் விரும்பாதபடியால் இனமத முரண்பாடுகளை தொடர்ந்து வைத்திருக்கவே விரும்பும். போராட்டங்களால் அதிகாரங்கள் பங்கிடப்பட்டாலும் வேறு வேறுவகையில் முரண்பாடுகள் தொடர்ந்திருக்கும். ஆனால் இன ஒடுக்கல் தணிக்கப்படவே செய்யும்.

இன ஒடுக்கலை தனிப்பதற்கான அதிகாரப்பங்கீட்டு ஏற்பாடுகளினூடாக முதலாளி வர்க்கத்தை கேள்விக்குட்படுத்த முடியும். அதன் இருப்பை ஆட்டம் காண வைக்க முடியும். எனவே இன்னொரு வகையில் அதிகாரப் பங்கீட்டினால் ஏற்படும் முரண்பாடுகள் முதலாளித்துவ சமூகத்திற்கு எதிரான சவாலாக முதிர்ச்சியடைய வாய்ப்புகள் ஏற்படும்.

பாட்டாளிவர்க்க தலைமையிலின்றி வேறு வர்க்கங்களின் தலைமையில் நடைபெறும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களில் தற்போது ஏகாதிபத்தியத் தலையீடுகள், செல்வாக்குகள் இருக்கின்றன என்பதால் அப்போராட்டங்களின் நியாயப்பாடுகள் மறுக்கப்படக் கூடியதல்ல. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அப்போராட்டங்கள் வளர்ச்சியடைய கம்யூனிஸ்ட்டுகள் பங்காற்ற வேண்டும். அதனூடாகவே தேசிய இனங்கள் விடுதலையை உறுதி செய்யமுடியும். அதற்கு இடைக்காலத்திட்டங்களாக அமையும் சமாதான முயற்சிகள், அரசியல் தீர்வுகள் அதிகாரப்பங்கீடுகள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு சார்பாக இருப்பதை ஏற்றுக் கொள்வதில் கம்யூனிஸ்டுகள் பின்நிற்க மாட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய மேலாதிக்கத்தை நியாயப்படுத்துகிற ஒரு நூல்

சேதுக் கால்வாய்த்திட்டம்- அரசியல் பொருளாதார இராணுவ சூழலியல் நோக்கு.கே.ரீ. கணேசலிங்கம், தி.திருக்குமரன், பிரம்மா வெளியீடு, யாழ்ப்பாணம், 2006, ப.93, ரூ.150.

இது முற்றிலும் வேறுபட்ட நோக்குடைய இருவர் எழுதிய இரண்டு நூல்களின் இணைப்பென்பது தகும். இந்த நூலின் முன்னுரை போல கோமாளித்தனத்தைக் காண்பது அரிது. முன்னுரையை எழுதியவர் தான் எழுதிய இரண்டு பக்க நீளக் கணிதச் சூத்திரங்கள் வாசகர்கட்கு விளங்குமா என்ற கணிப்பின்றியும் எழுதியவை சரியாக அச்சாகியுள்ளனவா என்று சரிபார்க்க அக்கறையற்றும் இருந்திருக்கிறாரென்றே தோன்றுகிறது. சமன்பாடுகளை வழங்கிய அவருக்கு அவற்றின் தாற்பரியம் எவ்வளவு தூரம் விளங்கியது என அறியேன். கடவுள் இல்லை என்று பழைய ரஷ்யாவின் (ஸார்) மன்னரது அரண்மனையில் வெற்றிகரமாக வாதிட்ட ஒருவருக்குக் கணிதம் தெரியாது. எனவே ஒருவர் அவருடன் வாதிட்டு ஒரு கணிதத் சூத்திரத்தைக் கூறி "ஆகவே கடவுள் இருக்கிறார்" என்று கூற, நாத்திகரால் அதை மறுத்து வாதிட இயலவில்லை. எனவே அச்சமன்பாடு கடவுளை நிரூபித்த சமன்பாடு என்று அழைக்கப்பட்டது என்ற கதையை இளவயதில் வாசித்திருக்கிறேன். அது உண்மையோ பொய்யோ மற்றவர்கட்கு விளங்காத விதமான வாதங்களை முன்வைத்து விவாதங்களை வெல்லுகிற உத்தி புதியதல்ல. முன்னுரை எழுதியவர் ஏன் இப்படி ஒரு சிறுபிள்ளை விளையாட்டில் இறங்க வேண்டுமோ விளங்கவில்லை.

நூலின் முதலாவது பகுதியை எழுதியுள்ள கணேசலிங்கம் இந்தியாவின் மேலாதிக்கக் கொள்கை அனைத்திற்கும் சீனாவின் வளர்ச்சி, மிரட்டல், விஸ்தரிப்பு போன்ற நியாயங்களை வழங்கச் சீன விரோதப் பிரசார அமைப்புக்களிடம் மிகவும் கடன்பட்டுள்ளார் என்றே நினைக்கிறேன். அம் முயற்சியின் போக்கில் சீனாவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் ராணுவ விஸ்தரிப்பாகவும் ஆக்கிரமிப்பாகவும் மேலாதிக்கமாகவும் காட்டப்பட்டுள்ளது. அதற்குச் சான்றுகள் காட்டி மறுப்பதாயின் இம் மதிப்பீடு ஒரு நீண்ட தொடராக வெளிவர வேண்டும்.

இன்றைய சீனாவை நான் ஒரு சோஷலிஸ நாடாக எண்ணவில்லை. உலகின் மக்கள் விடுதலைப் போராட்டங்களின் மிக நம்பகமான நன்பன் என்ற தகுதியைச் சீனா 1980 அளவில் கணிசமாக இழந்துவிட்டது. எனினும் சில முக்கியமான அயற் கொள்கைகள் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளன. சீனப் படைகள் எந்தவொரு அயல்நாட்டிலும் நிலை கொண்டிருக்காது என்பது ஒன்று. எந்த நாட்டின் உள் அலுவல்களிலும் சீனா தலையிடாது. எனினும் சோஷலிஸ சீனம் கொலனிய, ஏகாதிபத்திய நிறவாத ஒடுக்குமுறைகள் போன்றவற்றுக்கெதிரான விடுதலைப் போராட்டங்கட்கு நாடுகட்கிடையிலான உறவில் சர்வதேச உறவின் விதிகளை மீறாமல் ஆதரிக்கும் உரிமையை வற்புறுத்தியது. இன்று அது கைவிடப்பட்டுள்ளது. ஆனால் எதிர்நிலைக்கு அது செல்லவில்லை. சீனா பர்மாவிற்கும் மாலைதீவிற்கும் உரிய இரு தீவுகளில் துறைமுகங்

**தவளையும் எலியும் கூடி வாழ்ந்த பொருந்தா நட்புப்பற்றிய பஞ்ச தந்திரக் கதையை நினைவூட்டுகிறது**

களை விருத்தி செய்ய உதவுகிறது. இதைச் சீனக் கடற்படைத் தளங்கள் அமைப்பதாகக் கூறப்படுகிற திரிப்புக்களைக் கணேசலிங்கம் கேள்வியின்றி மீள உரைக்கிறார். திபெத்திலும் பூட்டானிலும் நேபாளத்திலும் சிக்கிமிலும் சீனாவின் செல்வாக்கு இருந்ததாகவும் அதை ஒரு மிரட்டலாகவும் காட்ட ஆசிரியர் முயன்றுள்ளார். திபெத் சீனாவின் ஒரு பகுதி. இந்தியாவின் அதன் பெருவாரியான மாநிலங்கள் இந்தியா

**-சிவா-**

வின் பகுதிகளாக சில நூற்றாண்டுகள் முன்னதாக மாறுவதற்கு முன்பாகவே திபெத் சீனாவின் ஒரு பகுதியாகியது. நேபாளமும், பூட்டானும் சிக்கிமும் இந்தியாவின் ராணுவ பொருளாதார அரசியல் ஆதிக்கத்தின் கீழ் திணறிய நாடுகள். ஈழ விடுதலை பற்றி அக்கறைப்படுகிற ஒருவருக்கு அந்த நாடுகளின் நிலை பற்றி எதுவித அனுதாபமுமில்லை. அவை சீனாவுடன் வணிக உறவை வளர்ப்பதைக் கூட இந்தியா விரும்பமில்லை என்பது தான் உண்மை. அதை விட முக்கியமாக 1961 வரை சீனாவின் முழு வரலாற்றிலும் இந்தியாவின் எப்பகுதியுடனும் போர் நடந்ததில்லை. 1961 எல்லைப் போரின் காரணம் இந்திய ஆட்சியாளர்களது நியாயமற்ற போக்கு என்பதற்கான ஆதாரங்களை ஏ.ஜி.நூரானி கடந்த சில ஆண்டுகளாக ஃபுரொண்ட்லைன் சஞ்சிகையில் எழுதி வந்துள்ளார். அவையேனும் கணேசலிங்கத்தின் கண்ணிற்பட்டிருக்கவில்லை என்பது ஏன்?

இன்றைய உலக யதார்த்தமென்ன? தடுமாறும் அமெரிக்கப் பொருளாதாரத்தின் நடுவே அமெரிக்கா தனது உலகமயமாக்கலையும் ராணுவ ஆதிக்கத்தையும் முன்னெடுக்கக் கடுமையாக முயல்கிறது. ரஷ்சியாவையும் சீனாவையும் பலவீனப்படுத்துவது சுற்றிவளைப்பதும் அதன் நோக்கங்கள். 1980களிலிருந்தே இஸ்லாமிய தீவிரவாதம் இதற்காகப் பாவிக்கப்பட்டது. இப்போது 1945க்குப் பின்பு கட்டுப்படுத்தப்பட்டிருந்த யப்பானிய ராணுவ வலிமையைக் கட்டியெழுப்ப அமெரிக்கா மும்முரமாகிறதும். இந்தியாவை அமெரிக்கா தனது பங்காளியாக்குகிற முயற்சியில் கணிசமான வெற்றியும் கண்டுள்ளது. அதன் இன்றைய சீன எதிர்ப்பின் நோக்கம் சோஷலிஸ எதிர்ப்பல்ல. சீனாவின் பொருளாதார வளர்ச்சி அமெரிக்காவைப் பயமுறுத்துகிறது. ராஜீவ்காந்தியின் காலத்திலிருந்து மெல்ல மெல்லச் சீரடையத் தொடங்கிய சீன–இந்திய உறவைக் குழப்புகிற முயற்சியில் அமெரிக்காவும் இந்தியாவின் பிற்போக்குவாதிகளும் பல முறைகளில் இயங்குகின்றனர்.


இவ்வாறான பின்னணியிலேயே இலங்கை மீதான மேலாதிக்கத்திட்டங்களின் ஒரு பகுதியான சேது சமுத்திரத்திட்டத்தைச் சீன மிரட்டலுக்கு எதிரான ஒரு அவசிய நடவடிக்கையாகக் காட்டக் கணேசலிங்கம் அல்லற்படுகிறார். இலங்கையில் யார் ஆட்சியிலிருந்த போதும் 1951ல் வணிக உறவாகத் தொடங்கி 1956ன் பின் ராஜதந்திர உறவாகிய இலங்கை– சீன உறவில் அடிப்படையில் மாற்றம் இருந்ததில்லை. 1965–70 காலத்தில், யூஎன்.பி ஆட்சி ஓரளவுக்குச் சீனாவின் நண்பரெனக் கூடிய ரொபேட் குணவர்த்தனவை சீனாவிற்கான தூதராக அங்கு அனுப்பியது. இலங்கையிடம் பக்கம் சாரமைக்கு மேலாகவோ ஆகக் குறைந்து சீனாவுடனான ஒரு சினேக உறவுக்கு மேலாகவோ சீனா எதையும் எதிர்பார்க்கவில்லை. 1961ல் சிறிமா பண்டாரநாயக்க சீன–இந்தியத் தகராற்றில் சுமுக மான நிலையை ஏற்படுத்த முன் வந்தமையிலிருந்து சீனாவுடனான நட்பின் உச்ச நிலையிலும் இலங்கை சீன சார்பு நிலைப்பாட்டை எடுக்கவில்லை என விளங்கும்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான முருட்டு எண்ணெய் மத்திய கிழக்கினின்றும் தெற்கு கிழக்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் இப்போது வெனசுவேலாவிலிருந்தும் இந்து சமுத்திர வழியாகவே செல்ல இயலும். என்றாவது அதை அமெரிக்கா தடுக்கும் முயற்சியில் இறங்காது என்று யாராலுஞ் சொல்ல இயலாது. டியேகோ கார்சியாவில் அமெரிக்காவின் தளம் உள்ளது. எனவே தேவையான போது எண்ணெய்க் கப்பல்கள் தரித்து நிற்கவும் தென்கிழக்காசியக் கடற்பரப்பில் அமெரிக்கா தடை ஏற்படுத்தினால் தரை வழியாக எண்ணெய்யைப் பெறவும் சீனா வழிகளைத் தேடுவது எவ்வழியில் இந்தியாவுக்கு மிரட்டலாகும் என்று கணேசலிங்கம் விளக்குவாரா?

சீனாவுக்கு இன்று இந்தியாவை விட வேறெந்த நாட்டுடனும் பாரிய தரை எல்லைத்தகராறு இல்லை. கடல் எல்லை பற்றித் தகராறுகள் உண்டு. ஆயினும் அவற்றின் தீர்விற்காக வன்முறை பயன்படவில்லை. 1980ல் நடந்த வியட்நாமுடனான மிகவும் வருந்தத்தக்க ஒரு மோதலின் பின்னணியில் சோவியத் யூனியனுடனான சிக்கல்கள் இருந்தன. இந்தியாவின் மேலாதிக்கத்தை ஏற்காத ஒவ்வொரு அயல்நாட்டிலும் இந்தியா பல வகைகளில் குறுக்கிட்டோ ஆக்கிரமித்தோ உள்ளது. எனவே யாருக்கு யார் மிரட்டல் என்றும் இன்று யாரின் சார்பாக இந்தியாவின் சர்வதேச நடவடிக்கைகள் உள்ளன என்றும் கணேசலிங்கம் சிறிது ஆராய்வது பயனுள்ளது.

நூலிலுள்ள கோணல் வாதங்கங்களை நியாயப்படுத்த இயலாது போனாலும் இந்தியா 'தாய் நாடு' என்கிற அனுதாபத்தைத் தூண்டுகிற விதமான வாதங்கள் நூலின் முற்பகுதியில் உள்ளன. இந்தியா என்றொடு தேசம் எப்போதும் இருந்து வந்தது என்ற தோரணையிலான வரலாற்றுக் குறிப்புக்களில் உள்ள பிழைகள் அதிகம். அட்டவணைகளும் தரப்பட்டுள்ள பல ஆள் இடப் பேர்களும் மிகவும் குழப்பமாகவும் பிழை மிகுந்தும் பதிவாகியுள்ளன.

நூலின் முகப்பு சேதுக்கால்வாய்த்திட்டத்தின் பின்னணியே சீன– இந்தியப் போட்டி என்ற கருத்தை வற்புறுத்துகிறது. ஆறு ஆண்டுகள் முன்பு பாக்கு நீரிணைக்குக் குறுக்கே பாலம் அமைக்கிற திட்டமொன்று முன்வைக்கப்பட்டது. சேது சமுத்திரத்திட்டத்தைப் பற்றி அதி தீவிர அக்கறை தமிழகத்தின் ஊழல் மன்னர்களான தி.மு.க தலைவர்கட்கு இருந்ததற்கான விளக்கம் என்ன? சேது கால்வாயின் ஆழப்படுத்தலால் வரக்கூடிய பொருளாதார




நன்மை இல்லை என்றதற்கான வலுவான வாதம் எதுமே ஆசிரியரது கண்ணிற்படவில்லையா? சீனாவைக் காட்டித் தமிழ்மக்களைக் கம்யூனிச விரோதப் பாதையில் தள்ளிய அரசியற் பாரம்பரியத்திலிருந்து முதலாவது நூலாசிரியரால் விடுபட இயலவில்லை என்பது வருந்தத்தக்க ஒரு விடயம். இலங்கைக்குப் பலகாலமாகவே இருந்து வரும் மிரட்டல் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் என்பதை மறைக்கும் முயற்சியாகவே சீனம் பற்றி கணேசலிங்கம் உரத்துக் கூறுகிறார். ஆனால் இன்று அமெரிக்காவும் இந்தியாவும் எதிரெதிராக நிற்காது ஒத்துழைக்கின்றமை தமிழர் விடுதலைக்கும் முழு இலங்கையின் மக்களுக்கும் கெடுதலானது.

திருக்குமரன் எழுதிய சூழலியல் நோக்குத் தொடர்பான இரண்டாவது பகுதி பயனுள்ள பல தகவல்களைக் கொண்டது. சில சொற்களைத் தமிழில் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்தால் தெளிவாகவும் முறையாகவும் விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இந் நூல் வெளிவர முன்னரே சூழலியற் பிரச்சனையைப் பற்றி சிவ. இராஜேந்திரன் உட்படப் பலரும் எழுதியுள்ள விடயங்களைத் திருக்குமரன் அறியாமல் இருந்திருக்க முடியாது. எனினும் அந்தப் பயனுள்ள பங்களிப்புக்கள் பற்றி அவரது உசாத்துணைகளில் ஒரு குறிப்பேனும் இல்லாமை தமிழில் வருகிற ஆய்வுகளின் அவலத்தின் ஒரு அடையாளமோ என்றே எண்ணத் தூண்டுகிறது.

எவ்வாறாயினும் திருக்குமரனது பங்களிப்பின் பெறுமதி நூலின் பிற பகுதிகளுடன் சேர்ந்து வழங்கப்பட்டுள்ளதால் கணிசமான மதிப்பிறக்கம் பெறுவதை அவர் அறிய வேண்டும். தனது ஆய்வை மேலும் விரிவுபடுத்தி ஒரு தனி நூலாக் வெளியிடுவாதாயின் அது பயனுள்ள்தாக அமையும்.

# ஆட்சிக் கவிழ்ப்புக்கு தயாராகிறது அமெரிக்கா

## புஷ்ஷின் புதிய கியூபா திட்டம்

அமெரிக்க அரச திணைக்களத்தால் ஜீலை 10ம் திகதி வெளியிடப்பட்ட கியூபா குறித்த புதிய அறிக்கை கியூபாவில் ஆட்சி மாற்றம் பற்றியும் அதற்கான நடவடிக்கைகள் பற்றியும் புஷ் நிர்வாகம் கொண்டுள்ள திட்டங்களை மேலோட்டமாக தெளிவுபடுத்தி உள்ளது. இவ்வறிக்கையின் சுருக்கம் இதுதான். "கியூபா திட்டங்கள் எல்லாம் தயார் செய்ய வெனிசுவேலா அதற்கான செலவுகளைச் செய்கிறது. இதன் அடிப்படையில் கியூபாவில் ஆட்சி மாற்றம் அவசிமானதும் அவசரமானதும் அதே வேளை அமெரிக்க தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு வெனிசுவேலா அச்சுறுத்தலாகவும் இருக்கிறது."

93 பக்கங்கள் நீளுகின்ற இந்த அறிக்கை கியூபாவை விடுவிப்பதற்கு உதவுவதற்கான ஆணையகத்தால் (Commission for Assistance to a Free Cuba) தயாரிக்கப்பட்டது. இதில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொண்டலிசா றைஸ் மற்றும் வர்த்தகத்துக்கான செயலாளர் கார்லோஸ் குதிராஸ் ஆகியோர் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவ்வாணையகத்தின் ஆலோசனைகளை புஷ் ஏற்றுக்கொண்டுள்ளார். இதில் 80 மில்லியன் அமெரிக்க டொலர்களை அடுத்த 2 ஆண்டுகள் செலவு செய்வதற்கான வரவுசெலவுத் திட்ட அறிக்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன்படி அடுத்த 2 ஆண்டுகளுக்குள் கியூபாவில் ஆட்சி மாற்றம் குறிப்பாக கியூபத் தலைமையில் மாற்றம் முக்கியத்துவம் பெறுகிறது. இவ்வறிக்கையில் வெளியிடப்படாத கியூப ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துகின்ற இரகசியத் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிக்கையானது கியூபாவைப் பற்றியதாக இருக்கிற போதும் வெனசுவேலா இந்த நாடகத்தின் முக்கிய பாத்திரமாக திகழ்கிறது. வேறுவேறான 9 இடங்களில் வெனசுவேலா குறிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் கருதுகோளின் படி சாவேஸ்ஸின் அரசாங்கமே நிதியுதவி மூலம்

**-ஏகலைவா-**

கியூப அரசாங்கத்தை செயற்படுத்துகிறது. கியூபா வெளிநாட்டு நிதியுதவிகளுடனேயே நின்று நிலைக்க முடியும். எனவே இதற்கு தலையாய நிதியுதவிகளை வெனசுவேலா அளிக்கிறது என்கிறது அறிக்கை.

கியூபாவிற்கு உதவுவதோடு மட்டும் அல்லாமல் வெனசுவேலாவின் நிதியுதவிகள் இலத்தீன் அமெரிக்காவை சிவப்பாக மாற்ற முன் நிற்கின்றன என்று குற்றம் சாட்டுகிறது அமெரிக்கா. அறிக்கையின் முதலாவது பந்தி "கியூப அரசு சாவேஸ்ஸினுடைய நிதியுதவிகளைக் கொண்டு பாரிய திட்டங்களையும் வலையமைப்புக்களையும் உருவாக்கி இலத்தீன் அமெரிக்கா எங்கும் ஜனநாயக அரசுகளை கவிழ்த்து வருகிறது" என்று சொல்லுகிறது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கவனிக்கப்பட வேண்டிய நாடாக பொலிவியாவும் விளங்குகிறது. கியூபாவும் வெனசுவேலாவும் பாடுபட்டுத்தான் இவோ மொராலஸ்சை ஜனாதிபதி ஆக்கின என்பது அமெரிக்காவின் வாதம். உண்மையில் காஸ்ரோவும் சாவேஸ்சும் பொலிவியாவில் செய்வது என்ன?.719 கியூப மருத்துவர்கள் பொலிவியாவில் இருக்கிறார்கள். இவர்கள் பொலிவிய மருத்துவர்கள் செல்ல பயப்படுகின்ற மறுக்கின்ற அந்தீஸ் மலைகளின் பின்தங்கிய பகுதிகளுக்கு எல்லாம் செல்கிறார்கள். இதுவரை 776,000 நோயாளிகளுக்கு கியூப மருத்துவர்கள் வைத்தியம் செய்துள்ளனர். 326 உயிர்களைக் காப்பாற்றியுள்ளனர். வெனசுவேலா ஜனாதிபதி கியூகோ சாவேஸ் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மின்சக்தி முதலீடு ஒன்றை பொலிவியாவிற்கு செய்துளளார். அதே வேளை தேயிலை, கோப்பி, கொக்கா போன்ற உற்பத்திகளுக்கும் வெனிசுவேலா நிதியுதவி அளித்து வருகிறது. வெனசுவேலா அரசாங்கம் பொலிவியாவின் பின்தங்கிய கிராமப்பாடசாலைகளுக்கு கம்பியூட்டர்களையும் அன்பளிப்புச் செய்துள்ளது. கியூப மருத்துவர்களும் வெனிசுவேலா நிதியுதவிகளுமே இலத்தீன் அமெரிக்காவை கெடுக்கின்ற பிரதான அம்சங்கள் என்பதே புஷ் நிர்வாகத்தின் கருத்து. புஷ் நிர்வாகம் கியூபாவில் ஆட்சிமாற்றத்தை கொண்டுவருவதற்கு அரசியல் மற்றும் இராணுவ முறைகளை பின்பற்ற தயாராக இருக்கிறது. அரசை தூக்கி எறிய கியூபாவில் இருந்து இடம்பெயர்ந்த கியூபர்களை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவும் தயாராக இருக்கிறது. இம்முறை சதி மட்டுமல்ல ஒரு வகையான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகவும் இருக்கலாம். அமெரிக்கா 2002ல் சாவேஸ்ஸை பதவியில் இருந்து அகற்ற முயன்று தோற்றுப்போனது. இரு நாடுகளிலும் பயங்கரவாத

தொடர்ச்சி 11ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தாராளமயம் தனியார் மயத்தால் வறுமையை ஒழிக்க முடியுமா?

முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரமும் உலகமயமும் உலகில் வளர்ச்சியையும் சுபீட்சத்தையும் கொடுக்கிறது என்றெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டாலும் யதார்த்தத்தில் ஒரு மாறுபட்ட உலகையே நாம் காண்கின்றோம்.

உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்கள் சந்தைப் போட்டா போட்டி மூலம் வறிய நாடுகள் அவற்றின் வறுமைச் சகதியிலிருந்து மீட்சி பெற்று விடுவார்கள் என்ற அடிப்படையிலேயே 1980 களிலும் 1990ன் பெரும்பகுதியிலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சர்வதேச வர்த்தகத்தில் தாராளமயம் தனியார்மயம் உலகமயம் என்பவையே உலகளாவிய பொருளாதார முன்னேற்றத்திற்கு உகந்த வழியென திருவாய்மலர்ந்தனர். ஆனால் உண்மையில் விஞ்ஞான பூர்வமான தரவுகள் வேறு தகவல்களையே தருகின்றன.

உலகவர்த்தகம் பெரும்பாலும் இருபத்தைந்து (25) சர்வதேச இராட்சத கம்பனிகளின் கைகளிலேயேயுள்ளது. மூன்றாம் உலக நாடுகள் தங்களுடைய பொருளாதாரத்தை தாங்கள் தம்வசமே வைத்திருப்பதாகப்ன பெருமை பேசி இறைமை சுயாதிபத்தியம், சுய கௌரவம் எனப் பிதற்றிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் யதார்த்த நிலைமை அவ்வாறு இல்லை. புஷ் சாம்ராஜ்ச்சியமும் சர்வதேச கம்பனிகளும் இணைந்து புதிய கொலனித்துவத்தை நாசுக்காக பிரயோகித்து நாடுகளின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம், ஒருமைப்பாடு என்பவற்றை அப்பட்டமாக சீர்குலைத்து வருவதையே காணமுடிகிறது.

எமது நாட்டில் மானியங்கள் வழங்கப்படுவதை நிறுத்துமாறு செல்வந்த நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிதி நிறுவனங்கள் எமது அரசாங்கங்களுக்கு ஆலோசனை வழங்குகின்றன. மானியம் வழங்கினால் மக்கள் சோம்பேறியாய் விடுவார்கள் எனவும் நாடு முன்னேறுவதற்கு ஒரே வழி மானியங்களை நிறுத்துவது தான் எனவும் ஆலோசனைகள் கூறிவந்துள்ளன. அதேசமயம் செல்வந்த நாடுகள் தங்கள் நாட்டில் மானியங்களை வாரி வழங்கி வருகின்றன. செல்வந்த நாடுகள் தமது விவசாயிகளுக்கு வருடமொன்றிற்கு முப்பதாயிரம் (30000) கோடி டொலர்களை மானியமாக வழங்குகின்றன. இந்தத் தொகையானது அந்த நாடுகள் மூன்றாமுலக நாடுகளுக்கு வழங்கும் பொருளாதார வளர்ச்சிக்கான தொகையின் ஆறு மடங்காகும்.

உலகமயம் என்ற மத்திரத்தால் மூன்றாம் உலக நாடுகள் வறுமையில் மூழ்கும் அதே வேளை செல்வந்த நாடுகள் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளன. செல்வந்த நாடுகளின் சனத்தொகையானது உலக சனத்தொகையில் இருபது வீதம் மட்டுமே. ஆனால் உலக செல்வத்தின் எண்பது வீதம் அவற்றிடமுள்ளது. உலகின் மிகப் பெரிய செல்வந்தர்களில் ஒரு வீதத்தினரிடமுள்ள செல்வமானது வறிய நாடுகளின் ஐம்பத்தேழு வீதமானவரின் செல்வத்திற்கு சமமானது.

வளர்முக நாடுகளின் 130 கோடி மக்கள் தினமொன்றிற்கு ஒரு டொலர் வருமானத்துடன் உயர் வாழ்கிறார்கள். மேலும் 170 கோடி மக்கள் தினமொன்றிற்கு இரண்டு டொலர்களையே பெறுகிறார்கள்.

உலக சனத்தொகையில் அரைவாசிப் பேர் வறுமையில் வாழ்கின்றனர். அதாவது 300 கோடி மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர்.

மூன்றாமுலக நாடுகளில் 15க்கும் 24 வயதிற்குமிடைப்பட்ட வயதினரில் 5கோடி 70 இலட்சம் இளைஞர்களும் 9 கோடி 60 இலட்சம் யுவதிகளும் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள். திறந்த பொருளாதாரத்தையும் தராளமயத்தையும் ஜே.ஆரின் அரசு 1977ல் புகுத்தியது. அதே பொருளாதாரக் கோட்பாட்டையே இன்றுவரை மாறிமாறி வந்த ஆட்சியாளர் கைப்பிடித்து வருகின்றனர். பாராளுமன்ற இடதுசாரிகளும் இனவாத ஜே.வி.பி யினரும் ஆட்சியில் பங்காளர்களாகவுள்ள தற்போதைய அரசும் உலகமயம் தனியார்மயம் என்ற கோட்பாட்டையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர். இதன் விளைவு தான் என்ன? இலங்கையில் 50 இலட்சம் மக்கள் மாதாந்தம் ரூபா. 2040/= விற்கு கீழ் வருமானம் பெறுகின்றனர்.

அரசாங்கத்தின் புள்ளி விபரத்தின் படி ரூ2040/= விற்கு கீழ்வருமானம் பெறுபவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள். அதற்கு மேலே வருமானம் பெறுபவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் இருப்பதாகவும் அரசாங்கம் புள்ளி விபரம் காட்டுகிறது.

இதன்படி நாட்டின் சனத்தொகையில் 25 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர் என்றும் கணக்குக் காட்டப்படுகிறது. வடக்கும் கிழக்கும் இந்தக் கணக்கெடுப்பில் அடங்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

இன்று இந்தியா நாளை இலங்கை?



மாவட்டத்திற்கு மாவட்டம் வறுமையின் கோரம் வேறுபடுகின்றது. மொனராகலை மாவட்டத்தில் 37 வீத மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். கொழும்பு மாவட்டத்தில் 6 வீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களுக்கு அப்பாலேயே வறுமை என்பது இருந்து வருகிறது. வறுமையின் கோரத்தனத்தை அரச- அரசார்பற்ற நிறுவனங்களின் புள்ளி விபரங்களால் மட்டும் அளந்து விட முடியாது. இன்று இலங்கையில் ரூபா 5000 சம்பளம் பெறும் ஒரு குடும்பத்தினால் வறுமை அற்ற நிலையில் வாழ்கிறார்கள் என்று கூற முடியுமா? எனவே மொத்த சனத்தொகையில் 40 வீதமானோர் வறுமைக் கோட்டின் கீழே வாழ்ந்து வருகின்றனர் என்பதே உண்மை நிலையாகும்.

சிறீ

# நுகர் பொருளே பரம்பொருளாக!

பசிப்பிணி என்ற சொல்லைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். வசதிப்பிணி (Afflenza) என்ற நோயை உலகுக்கு அறிமுகம் செய்திருக்கிறது அமெரிக்கா. "மேலும் வாங்கு மேலும் வாங்கு" என்ற வெறி பிடித்த துரத்தலின் விளைவாகத் தோன்றும் மிகை உழைப்பு, கடன், பதற்றம், மன அழுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கிய துன்பகரமான சமூகத் தொற்று நோய் என்று இதனை வரையறுத்திருக்கிறார்கள் அமெரிக்க உளவியல் மருத்துவர்கள்.

ஷாப்பிங் தான் அமெரிக்கர்களுக்கு பிடித்த பொழுதுபோக்கு. நோய் தீர்க்க ஷாப்பிங், உற்சாகத்திற்காக ஷாப்பிங், ஷாப்பிங்கிற்காக ஷாப்பிங் என வாங்கிக் கொண்டே இருப்பது என்பது அமெரிக்க கலாச்சாரக் கூறுகளில் ஒன்றாகிவிட்டது.

தங்கள் குழந்தைகளுடன் வாரம் வெறும் 40 நிமிடமே விளையாடும் 70% அமெரிக்கர்கள் வாரம் 6 மணி நேரம் ஷாப்பிங் செய்கிறார்கள். நாளோன்றுக்கு 7 மணிநேரத்தை தொலைக்காட்சியின் முன் செலவிடும் குழந்தைகள் பெற்றோருடன் பேசும் நேரம் வெறும் 15 நிமிடங்கள் மட்டுமேயாகும். டி.வி விளம்பரத்துக்குப் பலியான அமெரிக்க குழந்தைகளால் தூண்டப்படும் வியாபாரம் மட்டும் ஆண்டுக்கு 45 லட்சம் கோடி ரூபாய்.

1950 இல் துவங்கிய அமெரிக்க மக்களின் நுகர்வுக் கலாச்சாரம், நுகர்வு வெறியாய் வளர்ந்து கொள்ளை நோயான அஃப்லூயென்ஸாவாக இன்று ஒட்டு மொத்த சமூகத்தையே சிதைத்துவிட்டது. இந்த தணியாத நுகர்வுத் தாக்கத்தினால் அமெரிக்கர்கள் ஆண்டு தோறும் ஆளுக்கு 21000 டாலர்கள் நுகர்வு பொருட்களின் மேல் செலவழிக்கிறார்கள். அமெரிக்காவில் உயர் பள்ளிகளைவிட ஷாப்பிங் மால்கள் இரு மடங்காக பெருகியுள்ளன.

இவ்வளவு செலவிற்கும் அமெரிக்கர்கள் வாங்கியவை பொருட்கள் பொருட்கள், பொருட்கள் மட்டுமே. பொருட்களை வாங்கி வைப்பதற்காக அமெரிக்கர்களின் வீடுகள் விரிந்தன. அதாவது வீட்டில் மனிதர்கள் பயன்படுத்தும் இடத்தைக் காட்டிலும் பொருட்கள் பயன்படுத்தும் இடம் அதிகரித்தது. சோபா கட்டில் பீரோ போன்ற பொருட்களை வாங்கிவிட்டு வைப்பதற்கு வீட்டில் இடமில்லாமல் வாடகைக்கு லாக்கர் பிடித்து அங்கே அடுக்கி வைத்துப் பாதுகாக்கிறார்கள். இதற்கு அமெரிக்கர்கள் கட்டும் ஆண்டு வாடகை மட்டும் 60000 கோடி ரூபாய் ஆகும்.

இவ்வளவு வாங்கியும் செலவழித்தும் அமெரிக்கர்களால் இன்பமாக இருக்க முடியவில்லை. ஏனென்றால் அமெரிக்கர்களுக்கு நேரம் இருப்பதில்லை. அமெரிக்கர்கள் அதிகமாக உழைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அதிகமாக வாங்க விரும்புகிறார்கள். வாங்கிய கடனை அடைக்க மேலும் அதிகமாக வேலை செய்கிறார்கள்.

ஏனென்றால் இந்த ஷாப்பிங் அனைத்தும் கடனில் தான் செய்யப்படுகிறது. அமெரிக்காவில் ஐந்திற்கும் மேற்பட்ட கிரெடிட் கார்டுகள் இல்லாத நபரை காண்பது அரிது. ஒரு சராசரி அமெரிக்க குடும்பம் கிரெடிட் கார்டுகளில் மட்டும் 7500 டாலர்களுக்கு மேல் கடன் வைத்துள்ளது. இன்றைய நிலையில் 60 லட்சம் அமெரிக்கர்கள் போண்டியாகும் விளிம்பில் உள்ளனர். 60% அமெரிக்கர்களுக்கு வேலை போனால் தனது வாழ்க்கையை 1 மாதம் கூட தாக்கு பிடிக்க முடியாத நிலை. ஒரு அமெரிக்கத் தொழிலாளி 1960 களில் வேலை செய்ததை விட இன்று அதிக நேரம் வேலை செய்கிறான் இதனால் ஏற்பட்ட நேரமின்மை காரணமாக ஒரே வீட்டில் இருந்தாலும் அமெரிக்க குடும்பத்தினர் தனித்தனி தீவுகளாக தொடர்பற்று



வாழ்கின்றனர். நாளொன்றுக்கு 12 நிமிடம் மட்டுமே பேசும் அமெரிக்க தம்பதிகள் தான் உலகிலேயே அதிகமாக விவாகரத்து செய்கிறார்கள். அதில் 90% விவகாரத்துகளுக்கு காரணம் பணம் தொடர்பான பிரச்சினைகள்.

பொருட்களின் பால் வளர்க்கப்படும் "உபயோகித்த பின் தூக்கியெறி" எனும் யூஸ் அண்ட் த்ரோ (use and throw) கலாச்சாரம் மனித உறவுகளுக்கும் பரவுகிறது. பயன்படாத நண்பர்களோ கணவனோ மனைவியோ பெற்றோரோ காலம் காலமாய் ஒரு கம்பெனியில் உழைத்த தொழிலாளியோ யாராக இருந்தாலும் பொருட்களை போலவே தூக்கியெறியப்படுகிறார்கள்.

நுகர்வு வெறியின் நேரடி விளைவாக ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளி அதிகரித்த வண்ணம் உள்ளது. ஏழைகள் வறுமை கோட்டுக்கு கீழ் போய் கொண்டிருக்கும் அதேநேரத்தில் பணக்காரர்கள் தமது வளத்தை பெருக்கிக் கொண்டே போகின்றனர். 20 சத விகிதம் அமெரிக்க குடும்பங்கள் 94% அமெரிக்க வளத்தை பெற்றுள்ளன, அவர்களில் 10% பேர் 83% வளத்தை பெற்று ள்ளனர், இதற்கு மாறாக 40% அமெரிக்கர்களுக்கு எந்தவித மான சொத்துக்களும் இல்லை. இந்த ஏற்றத்தாழ்வின் விளைவாக விதம் விதமான குற்றங்கள் அதிகரிக்கின்றன. உலகத் திலேயே அதிகமாக 20 லட்சம் குடிமக்களை சிறையில் வைத்துள்ளது அமெரிக்க அரசு.

வாங்கிக் குவிப்பதில் வற்றாத தாகம் கொண்ட அமெரிக்கர்களுக்கு தன் குடும்பமும் சமூகமும் சிதறுவதைப் பற்றி உறைப்பதேயில்லை. நுகர்வுவெறி தோற்றுவிக்கும் நான் எனது என்னுடைய என்ற தனிநபர்வாதம் அவர்களை ஒட்டு மொத்த சமூகத்திலிருந்து அந்நியமாக்கியிருக்கின்றது. உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கும் நுகர்வு வெறி சமூகமாக அமெரிக்க வல்லரசில் 15% பேர் மன நோயுடன் வாழ்கிறார்கள். 10 ஆண்டுகளில் தற்கொலைகள் 300% அதிகரித்துள்ளன.

2004 ஆம் ஆண்டு கணக்குப்படி நம் நாட்டில் பெங்களுரில் தற்கொலை செய்து கொண்டவர்களில் 70% பேர் வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கத்தின் பிரதிநிதிகளான சாப்ட்வேர் துறையினர். இன்னும் 20 ஆண்டுகளில் இந்தியாவும் வல்லரசுதானோ!

பசிப்பிணியால் துன்புறும் நமது நாட்டிற்கும் வசதிப்பிணியால் அவதிப்படும் அமெரிக்காவுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா என்று வாசகர்கள் சிலர் கருதக்கூடும். ஏணி வைக்காமலேயே எட்டிவிடும் தூரத்தில் தான் நாம் இருக்கிறோம்.

அடுத்த சில ஆண்டுகளில் 25 கோடி செல்போன் என்ற இலக்கை அடைந்தே தீருவோம் என்கிறார் அமைச்சர். வீட்டுக்கு ஒரு குழாய்இல்லை. குழாய் வைக்க வீடே இல்லை. ஆனால் வீட்டுக்கு ஒரு செல்போன்! இரண்டு ரூபாய் அரிசியும் கலர் டிவியும் அமைத்துள்ள கூட்டணியின் பொருள் என்ன? அதுதான் வறுமையும் நுகர்பொருள் மோகமும் அமைத்துள்ள கூட்டணி.

அமெரிக்காவைப் போல பொருட்களை வைக்க வீட்டில் இடமில்லாமல் லொக்கர் தேடும் நிலை இங்கே தோன்றாமலிருக்கலாம். ஆனால் டிவி சோபா ஃபிரிட்ஜ் வாசிங்மிஷின் கிரைண்டர் கம்ப்யூட்டர் சாப்பாட்டு மேசை ஆகியவை தான் இன்றைய நடுத்தர வர்க்க வீடுகளின் அளவைக் தீர்மானிக்கின்றன என்பது உண்மையில்லையா?

தொடர்ச்சி 11ம் பக்கம்

**அமெரிக்காவின் நுகர்வுக் கலாச்சாரம் மூன்றாம் உலக நாடுகளுக்கு திணிக்கப்படுகிறது. அந்த அலையினால் நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமன்றி கீழ் நடுத்தரவர்க்கத்தினரும் மயக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுகின்றனர். ஏகாதிபத்திய உலக மயமாதலின் சுரண்டல் திட்ட நிகழ்ச்சி நிரலாகவே இந்த நச்சு நுகர்வுப் பண்பாடு நம் நாட்டிலும் பரப்பப்பட்டு வருகின்றது. அதனை அம்பலப்படுத்தும் வகையில் அமைந்த புதிய கலாச்சாரம் சஞ்சிகையின் கட்டுரையிலிருந்து ஒரு பகுதியை இங்கே தருகின்றோம் ஆ-ர்**


www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பலஸ்தீன- லெபனான் மீதான தாக்குதல் இஸ்ரேலியப் பயங்கரவாதத்தின் உச்ச நிலை

பலஸ்தீனத்தின் ஹமாஸ அமைப்பிற்கு நெருக்கமான சில குழுக்கள் சுரங்கப் பாதை தோண்டி இஸ்ரேலுக்குள் நுழைந்து ஒரு இஸ்ரேலியச் சிப்பாயைச் சிறைப் பிடித்துச் சென்றன. இதனையடுத்து இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனத்தின் காஸா பகுதிக்குள் நுழைந்துள்ளதுடன் வான் வழித் தாக்குதல்களும் தொடுத்துப் பாலங்களையும் மின்சக்தி விநியோக நிலையங்களையும் பலவேறு கட்டிடங்களையும் குண்டு வீசித் தகர்த்தன. இதன் விளைவாக ஏற்பட்ட பாரிய உயிரிழப்புக்களையும் மேலும் பலருக்குக் காயம் ஏற்பட்டதையும் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதையும் பல உலக நாடுகள் கண்டித்தன. ஆனால் இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் ஆதரவு காரணமாக இஸ்ரேல் மீதான எந்த நடவடிக்கையை எடுக்கவும் ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு இயலாதுள்ளது.

இந்த விதமான மோசமான பதிலடித் தாக்குதல்களாலும் ஆக்கிரமிப்பாலும் எதையும் தடுத்து நிறுத்த இயலாது என்பதை நிறுவுகிற விதமாக இஸ்ரேலியப் படைகளுடன் பலஸ்தீனப் போராளிகள் விடாது மோதி வருகின்றனர். அத்துடன் லெபனானுடனான இஸ்ரேலின் வடக்கு எல்லை வழியாக ஊடுருவிய இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு இஸ்ரேலியப் படையினர் சிலரைக் கொன்றதுடன் இருவரைச் சிறைப்பிடித்தும் சென்றது. பதிலடியாக முஸ்லீம்கள் செறிவாக வாழும் லெபனானின் தென் பகுதி



மீது இஸ்ரேல் மூர்க்கத்தனமான வான் வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. முன்னூறுக்கு மேலானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். எனினும் இன்னமும் சிறைப்பிடிக்கப்பட்ட இஸ்ரேலியச் சிப்பாய்கள் விடுவிக்கப்படவில்லை. விடுவிக்கப்படும் வரை தாக்குதல் தொடரும் என்கிற விதமாகவே இஸ்ரேல் நடந்து வருகிறது. அதற்கு ஆதரவாகவே அமெரிக்காவும் அதன் அடிமை போல நடக்கிற பிரித்தானிய ஆட்சியாளர்களும் நிற்கின்றனர்.

லெபனானின் பிரதமர் போர் நிறுத்தத்தைக் கோரி விடுத்துள்ள அறிக்கைக்குப் பதிலாக இரண்டு சிப்பாய்களையும் விடுவிக்கும் வரை இஸ்ரேலிடம் எதையும் வற்புறுத்த இயலாது என்று பிரித்தானியப் பிரதமர் பாராளுமன்றத்தில் அறிவித்தார். . லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் போன்று இன்னொன்று மூன்றாம் உலகின் வேறெந்த நாட்டாலும் தொடுக்கப்பட்டிருந்தால் முதலாளிய நாடுகளும் ஐ.நா. சபையும் மிகத் தீவிரமான கண்டனங்களைக் கூறி எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கும். ஏன் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை? கடந்த அரைநூற்றாண்டுகால வரலாற்றை நோக்கினால் இஸ்ரேலின் எந்த அடாவடித்தனமும் அத்துமீறிய தாக்குதலும் ஆக்கிரமிப்பும் உலக நாடுகளாற் கண்டிக்கப்பட்ட போதும் இஸ்ரேலுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் எடுக்காது செய்ய அமெரிக்கா தனது வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தி வந்துள்ளது. அதை நன்றாக அறிந்து கொண்டே ஐரோப்பிய முதலாளிய நாடுகள் தங்களது எண்ணெய்த் தேவைகளுக்காகவும் அரபு நாடுகளுடன் வணிகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் இஸ்ரேலைக் கண்டித்து மேற் கொள்ளப்படுகிற தீர்மானங்களை ஆதரித்துக் கையுயர்த்துவதுடன் தமது கைகளைக் கழுவிக் கொள்ளுகின்றன. 1991 ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் மூலம் பலஸ்தீன மக்கள் ஏமாற்றப்பட்டனர். இஸ்ரேல் மேலும் அதிகளவில் பலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்துள்ளது. அதற்கெதிரான வெகுசன எழுச்சிகளின் விளைவாகவே இஸ்ரேல் சென்ற ஆண்டு பலஸ்தீனத்தின் காஸா பகுதியிலிருந்து வெளி

**-நரசிம்மா-**

யேற நேர்ந்தது. அதற்குப் பின்பு பலஸ்தீனத்தில் நடந்த தேர்தலில் இஸ்லாமிய மதவாதப் போக்குடைய போராளி இயக்கமான ஹமாஸ் பெற்ற பெரும் வெற்றிக்குப் பின்பு மேலைநாடுகள் குறிப்பாக அமெரிக்காவும் பிரித்தானியாவும், ஹமாஸ் நிருவாகத்தை அதிகாரமற்றதாக்கி ஆட்சியிலிருந்து விரட்டத் தம்மாலான அனைத்தையும் செய்கின்றன. அதற்கு உடந்தையாக, நடக்குமாறு அமெரிக்காவுக்கு ஓரளவு இணக்கமான பலஸ்தீன நிருவாகத்தின் தலைவரான அபாஸ் மீது பல நெருக்குவாரங்கள் தொடுக்கப்படுகின்றன. எகிப்தின் சர்வாதிகாரியான ஹொஸ்னி முபாரக் அமெரிக்காவின் பிரதான அரபு எடுபிடியாக உதவி வருகிறார்.

லெபனான். மீதான தாக்குதல் மூலம் இஸ்ரேல் இப்பிரச்சனையை ஒரு அரபு நாட்டின் மீதான போராக மாற்றியுள்ளது. பலஸ்தீன விடுதலைக்கு மிகுந்த ஆதரவு காட்டும் சிரியாமீதும் தாக்குதல் தொடுக்கிற மிரட்டல்கள் இருந்து வருகின்றன. சிரியாவும் மத்திய கிழக்கின் அதிமுக்கிய முஸ்லீம் நாடான ஈரானும் கடந்த சில ஆண்டுகளாகவே அமெரிக்க- இஸ்ரேலிய ஆக்கிரமிப்புச் சக்திகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளன.

இன்றைய போர்ச் சூழல் எண்ணெய் விலைகளை மேலும் கூடும் விதமாகச் செய்துள்ளதால் எண்ணெய் வளமுள்ள பிரித்தானியாவும் நோர்வேயும் தவிர்ந்த சகல ஐரோப்பிய நாடுகளும் பாதிக்கப்படவுள்ளன. எனினும் அமெரிக்க மேலாதிக்கத்தை மத்திய கிழக்கில் நிலைநிறுத்தவும் எண்ணெய் வளத்தை அமெரிக்க கட்டுப்பாட்டிற் கொண்டிருக்கவுமே அமெரிக்கா இஸ்ரேலைப் பலப்படுத்தி மத்திய கிழக்கில் தனது சார்பாக தாக்கி அழிக்கும் சக்தியாகப் பேணி வருகிறது. இந்த உண்மையை நமது மக்கள் தெளிவாக அறிய வேண்டும்.

இஸ்ரேல் அமெரிக்காவின் மீது யூதர்கள் மூலம் செல்வாக்குச் செலுத்தித் தனது காரியத்தைச் செய்து கொள்ளுகிறது என்கிற மயக்கம் இன்னமும் பலரிடம் உள்ளது. உண்மை அதற்கு மாறானது. பலஸ்தீனப் பிரச்சனையையும் இஸ்ரேலிய பாதுகாப்பையும் முன்னிறுத்தி, அமெரிக்கா தனக்கு எதிரான சக்திகளை அழிக்க இஸ்ரேலைப் பாவிக்கிறது என்பதே உண்மை. இஸ்ரேல் அமெரிக்காவின் கருவியாக, ஏவல் நாயாக இயங்குகிறது. இஸ்ரேல் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் கரம். எனவே தான் அமெரிக்கா இஸ்ரேலின் எந்தப் பிழையையும் கண்டிக்கத் மறுக்கிறது. ஒரு காலத்தில் இஸ்ரேலின் உருவாக்கத்தை முன்னுதாரணமாக்கி இஸ்ரேலைப் பின்பற்றி ஒரு வலிய தமிழீழம் உருவாக்கப்பட வேண்டும் என்ற மயக்கம் தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்து வளர்ந்து தமிழ் மக்கள் பலரையும் பீடித்திருந்தது. இன்னுங் கூடச் சிலர் அதிலிருந்து மீளவில்லை.


இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் மண்ணைப் பறிக்கிறது. அமெரிக்காவின் நேரடியானதும் மறைமுகமானதுமான அங்கீகாரத்துடன் பயங்கரவாத ஒழிப்பு என்ற பேரில் பலஸ்தீன மக்களைத் துன்புறுத்திக் கொன்று வருகிறது. இதன் மூலம் இஸ்ரேலியப் பயங்கரவாதம் அம்பலமாகிறது.

தகுந்த காரணமின்றிப் பல நூற்றுக் கணக்கான பலஸ்தீன இளைஞர்களும் பெண்களும் இஸ்ரேலால் சிறைப் பிடிக்கப்பட்டு விசாரணையின்றி மறியலில் உள்ளனர். இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான ஒவ்வொரு போராட்ட நடவடிக்கையையும் பயங்கரவாதமாகக் காட்டி அப்பாவி மக்கள் மீது தனது அளவு மீறிய ஆயுத வலிமையைப் பிரயோகிக்கிறது. அமைதியின் பேரிலும் போரின் மூலமும் பலஸ்தீனத்தின் வளமான நிலப் பகுதிகளைத் தனதாக்கிப் பலஸ்தீன மக்களை அவர்களது மண்ணிலிருந்து விரட்டுகிறது. பலஸ்தீனத்தை ஒரு சிறைக் கூடமாக்குகிற செயலை முழுமைப்படுத்தித் தனது நிலப் பறிப்பை நிரந்தரமாக்க ஒரு பெரிய கொங்கிறீற் பாதுகாப்புச் சுவரைக் கட்டியெழுப்பி வருகிறது.

இவை இஸ்ரேல் அமெரிக்காவின் அனுசரனையுடன் செய்துவருகிற காரியங்கள். அமெரிக்காவை எதிர்க்காமல் இஸ்ரேலை எதிர்க்க இயலாது. எனவே இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை ஏற்காதவர்கள் அமெரிக்கா பற்றியும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இங்கே தான் இஸ்ரேல் பற்றிய மயக்கங்கள் முற்றிலும் தெளிவடைய வேண்டிய தேவை முக்கியமானதாகிறது. இஸ்ரேலைப் பேரினவாத அடக்குமுறைச் சக்திகளுடன் ஒப்பிடலாமே ஒழிய ஒடுக்கப்பட்ட விடுதலைக்குப் போராடுகிற தேசிய இனத்துடன் ஒப்பிட நியாயமில்லை. இஸ்ரேலிய அரசின் ஒடுக்குமுறையை மட்டுமன்றி எந்தத் தேசிய இன ஒடுக்கலையும் எதிர்த்துப் போராடுவதானால் உலகின் மேலாதிக்கச் சக்திகளையும் எதிர்த்துப் போராடுவதாலேயே அது இயலும்.

இன்று பலஸ்தீன மக்கள் மீதும் லெபனான் மீதும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலின் சியோனிச வெறியர்களை நீதி நியாயம் விடுதலை சுதந்திரம் என்பனவற்றை நேசிக்கும் அனைத்து சக்திகளும் வெளிவெளியாக எதிர்த்து அம்பலமாக்கி நிற்க வேண்டும். இது நம் அனைவரினதும் தார்மீகக் கடமையுமாகும்.

## உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

### என்ன விளங்கியதோ

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் ரஷ்ய ஜனாதிபதி விலாடிமிர் புட்டினும் சந்தித்துக் கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர். முதலில் கருத்துத் தெரிவித்த புஷ் "ஹமாஸ், ஹிஸ்புல்லா ஆகிய பயங்கரவாத இயக்கங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளை உடனே நிறுத்த வேண்டும்" என்றார். இதை புன்முறுவலுடன் கேட்டுக்கொண்டிருந்த புட்டின் தான் பேசும் போது "ஹமாஸ், ஹிஸ்புல்லா மட்டுமல்ல பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைவருமே தங்கள் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்" என்றார், ரஷ்ய மொழியில். சம்பிரதாயத்துக்கு தலையசைப்பது வழமை என்பதால் புஷ்சும் புட்டினின் கருத்துக்கு 'ஆமாம் சாமி' போட்டபடி தலையாட்டிக் கொண்டிருந்தார். உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதைச் சொல்ல ஆட்கள் இல்லாமலா போய்விடும்.

### செத்துத் தொலையட்டும்

சதாம் உசைனுடைய வழக்கு தொடங்கியதில் இருந்து சதாமுக்காக வாதிட்ட மூன்று தலைமை வழக்கறிஞர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வழக்கை எப்படியாவது முடித்து சதாமை கொல்வதன் மூலம் ஈராக்கில் நிலவும் எதிர்ப்பை சமாளிக்கலாம் என்று நினைக்கிறது அமெரிக்கா. இந்த கொலைகள் குறித்து கூட்டுப் படைத் தலைமை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது அவர் சொன்ன பதில் இதுதான்

"சதாமை உயிரோடு பிடித்துத் தொலைத்ததுதான் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம். மாற்றுக் கருத்துக் இடமின்றி கொல்லப்படவேண்டிய பயங்கரவாதி சதாம். இந்நிலையில் சதாமிக்காக வாதாடுபவர்கள் அதை விடக் கொடிய குற்றவாளிகள். அவர்கள் கொலை செய்யப்படுவது ஒருவகையில் சரியானதே. அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்களல்ல. எங்களது இப்போதைய கவனம் முழுவதும் வழக்கை விரைவாக முடிப்பதுதான்."

அவர் சொன்னது உண்மைதான். வழக்கை முடிக்க சிறந்த வழி ஆட்களை முடிப்பதுதான். அந்த அதிகாரியின் சொற்களில் 'அமெரிக்க ஜனநாயகம்' நிரம்பி வழிகிறது.

### நலம் விசாரித்தல் என்பது

லெபனான் மீது மிகப் பயங்கரமான தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. இது குறித்து கருத்துத் தெரிவித்த புஷ் "நான் இஸ்ரேலிய பிரதமரை நலம் விசாரித்தேன். இஸ்ரேலிய மக்களது நலன் பற்றியும் விசாரித்தேன். அமைதி நிலவ எதிர்பார்ப்பதாகவும் சொல்லியிருக்கிறேன்" என்றார். புஷ் கருத்துத் தெரிவித்த மறநாள் அமெரிக்காவின் முண்ணணி நாளேடான நியூ யோர்க் டைம்ஸின் தலையங்கம் "இஸ்ரேலிய பிரதமருடன் தொலைபேசியில் உரையாடிய எங்கள் ஜனாதிபதி தொடர்ந்து பத்து நாட்களுக்கு தொடர்ந்து விடாமல் லெபனானைத் தாக்குமாறு மரியாதையாகக் கேட்டுக் கொண்டுள்ளார்."

நலம் விசாரித்தல் என்பது இதுதானோ...

### வல்லவனுக்கு வல்லவன்

2000ம் ஆண்டு பதவிக்கு வந்தவுடனேயே புஷ் தனது உரையில் ஈராக், ஈரான், வட கொரியா ஆகிய நாடுகளை மனித குலத்தின் எதிரிகள் எனக் குறிப்பிட்டிருந்தார். அதன்படி அமெரிக்கக் கடவுள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உலக மக்களின் அமைதிக்காகவும் நன்மைக்காகவும் "பேரழிவு ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கிறது" என்ற பொய்யை முன்னிறுத்தி ஈராக்கை தாக்கியாயிற்று. தாக்கும் போதே ஈராக்கிடம் பேரழிவு ஆயதங்கள் இல்லை என்பது அமெரிக்காவுக்குத் தெரியும் என்பது வேறு விடயம்.

அடுத்தது வட கொரியா தானே. நாளாகிறதே தாக்குதலைக் காணவில்லையே என்று கலவரப்பட வேண்டாம். வட கொரியாவிடம் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன. இது அமெரிக்காவுக்கும் தெரியும். சும்மா தாக்கப்போய் அவர்கள் திருப்பித் தாக்கினால்?

ஈராக்கை தாக்கியது போல் வட கொரியாவைத் தாக்க முடியாது. வேண்டுமானால் அமெரிக்கக் கடவுள் இன்னும் ஆணையிடவில்லையென்று அமெரிக்கா திருப்திப்பட்டுக்கொள்ளலாம்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலேயே உண்டாம்.

### இஸ்ரேலின் கொடூரம்

பலாஸ்தீனத்தின் மீது வெறித்தனத்துடன் தாக்குதல் நடாத்தி வரும் இஸ்ரேல், பாலஸ்தீனப் பாடசாலைகளையும் பண்பாட்டு நிலையங்களையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களையும் குறிவைத்து குண்டுகளை வீசுகின்றது. கடந்த மாதம் இஸ்ரேலின் குண்டுவீச்சுகளுக்கு செவிப் புலனற்றோர் பாடசாலையும் வரலாற்றாவணங்களை பேணி வைத்திருந்த பழைமையான நூலகமொன்றும் இலக்காகின. ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி, பண்பாட்டு வரலாறுகளை இல்லாதொழிக்கும் செயல்பாடுகள் ஏகாதிபத்தியங்களால் உலகெங்கும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதற்கு இதுவொரு உதாரணம் மட்டுமே.

### நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்

ஐ.நா பிரயோசனமில்லாத ஒன்று என்ற உண்மையை ஒருபக்கம் வைத்து விட்டு... அமெரிக்கா ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு எப்போதும் தனக்கு வக்காலத்து வாங்கும் நாடுகளையே அங்கத்தினராக்கப் படாதபாடுபடுவது வழமையானதே. இம்முறை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கு இலத்தீன் அமெரிக்காவிலிருந்து குவாட்டமாலாவை தெரிய பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகிறது அமெரிக்கா. ஏனெனில் அமெரிக்கா தனது பொம்மை அரசாங்கத்தை குவாட்டமாலாவில் நிறுவியிருக்கிறது. இதற்கிடையில் பல தென் அமெரிக்க நாடுகளின் ஆதரவுடன் வெனசுவேலா போட்டியிடுகிறது. இது இப்படி இருக்க அண்மையில் கரீபியன் தீவுகளின் கூட்டமைப்பு வெனசுவேலாவை ஆதரிப்பது என்று ஏகமனதாக முடிவெடுத்துள்ளது. இது ஒருபுறமிருக்க "பிராந்தியத்தின் கூட்டுச் செயற்பாடுகளுக்கு ஒத்தழைக்காத நாடாக குவாட்டமாலா இருந்து வருகிறது. இதனால் எமக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை." என்று அவர்கள் காரணம் வேறு சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன காரணம் அமெரிக்காவின் முகத்தில் அறைவதை விட ஒருபடி மேலானது.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# “முற்போக்கு” கலை இலக்கிய உதிரிகளின் மூத்த படைப்பாளிகள் மீதான ஆய்வு விஷமத்தனம்.

## அவமதிப்பின் ஆர்வலர்கள் யாருக்கு சேவை செய்கிறார்கள்?

இப்போது கொஞ்சக் காலமாக மூத்த இலக்கியவாதிகள் பற்றிய ஆய்வுகள் குறிப்பிட்ட சிலரால் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் மூலம் எதை வெளிப்படுத்த முயலுகிறார்கள் என்பதை ஆற்றப்படுகிற உரைகளை அடுத்து நடக்கிற கலந்துரையாடல்கள் ஓரளவுக்கு வெளிப்படுத்துகின்றன. ஒரு படைப்பையோ படைப்பாளியையோ சரியாக மதிப்பிடுவதற்குப் படைப்பினதோ படைப்பாளியினதோ காலம் பற்றியும் சமூகச் சூழல் பற்றியும் ஒரு குறைந்தபட்ச அறிவு தேவை. ஒரு படைப்பின் சமூகச் சூழலை அறியாமல் அதனை விளங்கிக் கொள்ளுவதிற் சில சிக்கல்கள் உள்ளன. அது எதைக் குறித்து எவ்வாறான நிலைப்பாட்டினின்று உருவாக்கப்பட்டது என்பதை அறியாதவர்களும், அவர்களை விட மோசமாக, அவற்றை வேண்டுமென்றே திரிக்கவும் புறக்கணிக்கவும் முற்படுகிறவர்களும் எந்தவொரு படைப்பாளியின் ஆக்கங்களை பற்றியும் குழப்பமான சிந்தனைகட்கு வழிகோல இடமுண்டு.

யூன் மாதப் பிற்பகுதியில் "முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை" என்ற பேரில் செயற்படுகிற சில இலக்கிய விஷமிகள் கவிஞர் முருகையன் பற்றிய ஒரு பேருரையையும் கலந்துரையாடலையும் கொழும்பில் நடத்தினர். அதில் பேராசிரியர் நுஃமான் உரையாற்றினார். கவிஞர் முருகையன் பற்றி அவர் குற்றமாக எதையுங் கூறாத போதும் அவரது உரையின் தொடக்கத்திற் கைலாசபதி முருகையனை இலங்கையின் அதிசிறந்த சமகால கவிஞராகக் கருதினார். ஒரு இளங்கவிஞர் அவர் கவிஞரே அல்ல என்று கூறியிருக்கிறார். தான் இரண்டையும் ஏற்கவில்லை என்றும் இரண்டுக் கும் இடைப்பட்ட நிலையிலிருந்தே மதிப்பிடப் போவதாகவும் கூறியிருந்தார். இந்த இரண்டு கருத்துக்களும் கவிதைப்பற்றியும் திறனாய்வு பற்றியுமான அறிவில் ஒப்பிடத்தக்க இருவரது நேரெதிரான மதிப்பீடுகளாக இருந்திருந்தால் பேராசிரியர் நுஃமானுடைய "இடைப்பட்ட நிலை" என்பது பொருளுடையதாயிருந்திருக்கும். அல்லாது போனால் அவரது இடைப்பட்ட நிலையின் தகுதியும் தரமும் கைலாசபதியினதற்கும் ஒரு கற்றுக்குட்டியினதற்கும் இடையிலான ஒன்றாகவே அமையும். பேராசிரியர் நுஃமானுடைய நோக்கம் தவறானதாக இல்லாதிருந்தாலும் கூட்டத்தை ஏற்பாடு செய்த கும்பலுக்கும் கருத்துரைக்கிற போக்கில் கவிஞர் முருகையனுடைய பங்களிப்பை வக்கிரப்படுத்தக் காத்திருக்கிறவர்கட்கும் அறிந்தோ அறியாமலோ அவர் அடியெடுத்துக் கொடுத்தாரென்றே தோன்றுகிறது. இந்தப் பின்னணியிலேயே அவரது உரையின் போது கவிஞர் முருகையனது கவிதைகள் "அறிவு பூர்வமான" கவிதைகள் என்று அவர் குறிப்பிட்டதை வாய்ப்பாக்கி அரைகுறை வாசிப்பின் அடிப்படையில் அதிரடி விமர்சனம் செய்வதையே வழமையாக்கிக் கொண்ட ஒரு பம்மாத்துக்காரர் முருகையனுடைய கவிதைகளில் உணர்வை விட அறிவு தான் மேலோங்கியுள்ளது என்கிற தோரணையில் தனது தாக்குதலை முன்னெடுத்தார். இன்னொருவர், பழைய விவாதம் ஒன்றில் கவிஞர் முருகையனின் குறுக்கீடு அவரது வாதத்தைத் தவிடுபொடியாக்கியதன் விளைவான எரிச்சலைக் கவிஞர் முருகையன் மீதான தனிப்பட்ட தாக்குதலாக வெளிப்படுத்தினார்.

இந்த விதமான கூட்டத்தின் மூலம் முருகையன் என்கிற கவிஞர் பற்றிய எந்த விதமான பயனுள்ள தேடலோ முடிவுகளோ கிட்டியுள்ளதாக யாருங் கூற இயலுமா? சென்ற ஆண்டு அவரது எழுபதாம் வயது நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் தேசியகலை இலக்கியப்பேரவை ஒழுங்கு செய்த ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் அவரது கவிதைகள் பற்றிய விரிவான சில ஆய்வுகள் முன்வைக்கப்பட்டன. அந்த ஆய்வுகள் தொடாத முக்கியமான விடயங்கள் உள்ளன. அவற்றில் எவை பற்றியேனும் இம்மாதிரிக் கூட்டங்களை நடத்திக் குட்டையைக் குழப்புகிற கும்பலுக்கு அக்கறை உண்டா? அது தான் கிடையவே கிடையாது.

**~திருமுகன்~**

கவிஞர் முருகையனுடைய கவிதை மொழி பெரும்பாலும் செம்மொழி. அவர் அதிலிருந்து விலகியும் நிறைய எழுதியிருக்கிறார். அவருடன் ஒப்பிடத்தக்க ஒரு கவிஞரான மகாகவியின் சொற்பிரயோகம் பேச்சுமொழிக்குக் கூட நெருக்கமானது. எனினும் முருகையனது மொழி நடையைக் கடினமாகக் காணுகிற எவருக்கும் கவிஞரான மகாகவியும் படிக்கக் கடினமானவராகவே இருப்பார். சொற்களின் தெரிவும் சொல்லுகிற முறையும் சொல்லுகிற விடயமும், கேட்போராகக் கவிஞர் யாரைக் கருதுகிறார் என்பதையும் பொறுத்து வேறுபடும். கவிஞர் முருகையன் உணர்ச்சி வேகத்துடனும் தன்னுணர்வு சார்ந்தும் எழுதிய கவிதைகள் பல இருக்கின்றன. அவரது நகைச்சுவை உணர்வு இன்றைய கவிஞர்களில் அநேகருக்குக் கைவராத ஒன்றாகவே தெரிகிறது. அவருக்கென்று அரசியற் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் உள்ளன. அவர் அவற்றைத் தனது எழுத்துக்களில் வலிந்து திணித்ததாக யாருங் கூற இயலுமா? அப்படிக் கூறமுடியுமானால் அவ்வாறன போக்கை ஆதாரங்களுடன் விளக்கி விமர்சித்தால் அதை யாரும் மதிக்க முடியும்.

கவிஞர் முருகையனை மட்டுமன்றி அவரது காலத்து எழுத்தாளர்கள் பலரும் 1960களில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை தரக்கூடிய ஒரு தனித்துவமான அடையாளத்திற்குப் பங்களித்தனர். ஈழத்து இலக்கியப்பரப்பில் படைப்பிலக்கியத்திற்கு ஒரு சமூகப் பார்வையையும் பரிமாணத்தையும் வழங்க முனைப்புடன் செயற்பட்டனர். அவர்களது செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக ஒரு சமூக அரசியற் பார்வை அமைந்திருந்தது. அதற்குரிய சமூகச் சூழலின் நலிவும் அதையொட்டிய இடது இயக்கத்தின் தளர்வும் இலக்கியத்திலும் பிரதிபலித்தன. இவை பற்றி ஆராய்வதற்கான தேவை உள்ளது. ஒரு படைப்பாளியைத் தனியே ஆராய்வதை விட அவரது பங்களிப்புக்கட்குரிய சமூகச் சூழலில் வைத்தும் அவரது படைப்புக்களை அவரது காலத்தின் படைப்புக்களுடன் உறவுபடுத்தியும் ஆராய்வது படைப்பாளியை மட்டுமல்லாமல் அவரது காலத்தின் சமூகத்தையும் படைப்பிலக்கியத்தையும் பற்றிய ஒரு தெளிவான பார்வையைப் பெற உதவும். இம்மாதிரி முயற்சிகட்குப் படைப்பிலக்கியங்கள் பற்றிய அக்கறையும் ஆழமான சமூக நோக்கும் ஈடுபாடும் தேவை. இலக்கியங்களைச் சமூக இலக்குகளினின்று பிரித்துப் பார்க்கிற நோக்கமுடையவர்கள் இம்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ளுவதில்லை என்பதோடு, வேண்டுமென்றே படைப்பாளிகளைச் சமூகத்திலிருந்து அப்பாற்படுத்தப்பட்ட தனி மனிதர்களாக்கி அவர்களது பங்களிப்புக்களின் சமூக முக்கியத்துவத்தை மூடி மறைக்கிற காரியங்களையே செய்கின்றனர் என்பது, கவிஞர் முருகையனுக்கு இவ்வாறானோர் செய்ததிலிருந்து விளங்குகிறது.

அதற்கு முன்னர் இளங்கீரன் அவர்கட்கும் இப்படியே செய்யப்பட்டது. பேராசிரியர் கைலாசபதியின் அரசியல் அடையாளத்தை முற்றாகவே துடைத்தழிக்கிற முயற்சியும் இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களாற் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

மேற்சொன்னவாறானவை தற்செயலாக நிகழ்ந்தவையல்ல. விபவி என்கிற என்.ஜீ.ஓ அமைப்போடு ஒட்டிக்கிடந்து என்.ஜி.ஓக்கள் மூலமே கலை இலக்கியங்களை வளர்க்க இயலும் என்று பிதற்றித் திரிந்தவர்கள் உட்பட்ட சில உதிரிகள் தான் இப்போது முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை என்ற பேரில் தமது இலக்கிய விஷமங்களை முன்னெடுக்கின்றனர். அதைச் செய்ய அவர்கள் தெரிந்தெடுத்துள்ள பேரும் தற்செயலானதல்ல. தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் பிறர் அதைக் குழப்பிக் கொள்ளும் வாய்ப்பை மனதிற் கொண்டே அவர்கள் அப்பேரைச் சூட்டினர் என்று நம்ப நியாயமுண்டு. இதுவும் ஒருவகைத் திரிபுவாத திருகுதாளக் கலை இலக்கிய வக்கிரமேயாகும்.

நேர்மையான இடதுசாரி இலக்கியவாதிகளையும் சிந்தனையாளர்களையும் காட்டிப் பிழைப்பு நடத்துகிற அதே வேளை அந்த இலக்கியவாதிகளதும் சிந்தனையாளர்களதும் முக்கியமான பங்களிப்புக்களை அர்த்தமற்றதாக்குகிற பணியையும் இவர்கள் மேற்கொள்ளுவது பற்றி நாம் விழிப்புடன் இருப்பதும் விமர்சிப்பதும் முக்கியமானது. அவர்களது சொல்லுக்கு விஷயம் தெரிந்தோர் மத்தியில் மரியாதை இல்லாவிடினும் படைப்பிலக்கியத்திற்குள் புகும் புதிய தலைமுறையினரைக் குழப்புவதில் இத்தகைய உதிரிகளின் பங்கை யாரும் குறைவாக மதிப்பிட்டுவிடக் கூடாது.

---

### நுகர் பொருளே

9ம் பக்க தொடர்ச்சி

அட்சய திருதியைக்கும் ஆடித் தளளுபடிக்கும் நேர்த்திக் கடன் செலுத்துவது போல கடைவீதிக்குப் போக நடுத்தர வர்க்கம் பழகிவிடவில்லையா? கிரெடிட் கார்டு இல்லாத நகர்ப்புற நடுத்தர வர்க்கம் இன்று உண்டா? 1980 இல் இந்தியா முழுவதும் 8700 கிரெடிட் கார்டுகள். இன்று ஒரு சிற்றூரிலேயே அதை விட அதிகமிருக்கும்.

உங்கள் பெற்றோரும் பிள்ளையும் டி.வி.யுடன் செலவிடும் நேரம் அதிகமா? உங்களுடன் செலவிடும் நேரம் அதிகமா? தொலைக்காட்சி விளம்பரங்கள் உங்கள் வாங்கும் விருப்பங்களைத் தீர்மானிக்கவில்லையா?

இந்த நுகர்வு மோகம் உங்கள் உறவினர் மத்தியில் நண்பர்கள் மத்தியிலே ஏன் உங்கள் குடும்பத்திற்குள்ளேயே இனம் புரியாத சுயநலவாதிகளை உருவாக்கியிருப்பதை நீங்கள் இன்னும் அடையாளம் காணவில்லையா?

எதை உடைமையாகக் கொள்ள முடியுமோ அந்தப் பொருளை மட்டுமே நேசிப்பது என்ற பொருள் நட்பு தோழமை போன்ற மனித உணர்ச்சிகளின் இடத்தில் உடைமை உணர்ச்சியை சத்தம் போடாமல் திணித்துவிட்டது. சக மனிதனைப் பொருளைப் போல விலைக்கு வாங்க முடியாதென்பதால் மனித உறவுகள் மதிப்பு இழந்து வருகின்றன.

இந்தப் பொருள் மோகம் தானாக உருவானதல்ல. முதலாளி வர்க்கத்தால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. முதலாளித்துவ நுகர்பொருள் உற்பத்தியுடைய கன்வேயர் பெல்ட்டின் மறு முனையில் உங்கள் வாய் நாளொன்றுக்கு 10 லட்சம் பாட்டில் கொக்கா கோலா உற்பத்தி என்றால் தினம் ஒரு பாட்டில் குடிப்பதற்கும் அதுவே 20 லட்சமானால் 2 பாட்டில் குடிக்கும் படியாகவும் நீங்கள் தயார் செய்யும்படுகிறீர்கள், விலங்குகளைக் கூடக் கூண்டிலடைத்துத் தான் அடிமையாக்க முடியும். சுதந்திரமாக உலவவிட்டு அடிமைத்தனமாக சிந்திக்கும் நிலைக்கு நம்மைப் பழக்கியிருக்கிறது முதலாளித்துவம். முலாளித்துவ உற்பத்தியின் தேவைக்கு ஏற்ப உங்கள் பசியும் தாகமும் உருவாக்கப்படுகின்றன. உங்களுடைய நாவில் உமிழ் நீர் சுரப்பதைக் கூட விளம்பரங்கள் தீர்மானிக்கின்றன.

அமெரிக்கக் கனவைத் துரத்தும் இந்த ஓட்டத்தில் மனிதப் பண்புகள் காலடிப் புழுதியாகி காற்றில் கலக்கின்றன. கடன் கட்ட முடியாமல் 10,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட நாட்டில் கையில் கிரெடிட் கார்டுகளுடன் எதை வாங்குவது என்று தெரிவு செய்ய முடியாமல் கடைகளில் அலைமோதுகிறது ஒரு கூட்டம்.

அவர்களுக்கு நாட்டைப் பற்றியோ சக மனிதர்களின் துயரத்தைப் பற்றியோ அக்கறையில்லை. அவர்களால் விலைக்கு வாங்க முடியாத எந்தப் பொருள் மீதும் அவர்களுக்குப் பற்றுதல் இல்லை.

கணவன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும். நண்பர்களுக்கும் ஒதுக்குவதற்குக் கூட நேரமில்லாமல் அவர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். உழைப்பு நேரத்தையும் ஓய்வு நேரத்தையும் ஒரு சேர சந்தையிடம் அடகு வைத்ததனால் ஏற்பட்டுள்ள இடைவெளியை அவர்கள் அடைத்தாக வேண்டும் -பொருட்களைக் கொண்டு.

**கார்மேகம்**

---

### ஆட்சிக் கவிழ்ப்புக்கு

8ம் பக்க தொர்ச்சி..

தாக்குதல்கள், நிதி நெருக்கடிகள் மூலமும் ஆட்சிக் கவிழ்ப்பை அமெரிக்கா நடத்தக் கூடும். சாவேஸ்ஸை படுகொலை செய்வதும் ஒரு வழி முறையாக கடைப்பிடிக்கப்படலாம். தனது கொல்லைப்புறம் தனக்கு எதிராக இருப்பதை அமெரிக்கா ஒரு போதும் விரும்புவது இல்லை. இலத்தீன் அமெரிக்கா எங்கும் தனது பொம்மை அரசாங்கங்களை நிறுவ அமெரிக்கா பல கொலைகளையும் ஆட்சிக் கவிழ்ப்புகளையும் இராணுவ சதிகளையும் மேற்கொண்டுள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளால் பல இலட்சக்கணக்கான இலத்தீன் அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்று வாய்கிழியப் பேசும் அமெரிக்கா இலத்தீன் அமெரிக்காவில் தனது ஜனநாயகத்தை நிலைநாட்ட உருவாக்கிய "இலத்தீன் அமெரிக்காவின் ஒசாமா பின் லேடன்" என அழைக்கப்படும் லூயிஸ் பொசாடா கரில்லெஸ் **(Luis Posada Carriles)** என்பவனை உருவாக்கி இன்று வரை பேணிப்பாதுகாத்து வருகிறது. பொசாடா குவாட்டமாலா, எலிசல்வடோர் ஆகிய நாடுகளில் கொலைக் கும்பல்களை உருவாக்கி வழிநடத்தி அமெரிக்கா பொம்மை அரசாங்கங்களை அந்த நாடுகளில் உருவாக்க உதவியிருக்கிறார். 73 கொலைக் குற்றங்களுக்காக நீதிமன்றில் விசாரிக்கப்பட இருக்கின்ற பொசாடா வேவை வெனசுவேலாவிற்கு அனுப்பி வைக்க அமெரிக்கா மறுத்து வருகிறது. வெள்ளை மாளிகையின் அரவணைப்பில் டெக்சாசில் சுகபோகமாக வாழ்ந்து வருகிறார் பொசாடா. புஷ்சினுடைய நிர்வாகம் உலகெங்கும் தனது வாழைப்பழ குடியரசுகளை **(Banana Republics)** உருவாக்க துடித்துக்கொண்டு இருக்கிறது. காலப்போக்கில் என்றோ ஒருநாள் வாழைப்பழ குடியரசாக அமெரிக்காவும் மாறக் கூடும். மாற்றங்களை வேண்டி நிற்பது ஹவானோவோ கராக்கஸ்ஸோ இல்லை. வாஷிங்டன் தான். இந்த மாற்றம் விரும்பியோ விரும்பாமலோ நிகழத்தான் போகிறது. அதே போல அமெரிக்கா விரும்பாவிட்டாலும் கூட இலத்தீன் அமெரிக்கா முழுவதும் சிவப்பாக மாறப்போவது தவிர்க்க முடியாது

---

### மோசமாகி வருகிற

6ம் பக்க தொடர்ச்சி

தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கு வழி செய்யக்கூடிய இடைக்கால நடவடிக்கைகள் பற்றி அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் தேவைக்கமைய முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் சில பொதுவான உடன்பாடுகளை எட்ட இயலும். வடக்கு கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் நேர்மையுடன் ஈடுபட்டால் மட்டுமே அடுத்த கட்டமாக நிலையான ஒரு தீர்வு பற்றிப்பேச வாய்ப்புண்டு.

அதற்குப் பதிலாக விடுதலைப் புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்றும் தமிழ் மக்களுக்கான தீர்வையே தேடுகிறோம் என்றும் வாய்ப்பாட்டு ஒப்பிப்பதை விடுத்து அரசாங்கம் முதலில் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கிற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கான எந்த விதமான நேர்மையான சிந்தனையோ திட்டமோ இதுவரை எந்த அரசாங்கத்திடமும் இருந்ததாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் ஏட்டிக்குப் போட்டியாக வன்முறையில் ஈடுபடுவது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இன்றைய அமைதியற்ற சூழல் தமிழ் மக்களிடையே தன்னம்பிக்கை இழப்பிற்கும் அச்சத்திற்கும் காரணமாகியுள்ளது. தமிழ் மக்களை தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற வேண்டாம் என்று விடுதலைப்புலிகள் கேட்டுக் கொண்டது சரியானதே. வெளியேறுவது பேரினவாத வெறியர்களுக்கே வாய்ப்பாக அமைந்துவிடும். எனினும் தமிழ்ப் பொதுமக்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாக அதில் சம பங்காளிகளாக வளர்ச்சி பெறுகிற வரை அதற்கான மனப்பக்குவம் அவர்கட்கு ஏற்படப் போவதில்லை.

எனவே இப்போராட்டத்தின் அரசியற் பரிமாணம் மேலும் முக்கியப்படுத்தப்பட்டு வெறும் குறுந் தேசியவாத நிலைப்பாட்டிலிருந்து தேசிய இன விடுதலைப் போராட்டம் வெகுசன விடுதலையாக விருத்தி செய்யப்படுவது நீண்டகால நோக்கில் மிக முக்கியமானது.

ஒரு விடுதலைப் போராட்டத்துக்கு ஆயுத வலிமையும் ஆயுதப் போராட்டமும் தேவையானவை. எனினும் சரியான அரசியற் சிந்தனையால் மக்களின் மனங்கள் ஆயுதபாணிகளாக்கப்படுவது அதை விடத் தேவையானது. அதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலை மட்டுமல்லாமல் முழு நாட்டினதும் சகல தேசிய இனங்களினதும் விடுதலைக்கும் விமோசனத்துக்குமான வழி கிடைக்கும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි Puthiya Poomi

சுற்று13 ஆகஸ்ட் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 94

*சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகிறது.*

மனிதனின் சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத் திலிருந்து விழுகின்றனவா? இல்லை. மூளையில் இயல்பாக உள்ளனவா? இல்லை. அவை சமுதாய நடைமுறையிலிருந்து மட்டும் தோன்றுகின்றன. உற் பத்திக்கான போராட்டம், வர்க்கப் போராட்டம். அறிவியல் ஆய்வு என்ற மூவ கை நடைமுறைகளில் இருந்தே வருகின்றன.

தோழர் – மாஓசேதுங்



## பேரினவாதமும் உலகமயமாதலும் நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறது.

### புதிய- ஜனநாயக கட்சி ஆண்டு விழாவில் பொதுச்செயலாளர் தோழர் செந்தில்

பேரினவாத அரசியலும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலும் நாட்டை மேன்மேலும் நாசகாரப் பாதையில் இட்டுச செல்கின்றன. இதனால் நன்மையடைவோரும் வசதிவாய்ப்புகளைப் பெருக்குவோரும் சொத்து சுகம் படைத்த உயர்வர்க்க மேட்டுக்குடியினரேயாவர். அவர்களின் அரசியல் பிரதிநிதிகளே மாறிமாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருகின்றனர். இத்தகையவர்களுக்கு நாடு மக்கள் தேசிய இனங்கள் பற்றிய எவ்வித அக்கறைகளும் கிடையாது. அதனாலேயே கடந்த கால்நூற்றாண்டு காலத்தில் தேசிய இனப் பிரச்சினையானது பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை யுத்தமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இத்தகைய யுத்தத்திற்கு ஏகாதிபத்திய சக்திகள் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்துள்ளனர். இந்த யுத்தத்தின் மறைவிலே தான் அந்நிய சக்திகள் தமது பொருளதார அரசியல் ராணுவ நலன்களையும் தேவைகளையும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் மூலம் முன்னெடுத்து வந்துள்ளனர். இவற்றின் ஒட்டு மொத்த விளைவுகளையே முழு நாடும் மக்களும் மோசமான பிரச்சினைகளாக அனுப்பவித்து வருகின்றனர். இவற்றை அரசியல் ரீதியில் தெளிவு படுத்திய வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். மக்கள் இத்தகைய போராட்டங்களுக்கு அணிதிரளத் தயாரானால் மட்டுமே உண்மையான அரசியல் மாற்றங்கள் நிகழ முடியும்.

இவ்வாறு புதிய- ஜனநாயக கட்சியின் 28வது ஆண்டு விழாவில் உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் கூறினார். கட்சியின் தேசிய அமைப்பளார் தோழர் இ. தம்பையா தலைமையில் அட்டன் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி ஆண்டு விழாவில் தோழர் செந்தில் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த 28 வருட காலத்தில் எமது கட்சி பல்வேறு நெருக்கடிகள் சவால்கள் மத்தியில் தொழிலாளி வர்க்கத்தின் மாக்சிச லெனினிசக் கட்சியாக செயலாற்றி வந்துள்ளது. தொடர்ந்து மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை வழிகாட்டும் மார்க்கத்தில் சகல தடைகளையும் தாண்டி முன் செல்வோம். ஒருபுறம் பேரினவாத ஒடுக்குமுறை தனது கரங்களை விரித்து வடக்குக் கிழக்கின் தமிழ்முஸ்லீம் மக்களை மட்டுமன்றி மலையகத்தமிழ் மக்களையும் இன மொழி பிரதேச அடிப்படையில் ஒடுக்கிவருகின்றது. இவ் இன ஒடுக்குமுறையுடன் ஏகாதிபத்திய சக்திகள் கைகோர்த்து வந்ததன் விளைவே இன்று வரை தொடரும் யுத்தமாகும். அதேவேளை பொருளாதார நெருக்கடிகள் மோசமடைந்து செல்கிறது. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் மக்கள் அவதியுறுகின்றனர். இதுவரை லாபம் தந்து வந்ததும் தொழில் வாய்ப்பு வழங்கி வந்ததுமான பெற்றோலியத்து துறையை இந்தியக் கம்பனிக்கு தாரை வார்த்ததன் மூலம் எரிபொருள் விலையேற்றமும் வேலை நிறுத்தமும் இடம்பெற வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. எதிர் காலத்தில் மேலும் பொருளாதார நெருக்கடிகள் மோசமடையப் போகின்றன. உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் காட்டும் பாதையில் செல்லும் மகிந்த சிந்தனையால் நாட்டின் பொருளர்தாரத்தை - தேசிய பொருளாதாரமாக மாற்ற முடியாது. எனவே மக்களின் கவனத்தை திருப்ப யுத்தத்தை நாடுவதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழி இல்லாத நிலையே வளர்ந்து வருகின்றது. ஆதலால் மக்கள் தமது பிரச்சினைகளுக்காகப் போராட வேண்டிய அவசியத்திற்கு வர வேண்டியே உள்ளது. அதற்குரிய ஒரே வழி வெகுஜனப் போராட்டப் பாதையில் மக்கள் அணிவகுப்பதேயாகும் என்றும் கூறினர்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ.தம்பையா தனது தலைமையுரையில் எட்டு மாதங்களுக்கு முன்பு மகிந்த சிந்தனை மிகவும் கவர்ச்சிகரமானதாகவே காட்சி கொடுத்தது. ஜனாதிபதி பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்ச மக்கள் மனங்களை அறிந்தவர், தெற்கிலிருந்து வந்தவர். ஜனநாயகம் தெரிந்தவர் மனித உரிமை அக்கறையாளர் தொழிலாளர்களின் நண்பன் என்றவாறு கூறப்பட்டது. ஆனால் இன்றை நிலை தான் என்ன? எல்லாவற்றிலும் உறுதியற்ற தடுமாறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். அவர் நம்பிய இந்தியாவும் கை கொடுப்பதாக இல்லை. நம்பத் தயங்கிய அமெரிக்காவும் முழு மனதோடு அவர் பக்கத்தில் இல்லை. அவரைச் சூழ உள்ளவர்களும் ஆக்கபூர்வமான விடயங்களை முன்வைத்து வழிநடப்பவர்களாக இல்லை. எல்லாம் மேல்புச்சு நடவடிக்கைகளும் பம்மாத்துக்களாகவுமே உள்ளன.

இந்நிலையிலே தான் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் சம்பள உயர்வுக்கான கூட்டு ஒப்பந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன், அருள்சாமி, வேலாயுதம் போன்போர் உறுதியான கூட்டான முடிவுகளுக்கு வர முடியாது ஒழித்து விளையாடுகிறார்கள். இவர்கள் ஒரு நாடகம் ஆடமுற்பட்டுள்ளனர். நேர்மையாக இருந்து ஆகக் கூடிய சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இறுதியில் முதலாளிகள் சம்மேளனத்திற்கு விட்டுக் கொடுத்து ஒரு சில ரூபாய் களை மட்டுமே பெறுவார்கள் என்றே நம்பப்படுகிறது. எமது பாட்டாளிவர்க்க புதிய தொழிற் சங்கமும் புதிய ஜனநாயக கட்சியும் 350/= ரூபா சம்பள உயர்வையே கோரிக்கையாக வற்புறுத்துகின்றது என்றும் கூறினார்.

மேலும் இவ் ஆண்டுவிழாவில் மலையகப் பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேச சபை உறுப்பினருமான ச.பன்னீர்செல்வம், கல்வியலாளர் சி.இராஜேந்திரன், புதிய மலையகம் வெ. மகேந்திரன், கல்வியலாளர் ஜே. சற்குருநாதன், குயில் தோப்பு மகேந்திரன் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

**வடக்கு கிழக்கில்.........**

1ம் பக்க தொடர்ச்சி

முன்பு புலிகளின் ஆயுதங்களைக் களைதல் என நீட்டி முழக்கிக் கொண்டு செல்கிறார்கள். இத்தகைய முழக்கங்களுக்குப் பின்னால் தேசப்பற்றும் இல்லை இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் பற்றிய அக்கறைகளும் கிடையாது. ஒரே குறிக்கோள் மக்களை இன மொழி மத உணர்ச்சிகளுக்குள் இழுத்து பாராளுமன்ற வாக்கு வங்கியை பாதுகாத்துப் பெருக்கிக் கொள்வதேயாகும்.

இவர்கள் ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத்தின் உள்ளார்ந்த பலவீனங்களை அடையாளம் கண்டு தமது நிலைப்பாட்டை வலுப்படுத்த நிற்கின்றனர். முற்றாக அரசாங்கத்தை ஜனாதிபதியை எதிர்க்காமலும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளாமலும் இருந்து கொண்டு காய்களை நகர்த்துவதிலேயே ஜே.வி.பி- ஹெல உறுமய பேரினவாத சக்திகள் இருந்து வருகின்றன.

இதன் மூலம் உண்மையில் இவர்கள் யாது செய்கிறார்கள். நாட்டை பேரழிவுக்குள் தள்ளி வரும் அரசியல் கடைப்புளித்தனத்தையே கையாளுகின்றனர். இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் இவர்கள் தேசிய இனங்களுக்கு மட்டும் எதிரிகள் அல்லர். சிங்கள மக்களுக்கு குறிப்பாகத் தொழிலாளர்கள் விவசாயிகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் எதிரானவர்களாகவே உள்ளனர். இந்த நிலை அதிக காலம் நீடிக்கப் போவதில்லை. இவர்களது சிகப்பு மஞ்சள் ஏமாற்றுக்கள் உடைந்து நொருங்கும் போது இவர்களது சுய அடையாளமும் சுய நிறமும் வெளி வரவே செய்யும். அப்போது பாராம்பரிய பாராளுமன்ற இடதுசாரிகளுக்கு சிங்கள உழைக்கும் மக்கள் படிப்பித்த பாடத்தை இந்த சிகப்பு, மஞ்சள் அரசியல் வாதிகளுக்கும் கற்றுக் கொடுத்தே தீருவார்கள்.

**மகிந்த சிந்தனை......**

1ம் பக்க தொடர்ச்சி

நடத்துவதற்கு பதிலாக தெற்கிலே இருக்கின்ற அமைப்புகளிடம் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தப்போவதாகக் கூறி சர்வகட்சி மாநாடுகளை நடாத்திக் கொண்டிருக்கிறார் மஹிந்த ராஜபக்ச. அரசியல் தீர்விற்கான யோசனைகளை வெறுத்து ஒதுக்கும் ஜே.வி.பி. ஹெல உறுமய என்பவற்றுடன் ஒருமைப்பாட்டை காண முடியாது என்பது தெளிவானதே. அரசியல் தீர்விற்கான யோசனைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழுவில் ஒற்றையாட்சியை வலியுத்தி அதிகாரப்பங்கீட்டை எதிர்த்து வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிரான நிலைப்பாடுடைய ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா போன்றவர்கள் இடம்பெற்றுள்ளனர். ஒருமைப்பாட்டைக் காண முடியாதவர்களுடன் ஒருமைப்பாட்டைத் தேடும் முயற்சிகளில் ஈடுபடுவது காலத்தையும் நேரத்தையும் வீணாக்கும் அர்த்தமற்ற செயலாகும். அத்துடன் காலத்தை இழுத்தடிக்கும் செயலாகுமாம்.

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை வெளிநாடுகள் தடை செய்வதாக வெளிவரும் செய்திகளால் தலை கால் புரியாமல் நடக்கும் நிலையிலேயே அரசாங்கத்தினரும், பேரினவாதிகளும் இருக்கின்றனர். ஆனால் வெளிநாடுகள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்து அரசியல் தீர்வு காண வேண்டும்மென்று கூறினால் அவர்களுக்கு கசப்பாக இருக்கிறது. அதே வெளிநாடுகள் புலிகளைக் கண்டித்தால் இப் பேரினவாதிகளுக்கு இனிப்பாகிறது.

தற்போது நாட்டில் வேலை நிறுத்தங்கள் அதிகரித்துள்ளன. அவை அராஜகமான வேலை நிறுத்தங்கள் என்று கூறப்படுகின்றன. சம்பள உயர்வு வேண்டியும், தனியார்மயத்தினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. அவை அராஜகமானவை என்று கூறமுடியாது. சாதாரண மனிதர்களின் தோழன் என்று கூறப்படும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வேலை நிறுத்தங்களுக்கு தீர்வு காணமுடியாதவராக இருக்கிறார். விலைவாசிகள் என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துள்ளன. அதனை பரிபாலிப்பதற்குகோ கட்டுப்படுத்துவதற்கோ எவ்வித திட்டமும் இல்லாமலே அரசாங்கம் இருக்கிறது.

எதிர்கட்சியிலிருக்கும் எம்.பிக்களுக்கு அமைச்சர் பதவிகளை கொடுத்து அவர்களை அரசுடன் சேர்த்துக் கொள்வதிலேயே ஜனாதிபதி மஹிந்த கவனம் செலுத்துகிறார். அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து கொண்டிருப்பதே மஹிந்த சிந்தனையின் சாதனை ஆகும். பட்டி தொட்டிகளில் நடைபெறும் திறப்பு விழாக்கள் எல்லாம் மஹிந்த சிந்தனையின் சாதனைகள் என்றே கூறப்படுகிறது. ஆனால் மக்களின் அடிப்படை நலன்கள் தேவைகள் எதுவும் கவனிக்கப்படவே இல்லை. சுனாமி நிவராணம் பற்றிய கதைகள் நின்று விட்டன.

மஹிந்த சிந்தனை என்பது எவ்விதத்திலும் பயன்தரும் பாதையில் பயணம் செய்ய முடியாத முட்டுச் சந்தியில் நகர முடியாது நிற்கிறது.

ஆனால் மக்கள் பயணம் செய்ய வேண்டிய பாதையும் பயணமும் தெளிவாகவே இருக்கிறது. ஆனால் அதற்கு தலைமை தாங்க இலங்கையின் முற்போக்கு இடதுசாரி ஜனநாயக சக்திகள் தயாராக இல்லை. இடதுசாரிகளின் ஒரு பிரிவினர் பாராளுமன்ற சந்தர்ப்பவாத சகதிக்குள் மூழ்கி மகிந்த சிந்தனையின் பிரசாரகர்களாக பதவி பட்டங்கள் பெற்று சுய ஈடேற்ற கூட்டமாக மாறி விட்டனர். ஏனைய இடதுசாரிகள் அரசுசார்பற்ற நிறுவனங்களின் சதி சூழ்ச்சி நடவடிக்கைகளுக்குப் பலியாகியுள்ளனர். நேர்மையான இடதுசாரிகளும் மாக்சிச லெனினிசவாதிகளும் மட்டுமே மக்கள் பக்கத்தில் நின்றுவருகின்றனர். அவர்களது தலைமைத்துவம் பலம் பெறுவதன் மூலமே மஹிந்த சிந்தனை என்ற பம்மாத்தை உடைக்க முடியும்.

சிலர் மகிந்தவின் இடத்திற்கு ரணில் வந்திருந்தால் எல்லாம் இன்ப மயமாக முன்னே சென்றிருக்கும் எனக் கூறமுற்படுகின்றனர். ரணில் இன்றைய பாழாகிப் போகும் பாராளுமன்ற ஆட்சிக்குப் புதியவரும் அல்ல மாற்றங்களைச் செய்யக் கூடியவரும் அல்லர். அல்லது யூ என். பி ஏதோ மறுவார்ப்புச் செய்யப்பட்ட மக்கள் சார்புக் கட்சியும் அல்ல. இலங்கையின் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட நாற்றமெடுக்கும் பாராளுமன்ற- நிறைவேற்று அதிகார ஜனாதிபது முறை ஆட்சியில் இந்த இரண்டு கட்சிகளும் கொழுக்கட்டையும் மோதகமும் போன்றவைகளேயாகும். உருவங்களில் வேறுபாடே தவிர உள்ளடக்கம் ஒன்றேயாகும். மகிந்த சிந்தனையும் ரணில் சிந்தனையும் ஒன்றேயாகும்.

எனவே மகிந்த சிந்தனையால் வேலை இல்லை. மக்களுக்குள்ள ஒரே வழி அரசியல் எழுச்சிப் பாதையில் அணிதிரள வேண்டியது தான். இல்லாதுவிடின் தொடர்ந்து ஏமாற்றுத்தனங்களில் அமிழ்ந்து கொள்ள வேண்டியது தான்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்